
வார இதழ்

WITH COMPLIMENTS

# ஆதவன்

ஒளி: 20
29.10.2000
விலை ரூபா 12.00
Registered as a Newspaper in Sri Lanka

ராவய வெளியீடு
ATHAVAN ආදවන්



நிமல் ராஜே..!
உன் மரணமொன்றும் மரணமல்ல,
மனிதங்கள் விழித்துக்கொள்ளும்
தருணம். இல்லாவிடில்
அதுவே மனிதத்தின் மரணம்!

# வாசகர் குரல்

ஆசிரியர் அவர்களுக்கு,

இப்பத்தியினை ஆதவன் 17ல் சர்வதேசிய அரசியல் களத்திலிருந்து என்ற பகுதியில் சகோதரர் ரதன் எழுதியிருந்த ஜெருசலத்திற்கான யுத்தம்? என்பதை தொடர்புபடுத்தி எழுத முயல்கிறேன்.

நவீன யுத்த தளபாடங்களுக்கு முன் இன்றுவரையும் பழைமை முறையினைக் கொண்டு ஒரு சமூகத்தின் வாழ்விற்காய் போராடும் களமாக ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனம் இருந்து வருகின்றது.

1800களின் இறுதிப் பகுதியில் "ஹர்ஸல்" என்ற யூத சிந்தனையாளனின் திட்டமாக வெளியிடப்பட்ட யூத நாட்டுருவாக்கம் 1948ல் பெரும் பகுதியினை நடைமுறைப்படுத்தியதாக அமைந்தது. பாரிய திட்டமிடலின் கீழ் பலஸ்தீன முஸ்லீம்களின் நிலங்கள் மட்டுமன்றி அவர்களும்கூட யூத நாட்டுருவாக்கச் சிந்தனையின் கீழ் அடிமைப்பட்டு அகதியாய் மாறி நிற்க, யு.என்.ஓவின் தீர்மானம் 181ன் படி பலஸ்தீனின் 70 வீத நிலப்பரப்பு யூதர்களுக்கு பகிரப்பட்டது இதன் பின்னான அரபு - இஸ்ரேல் சமரின் போது 78 வீதமான நிலம் யூதர்களால் ஆக்கிரமிக்கப்பட்டது. இறுதியாக தங்கள் பூமியை ஆக்கிரமமிப்புக்கு விட்டு விட்டு காஸா மற்றும் மேற்குக் கரையிலும் அரபு நாடுகளின் முகாம்களிலும் தமது வாழ்விடங்களை உருவாக்கிக் கொண்டனர்.

இன்றைய இஸ்ரேல் முதலாளித்துவ நாசகாரியான அமெரிக்காவின் மிகப்பிரதான பொம்மையாகவும் அதன் ஆயுதப் பரீட்சையக் களமாகவும் காணப்படுகிறது. தன் ஆயுதப்பரீட்சையின் களத்தினை எப்போதும் சமாதானம் ஏற்பட்டு விடாததாக வைத்திருக்கவே அந்த முதலளித்துவ சக்தி விரும்புகின்றது.

இவ்வாறு சமாதானம் போலியாகக் காண்பிக்கப்பட்டு மீண்டும் மறைத்துக் கொள்ளப்படும் பலஸ்தீன பூமியில் பி.எல்.ஓ.வின் தலைவர் "யஸீர் அறபாத்" கூட அமெரிக்க இஸ்ரேலின் போலி வார்த்தைகளையும் ஈசமான அதிகாரங்களையும் நம்பி தன் இனத்தையே காட்டிக் கொடுப்பவராக அவர்களின் விடுதலை வழி முறைகளை அழிப்பவராக மாறியதுதான் பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட கசப்பூட்டும் நிகழ்வாகும். என்றாலும் சமாதானப் பேச்சுக்களில் நம்பிக்கையிழந்து பல வருடம் அடிமைவாழ்வின் பின் பலஸ்தீன சகோதரர்கள் நவீன அணு ஆயுதங்களின் வைப்பான இஸ்ரேலுக்கு முன் வீதிக் கற்களை பதிலீடாகவும் வீதித்தீயினை தடையாகவும் ஆக்கிரமிப்பை முன்னேற விடாதும் நிராயுத பாணி யுத்தத்தினை மேற்கொண்டு வருகின்றனர்.

சகோதரர் ரதன் தனது பத்தியில் "ஜெருசலத்துக்கான யுத்தம் என பலஸ்தீனர்களை வர்ணிக்க முற்படுவதிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது" என்பது பலஸ்தீனர்கள் வெறுமனே ஜெருசலத்துக்கான அந்நிலம் நோக்கிய யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனரா? என்ற மாற்றுப் புரிதலை சில வேளைகளில் ஏற்படுத்தி விடுவது போல் உள்ளது.

நிச்சயமாகவே பலஸ்தீனர்களும் அவரிகளின் தற்காப்பு யுத்தமும் ஜெருசலம்.என்ற நிலம் தொடர்பானது மட்டுமல்ல. நிலத்தை விட உலக முஸ்லீம்களின் மூன்றாவது புனிதஸ்தலமான ஆக்கிரமிப்புக்குள்ளான "பைத்துல் முகத்தஸு" க்கான மீட்புப் போரே ஆண்டாண்டு காலமாய் தமது ஆளுமையின் கீழிருந்த சொத்து இன்னொரு அந்நியனால் பாழாவதை நீதித்துவத்தினை விரும்பும் எவனாலும் அங்கீகரிக்க இயலாதுதானே. முஸ்லீம்களின் கொள்கையின் இருப்பிடம் மீட்கப்படும் வரை அது தொடர்பான யுத்தமும் முற்படுத்தப்படல் இயல்பின் வழிதான்.

மேலே நாம் பேசிக் கொண்டது போலவே துப்பாக்கி ஏந்தி நவீன யுத்த சாதனங்களுடன் களத்தில் இருப்பதை விட மாறுதலாக பலஸ்தீனர்கள் இன்திபாழா எனும் கல்லெறிப் போராட்டத்தையே தங்களின் வழியாக நடாத்தி வருகின்றனர். கவச வானூர்தி குண்டுகளுக்கு முன் அவர்களின் கல்லெறிப் போராட்டம் எந்தளவு? எனவே இது போராட்டமா? தற்காப்பு யுத்தமா?

இவர்களுள்ளே ஆயுதங்களுடன் பல போராட்டக்குழுக்கள் உருவாகாமலுமில்லை. இவர்களை இல்லாமற் செய்ய சியோனிச அரசு எவ்வளவு முயன்றும் போராட்டமொன்றினை முழுமையாய் இல்லாதாக்க இயலாது என்பது அங்கும் மீறப்படவில்லை. சகோதரர் ரதன் குறிப்பிடும்போது "ஹமாஸ் அமைப்பினர் சமாதானப் பேச்சு வ்ார்த்தைகளை நிராகரித்தே வந்துள்ளனர். எனக் குறிப்பிடுகிறார். சமாதான முயற்சிகளில் இனி எவ்வித பயனுமில்லை, அவை வெற்றுக் காண்பியங்கள்தான் என்பதை உணர்ந்து விடுதலைக்கான ஒரே வழி அரசியல் ரீதியான அழுத்தம் பெறும் ஆயுதப்போராட்டமென்பதை உணர்ந்த பின்னரே ஹமாஸ் இதில் இறங்கியுள்ளது. மேலும் ஹமாஸ் ஈரானிய ஆதரவு கிடைக்கப்பெறும் அமைப்பல்ல. இதற்கு பலஸ்தீனத்தாயின் இரத்தம் தான் உரமாக இடப்படுகிறது. அத்துடன் இஸ்லாமிய உலகெங்கும் நன்றாக வளர்ந்துள்ள இஸ்லாத்தின் மீள் எழுச்சிக்காக இயங்கும் இஹ்வாறுல் முஸ்லிமின் ஆதரவுதான் கிடைக்கப்பெறுகிறது. அதேவேளை ஈரானிய ஆதரவு "ஹிஸ்புல்லாஹ்" எனும் போராட்டக் குழுவும் களத்தில் உள்ளது.

மற்றும் பலஸ்தீன விடுதலைப்போர் ஹமாஸின் தூண்டுதலிலே நடைபெறுவதல்ல. தன் சொந்த நிலத்திலே தன்னால் சுவாசிக்க, வாழ இயலாததை உணரும் எவனும் அதைப் பெற்றுக் கொள்ள முயல்வது. இயல்புதானே அதுதான் நியதியும் கூட இதற்கு பலஸ்தீனர்கள் கூட விதிவிலக்கல்ல. பலஸ்தீனர்களின் உணர்வுகளை ஒழுங்குபடுத்துவதாக அதை காலகட்டங்களின் தன்மைக்கொப்ப நகர்த்தும் ஊடகமாகவே ஹமாஸ் இருந்துவந்துள்ளது.

இவ்விடயத்தினை இங்கு சுட்டிக்காட்டுவது ஜனநாயக விரும்பிகள் சமத்துவமின்மையையோ, அநீதிகளையோ நேசிப்பவர்களாக இருப்பதில்லை என்பதற்கே. ஆதாவின் நம்பிக்கை மிகுதியான செய்திகளை ஸ்திர ப்படுத்துவதுடன் ஜனநாயக விரும்பிகளால் கூட இது வரவேற்கப்படலாம் என நாடுகிறேன்.

**ஏ.ஆர்.எப். ஹன்லளா.**

அன்பான ஆசிரியருக்கு

"ஆதவன்" இதழைத் தொடர்ந்து படித்துவரும் வாசகர்களில் நானும் ஒருவன், பளபளப்பும் நிறக்கலவைகளும் மோசமான கண்ணோட்டமும், கொண்ட பத்திரிக்கைகளும், வக்கிரக்கண்ணோட்டமும் மோசமான கலாச்சாரக் கொள்கைகளும் கொண்ட பத்திரிக்கைகளும் வணிக கலாசாரப் பத்திரிக்கைகளுமுள்ள நம்முடைய நாட்டில் ஆதவனின் வருகை நல்ல நம்பிக்கையைத் தருகிறது. அரசியல், சமுதாயம், புலம்பெயர்ந்த வாழ்வு, கலை இலக்கியம் என்பவற்றைப் பற்றி வெளியிடப்படும் கட்டுரைகள் தரமாகவே உள்ளன. இப்படி ஆதவனின் அபிமானியாகவும், ஆதவனின் வளர்ச்சியிலே நம்பிக்கையும் அக்கறையும் கொண்டவனென்ற வகையில் பின்வரும் ஆலோசனைகளை தெரிவிக்கின்றேன்.

1. மொழி பெயர்ப்புக் கட்டுரைகளை வெளியிடுங்கள். வருகின்றவை நன்றாகவுள்ளன. நீண்ட கட்டுரைகள் எப்போதாவது வரலாம். "தமிழ்த்தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்றுரை" என்ற கட்டுரையின் உள்ளடக்கம் நல்லது. அது "வளவளா கொளகொளா" நடையில் எழுதப்படுவது தவிர்க்க வேண்டும். சட்டம்பியார் பாணியில் கட்டுரை தொடங்கும் போது சென்ற கிழமை எழுதியது பற்றி இரண்டு பந்திகளில் சுருக்கமாக் கூறி கட்டுரை முடிவில் அடுத்த கிழமை வருவது என்ன என்ற ஒரு பந்தியில் கூறி முடிப்பதும் வாசிக்க அலுப்பைத் தருகிறது. இவை தேவையில்லை. இதைவிட சென்ற கிழமை இக்கட்டுரையில் பெரும்பகுதியை இடம்பிடித்த ஆறுமுக நாவலர் வாழ்க்கைக் குறிப்பும் படமும் அவசியந்தானா? இவற்றுக்கும் கட்டுரைக்கும் தொடர்பு என்ன? நாவலர் படம் ஓரளவு சரி. வாழ்க்கைக் குறிப்பு தேவையா?

2. கவித்தடாகம் எடுக்கப்பட்டது நல்லது. எப்போதாவது சிறந்த மொழி பெயர்ப்புக் கவிதைகளையோ, தரமான கவிஞர்களின் கவிதைகளையோ வெளியிடுங்கள். இது சிறுகதைகளுக்கும் அப்படியே ஏற்றது.

3. பேட்டிகளை தொடர்ச்சியாக வெளிவர்ச் செய்யுங்கள். இவை கருத்து மேடையாக இருப்பது நல்லது. புதிய தலைமுறையாளர் பேட்டி நல்லது. உதாரணம் மஞ்சுள வெடிவர்த்தனாவின் பேட்டி.


4. சாதனையாளர் பற்றிய சிறந்த கட்டுரைகளை இப்போதைய சந்ததியினருக்காக வெளியிடுவது வரவேற்கத்தக்கது. அப்படி வெளியிடுகிறீர்கள். அதைத் தொடருங்கள். ஆனால் இதற்கு தெரிவுமுறை அவசியம் சென்ற கிழமைப் பத்திரிக்கையில் லெனின், சேகுவேரா கட்டுரைகளோடு கண்ணதாசன் பற்றியும் ஒரு கட்டுரையும் வந்தது; இந்தக் கண்ணதாசன் பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன, அதோடு இக்கட்டுரை வாரப் பத்திரிக்கை ஒன்றில் போனகிழமை வெளிவந்திருக்கிறது. இதைத் தவிருங்கள், ஒரே கட்டுரையை பல பத்திரிக்கைகளுக்கு எழுதுவோரை தவிருங்கள்.

5. பெண்ணியம் பற்றிய கட்டுரைகள், தொகுப்புகள் ஆகியன யோசிக்க வைக்கின்றன. இவை தொடர வேண்டும். "சுதர்ஷினி"யின் தொகுப்பு முறை தெளிவாகவும் பொருள் சேர்ந்ததாகவும் உள்ளது.

2. எஸ்.பொ.வின் இரு கிழமைக் கட்டுரையின் இரண்டு பக்கங்களை பாழாக்கி விட்டீர்கள். தனக்குத் தெரியாத விஷயங்களிலே மூக்கைத்துளைத்து பல தவறான கருத்துக்களை விஷமத்தனமாக எழுதியுள்ளார். இக்கட்டுரையில் வருவது போல அடைப்புக்குறிக்குள் ஆங்கில வார்த்தைகள் வைப்பதைத் தவிருங்கள். தமிழ் மூத்த மொழி, கூடிய வரை எந்த வேற்று மொழிவார்த்தைக்கும் சமமான கருத்துக்கள் சொல் கொண்ட மொழி. பிறமொழி வார்த்தைகளை தமிழில் அப்படியே சொல்லுகின்றன அடிமைப்புத்தி கேவலமானது. ஆதவன் இதற்கு எதிராக இயங்குவது காலத்தின் அவசிய தேவையாகும். இதனால் "பயோர்டேற்றா" என்பதை "சுயகுறிப்பு" என மாற்றுமாறு உங்களை வேண்டுகின்றேன்.

ஆதவனின் நிறைவுகள் அதிகம். குறைவுகள் குறைய. இக்குறையை நீக்கி ஆதவனைப் பூரணமாக ஒளி வீசச் செய்யுங்கள் நாம் உங்களுக்கு ஆதரவளிப்போம்.

**க.அருணன்.**
**கொட்டாஞ்சேனை.**



## செய்தியாளர் நிமல்ராஜனின் அகால மரணத்தை நினைத்து என் பேனா கசிந்தவை

## நீ எழுவிப்பாய்

நலிந்து போன
மனிதம்
மனிதர்களாலேயே கசாப்பு
தொக்கிகளில் தொலுவைக்கும்
உக்கிரம்,
சந்திரனில் ஒரு காலும்
மூர்க்கத்தனத்தில் இரு காலும்
வைக்கின்றோம், என்பது
அன்றல்ல, .
இன்ற நீங்கள் கரைத்து விட்ட
எழுத்தாளனின் மையே சான்று,
செய்திச்சுவாசம் செய்த
பூவக்கு குண்டு வைக்க எப்படி
மனம் வந்தது?
குருட்டு வண்டுகளே!
இன்று மனிதம் நொந்தது.
குருதிச் சதுரங்கம்
ஆடத் தெரியாதவன்
வாழ்வில் சதிரங்கம் ஆடிவிட்டீர்களே!
இது போன்று
குகைகளில் நெஞ்சு பிழந்த
நெஞ்சங்கள்,
எல்லாம் சிங்கங்களே!
மீசைகளில் அல்ல,
முகங்களிலே
கரிபூசிக் கொள்ளும் நீங்கள்,
அசிங்கங்களே!
நிமல் ராஜே..........
உன் மரணமொன்றும் மரணமல்ல!
மனிதங்கள் விழித்துக்கொள்ளும்
தருணம்.
இல்லாவிடில்
அதுவே மனிதத்தின்
மரணம் !!

—முத்துவேல் தவா

# 83 வெலிக்கடை சிறைச்சாலை படுகொலையை நினைவுபடுத்தும் பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் தாக்குதல்

## 24 இளைஞர்கள் படுகொலை 40 இளைஞர் படுகாயம்

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் ஆவ்வூர் கிராமவா சிகளால் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். இச் சம்பவம் 1983 வெலிக்கடை சிறையில் அரச பாதுகாப்பில் இருந்த 53 தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை எம் கண்ணெதிரே நிறுத்தியுள்ளது.

பயங்கரவாத சட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு பகுதிகளில் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களும் மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேறி பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்த வயது குறைந்த புலி உறுப்பினர்களும். இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இப்புனர்வாழ்வு நிலையத்தில் 84பேர் புனர்வாழ்வு அளிப்பதற்காக வைக்கப்பட்ட உறுப்பினர்களே. இவ்வாறு கொலை செய்யப்பட்டும் காயப்ப டுத்தப்பட்டுமுள்ளனர்.

கடந்த சில தினங்களாக இந் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களுக்கும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கும் இடையில் நிலவி வந்த அமைதியின்மையே இச்சம்பவத்திற்கு காரணமாகும். இதை தொடர்ந்தே புதன் கிழமை காலை இம் முகாம்மை சுற்றி வளைத்த 1500க்கும் மேற்பட்ட கிராம வாசிகள் கூரிய ஆயுதங்களுடன் முகாமில் நுழைந்து நிராயுத பாணிகளான அப்பாவி இளைஞர்களை அடித்து குரூரமாக கொலை செய்தும் படுகாயப்படுத்தியும் உள்ளனர். 40பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 20 பேரின் நிலைமை கவலைக்கிடமானதாக உள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள பக்ஸ் கடிதத்தில் ஒரு நாகரிக சமூகத்தில் நடைப்பெறக்கூடாத சம்பவம் நடந்துள்ளது என அவர் கூறியிருப்பதுடன் அரசினது பாதுகாப்பு படையினரின் நேரடி பாதுகாப்பில் இருந்தவர்களை இவ்விதம் காலத்துக்கு காலம் மோசமாக தாக்கப்படும் சம்பவம் நடைபெற்று வருவது கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும் என்றும் தெரிவித்துள்ளார். வெளிக்கடைகளுத்துறை தற்போது பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலைய தாக்குதல் இவ்விதமான சம்பவம் மற்றும் ஏனைய முகாம்களிலும் வாழும் கைதிகள் உயிர் அபாயங்களை எதிர் நோக்கிய நிலையிலேயே வாழுகின்றமையையும் அவர் தனது தொலைநகல் செய்தியில் சுட்டிக் காட்டியுள்ளர்.

இவ்வாறு தமிழ் மக்கள் தாக்கப்படுவதும் கைது செய்து தடுத்து வைக்கப்படுவதையும் நாட்டில் நடைபெறும் யுத்த மோதல்களின் வெளிப்பாடு என்று கூற முடியாது. இது சிங்கள மக்களிடையே பௌத்த பேரினவாதிகளால் உருவாக்கப்பட்ட இனக்குரோதமே ஆகும். இது தொடர்ந்து செல்லுமேயானால் தமிழ் மக்கள் அந்நியப்பட்டு தமக்கு தாமே பாதுகாப்பு தேட வேண்டிய நிலை உருவாகும் என்பதில் ஐயமில்லை.

## ஞாயிற்றுக் கிழமையை துக்க தினமாக அனுஷ்டிப்போம்

பெ.சந்திரசேகரன் : பா.உ
தலைவர் : மலையக மக்கள் முன்னணி

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் நிராயுதபாணியான அப்பாவி தமிழ் இளைஞர்கள் மிருகத்தனமாகக் கொலை செய்யப்பட்டுள்ளதால் குமுறி போயுள்ள தமிழ்மக்களின் மன வேதனைக்கு வடிகாலாக எதிர்வரும் ஞாயிற்றுகிழமையை முழு மலையக மக்களும், துக்கதினமாக அனுஷ்டிக்க வேண்டுமென மலையக மக்கள் முன்னணி வேண்டுகோள் விடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் பெ. சந்திரசேகரன் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் செறிவாக வாழுகின்ற பிரதேசத்தில் இச் சம்பவம் நடந்துள்ளதால் மக்கள் அதிர்ச்சியினால் ஸ்தம்பித்துப்போயுள்ளனர். நாட்டின் பல்வேறு இடங்களிலிருந்தும் வரும் சோக செய்திகளும் எம்மோடு தொடர்பு கொள்பவர்களின் நெஞ்சத் துடிதுடிப்பும் மனதை பிழிகின்றன.

அப்பாவி பாலகர்கள் மிருகங்களை விடவும் கேவலமாக கொலை செய்யப்பட்டதற்கு இவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லுவதால் எந்த பயனுமில்லை என்ற நிலையில் தமிழ் மக்களோடு நாமும் செயலிழந்து நிற்கின்றோம்.

எனவே எதிர்வரும் ஞாயிற்றுகிழமையை மலையக மக்களுட்பட அனைத்து தமிழ் மக்களும் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விட்டு துக்க தினமாக அனுஷ்டிப்பதற்கு, மலையகத்திலள்ள அனைத்து தொழிற்சங்கங்களினதும், சமூக சேவை நிறுவனங்களினதும் பங்களிப்பினை கோருவதாகவும் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ. சந்திரசேகரன் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஐ.தே.கட்சிக்கு வாக்கு சேகரிக்க மாத்திரமே இ.தே.தோ.தொ.சங்கம்

கே.வேலாயுதம்

ஐ.தே.கட்சி மலையகத்தில் வெற்றியீட்டுவதற்கு ஒரு நிலையான அடித்தளத்தை அமைத்து கொடுத்திருப்பது இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கமே ஆகும். இவ்வாறான முக்கியமான தொழிற்சங்க அமைப்பு ஐ.தே.கட்சியின் தலைமை பீடத்தினால் புறக்கணிக்கப்பட்டு அதன் அங்கத்தினர்களையும் உத்தியோகத்தர்களையும் அநாதைகளாக விட்டிருப்பது மிகவும் வேதனைக்கும் கண்டனத்திற்கும் உரியதொன்றாகும் என ஐ.தே.கட்சியிலிருந்து தனது பதவியை இராஜினாமா செய்த இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொர்து செயலாளர் கே. வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் ஐ.தே.கட்சி வாக்குகளை சேகரிக்க மாத்திரமே இலங்கை தே.தோட்டத் தொழிலாளர் சங்கத்தினை பயன்படுத்துவதும் தேர்தல் முடிந்தவுடன் அதனை ஓரம் கட்டி புறக்கணிப்பதும் நீண்ட கால செயற்பாடாகவே இருந்து வந்துள்ளது.

1994ம் ஆண்டுக்குப் பின்பு கட்சியின் அங்கத்தவர்களுக்கு மாத்திரமே எதிர்கால அரசியலில் முக்கிய இடம் வழங்கப்படுமெனவும் சிறுபான்மை மக்கள் உயர் நிலைக்கு கொண்டு செல்லப்படுவார்கள் எனவும் ஐ.தே.கட்சியின் தலைமை பீடம் பகிரங்க மேடைகளில் உறுதி மொழி அளித்து இன்று அந்த உறுதி மொழி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் நான் போட்டியிட கேட்ட போது போட்டியிட இயலாமைக்கான காரணத்தைத் தலைவர் உட்பட முக்கியஸ்தர்களுக்குத் தெளிவுபடுத்தியதன் பின்பு தேசிய பட்டியலில் எனக்கு இடம் தர முடிவு செய்தீர்கள். பட்டியல் தயாரான பின்பு பொதுச் செயலாளர் காமினி அத்துகோரளையை சந்தித்து உரையாடியபோது எனது பெயரை வெறுமனே பெயரளவில் குறிப்பிட வேண்டுமென்பதற்காகவா எனது பெயரை சேர்த்து கொண்டீர்கள் என கேட்ட போது, அதற்கு இம்முறை உங்களை தேசிய பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்வோம் என உறுதி மொழி கூறினார். ஆனால் அவ்வாக்குறுதிகள் அனைத்தும் இன்று காற்றோடு பறக்க விடப்பட்டு மற்றைய தொழிற்சங்க உறுப்பினர்களுக்கு அவ்விடம் வழங்கப்பட்டுள்ளது. மலையகத்தில் சிறுபான்மையினர் மத்திய மாகாணத்துக்கு அடுத்ததாக உள்ள பதுளை மாவட்டத்தில் ஐ.தே.க. வெற்றி பெற்றுக் கொள்ள சிறுபான்மையினர் அதிகளவில் வாக்களித்து உள்ளனர். இருப்பினும் இம்மாவட்டங்களிலிருந்து மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்த தேசிய பட்டியல் மூலம் ஒரு சிறுபான்மை இனத்தவரை கூட தெரிவு செய்யாது இருப்பது சிறுபான்மை மக்களுக்கு ஐக்கிய தேசிய கட்சி செய்துள்ள ஒரு பாரிய துரோகமாகும்.

இந்த நிலைமைகள் தொடர்வதால் ஐ.தே.க. உயர் பீடமான செயற்குழுவில் அங்கத்தவராக இருப்பது எந்த வகையிலும் எமது சமூகத்துக்கு பயன்பட போகும் ஒன்றல்ல என்பதை உணர்ந்து இப் பதவியில் ஒட்டிக் கொண்டிருப்பது அர்த்தமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கும் ஊவா மாகாண சபை அமைச்சர் முருகன் சச்சிதானந்தத்திற்கும் இடையில் கருத்து மோதல்

ஊவா மாகாணசபையின் கடந்த மாத கூட்டத் தொடரின் அறிக்கையை மாகாணசபை அமர்வின் போது கிழித்தெறிந்த ஊவா மாகாணசபை சுற்றுலா, தமிழ்கல்வி, இந்து கலாச்சார அமைச்சர் முருகன் சச்சிதானந்தம், இ.தொ.க. தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடன் கலந்தாலோசித்து இறுதி முடிவை எடுக்கும் வரை மீண்டும் இச் சபைக்குள் காலடி எடுத்து வைக்க மாட்டேன் எனக் கூறிச் சென்றுள்ளார். சபை தொடங்கியது முதல் 45 நிமிடங்கள் உணர்ச்சி வசமாக உரையாற்றிய சச்சிதானந்தன் பதுளை மாவட்டத்தில் பாராளுமன்றத்திற்கான தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோனதற்கு சதித் திட்டமே காரணம் என தெரிவித்துள்ளனர்.

இச் சதிக்கு ஊவா மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதியொருவர் நேரிடையாக சம்பந்தப்பட்டுள்ளார் அவர் எனவும் கூறியுள்ளார்.

## மின்சாரக் கட்டணம் அதிகரிக்கலாம்

மின்சாரக் கட்டணம் வெகு விரைவில் அதிகரிக்கப்படவிருக்கின்றது. நூற்றுக்கு பத்து அல்லது பதினைந்து வீதத்தால் இது அதிகரிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பாலும் டொலரின் பெறுமதி கூடுவதாலும் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது.

மின்சார உற்பத்திக்கான நீர் தேக்கங்களில் தண்ணீர் குறைந்ததன் காரணமாக மின் உற்பத்தியந்திரங்களை மின்சார சபை அதிகமாக மின் உற்பத்திக்கென உபயோகிக்க வேண்டி ஏற்பட்டதால் மின்சார சபைக்கு அதிகளவிலான செலவு ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் மின்சார சபைக்கு அதிகமான செலவுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலைக்கு கண்டனம் தெரிவித்து சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் புதன் கிழமை நண்பகல் (25.10.2000) கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக எதிாப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

## பத்திரிகையாளர் நிமல்ராஜன் மரணம்:

# ஒரு தற்காலிக பின்னடைவேயன்றி வெற்றிடமல்ல!

**செந்தணலோன்**

யாழ் குடாநாட்டில் சுட்டுக் கொல்லப்பட்ட பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலைச் சம்பவமானது தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான ஒரு அச்சுறுத்தல் நடவடிக்கை மட்டுமல்ல இந்த நாட்டில் இனிவரும் காலங்களில் ஊடகங்கள் மீதான நெருக்குதல்கள், கருத்துச் சுதந்திரம் மீதான ஜனநாயக மறுதலிப்புகள் எவ்வாறு இருக்கப் போகிறது என்ப தற்கான முதல்வேட்டு.


இந்த நாட்டின் ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் கட்டியெழுப்பப் போவதாக மக்கள் ஆணையைக் கோரி கடந்த 6 வருடங்களாக பெரும் யுத்தப் பேரழிவுகளையும், பொருளாதார சீரழிவுகளையும் மட்டுமே உருவாக்கி விட்டு மீண்டும் தேர்தல் வன்முறைகள் திட்டமிடப்பட்ட மோசடிகள் என்பவற் றிற்கு ஊடாக ஆட்சியைக் கைப்பற்றிய பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச் சரவையை நியமித்த அன்றைய தினமிரவே பத்திரிகையாளர் நிமலராஜன் சுட்டுக்கொல்லப்பட்டார்.

வடபுலத்தின் கள நிலவரங்களை, சமகால நிகழ்வுகளை, ஜனநாயக மறுதலிப்புகளை, ஆயுதக்குழுக்கள் அரச படையினரின் அட்டகாசத்தை இதையெல்லாவற்றையும் விட அண்மைய தேர்தல் காலங்களின் போது இடம் பெற்ற வன்முறைகள் வாக்களிப்பு மோசடிகளை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் வெளிக் கொணர்ந்த பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் இந்த நாட்டின் எதிர்கால ஊடகத்துறையினர் மீதான அச்சுறுத்தலை தெளிவாக கோடிட்டு காட்டி நிற்கிறது.

ஆளும் பொதுஜன ஐக்கிய


> வடபுலத்தின் கள நிலவரங்களை, சமகால நிகழ்வுகளை, ஜனநாயக மறுதலிப்புகளை, ஆயுதக்குழுக்கள் அரசபடையினரின் அட்டகாசத்தை இதையெல்லாவற்றையும் விட அண்மைய தேர்தல் காலங்களின் போது இடம்பெற்ற வன்முறைகளை வாக்களிப்பு மோசடிகளை உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் வெளிக் கொணர்ந்த பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் இந்த நாட்டின் எதிர்கால ஊடகத் துறையினர் மீதான அச்சுறுத்தலை தெளிவாக கோடிட்டு காட்டி நிற்கிறது.

முன்னணியின் கடந்தகால ஆட்சியின் போது இடம்பெற்ற மிக மோசமான மனித உரிமைமீறல் நிகழ்வுகளான செம்மணி மனிதப்புதைகுழி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசாமி பாலியல் வல்லுறவுக் கொலை உட்பட முக்கிய சம்பவங்களை அவ்வப்போது செய்தி ஊடகத்துறைக்கு



துணிச்சலுடன் வழங்கிய பெருமை நிமலராஜனையே சாரும்.

இதையெல்லாம் விட இந்த தாக்குதல் சம்பவமானது வெறுமனே நிமலராஜனை மட்டும் இலக்குவைத்து தொடரப்பட்ட ஒரு படுகொலைச் சம்பவமாகக் கருதமுடியாது. ஏனெனில்



றோஹண குமார



ரிச்சட் டி சொய்சா



ராஜினி திராணகம

கொலையாளிகளின் இலக்கு நிமலராஜனின் குடும்பத்தினருமாகும். அத்துடன் இந்த படுகொலைச் சம்பவத்தை நிமலராஜனின் குடும்பத்தினரையும் சேர்த்து மிகக் குரூர மான முறையில் செய்வதன் மூலம் வடக்கு கிழக்கு நிலைவரங்களை வெளியிடும் செய்தியாளர்கள் மீது ஒரு பெரும் அச்சுறுத்தலைக் கொடுப்பதேயாகுமென்றே ஊடகத்துறை யினர் சந்தேகம் கொண்டுள்ளனர்.

ஏனெனில் நிமலராஜன் கூரிய கத்தியால் வெட்டப்பட்ட பின்னரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அத்துடன் அவரின் தந்தையார் கூரிய கத்தியால் வெட்டப்பட்டுள்ளார். தாயார் மற்றும் இன்னுமொரு பத்து வயதுச் சிறுவன் ஆகியோர் கிரனைட் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். ஆகவே இதுவொரு உளவியல் தாக்கத்தை உண்டு பண்ணும் குரூரமான அரசியல் படுகொலையாகும்.

நிமலராஜனின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக பல்வேறு ஊகங்கள் குற்றச் சாட்டுக்கள் வெளிக்கிளம்பியுள்ளன. சுதந்திர ஊடக இயக்கமும், மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) யும் இச்சம்பவத்திற்கு ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி) யே பொறுப்பேற்க வேண்டுமென குற்றஞ்சாட்டியுள்ளன.

அதேநேரம் இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லையென்று ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி) மறுப்பு தெரிவித்துள்ளது. நிமலராஜன் படுகொலை தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்று கோரியுள்ளது.

இவ்வாறே நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பாக புதிய ஊடகத்துறை அமைச்சர் அனுரா பிரியதர்சன ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கா நிமலராஜன் கொலை தொடர்பாக விசாரணையொன்றுக்கு உத்தர விட்டுள்ளார். ஆனால் இந்த நாட்டில் இவ்வாறான சம்பவங்களுக்கு நியமிக்கப்படும் விசாரணைக் குழுக்கள் கடந்த காலங்களில் எவ்வாறு சுதந்திர மாகச் செயற்பட்டன என்பது ஒன்றும் தெரியாத விடயமல்ல.

ஐக்கிய தேசியக் கட்சியின் அப்போதைய ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தின் போது தென்னிலங்கையில் கட்டவிழ்த்து விடப்பட்ட மனிதப்படுகொலைகளை சர்வதேசத்திற்கு வெளிக்கொணர்ந் ததிற்காக பத்திரிகையாளர் ரிச்சட் டி சொய்சா கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

ரிச்சர்ட் டி சொய்சாவிலிருந்து ஆரம்பமான பத்திரிகையாளர் மீதான படுகொலைச் சம்பவமானது மனித உரிமை ஆர்வலரும் ஊடகவியலா ளருமான குகமூர்த்தியை பலியெடுத்த இச்சம்பவத்திற்கும் கொழும்பிலிருந்து செயற்படும் தமிழ் இயக்கமொன்றிற்கும் தொடர்பிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

இதனையடுத்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் வெள்ளவத்தையில் வைத்து "தினமுரசு" பத்திரிகையின் ஆசிரியரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி) யின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரமேஷ் நடராஜா சுட்டுக் கொல்லப்பட்டார். நுகேகொடையில் வைத்து "சட்டன" ஆசிரியர் ரோஹண குமார சுட்டுக் கொல்லப்பட்டார். வவுனியாவில் வன்னி ஒலிபரப்புச் சேவையின் ஊடகவியலாளர் அருள் சுட்டுக் கொல்லப்பட்டார். இறுதியாக யாழ் குடாநாட்டிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்த நிமலராஜனின் குரல்வளை அறுக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையிலுள்ள பத்திரிகையாளர்கள் வெறுமனே அரசியல்வாதிகளினதும், படையினரதும் அச்சுறுத்தலுக்கு மட்டுமே உட்படுகின் றனர். ஆனால் வடக்கு கிழக்கிலுள்ள பத்திரிகையாளர் அரசபடையினரதும் அச்சுறுத்தலை மட்டுமன்றி தமிழ்ழ விடுதலைப்புலிகள் உட்பட அங்கு நிலை கொண்டுள்ள அனைத்து ஆயுதக் குழுக்களினதும் நெருக்குதல், மிரட்டல் என்பவற்றுக்கு மத்தியிலேயே வாழவேண்டிய நிலை கடந்த இரு தசாப்தகாலமாக தொடர்ந்து வருவதையே காணமுடிகிறது.

அதேநேரம் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து தலைநகர் கொழும்பில் சிங்கள தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றுபட்டு நடத்திய ஆர்ப்பாட்டம் பெருவெற்றியைக் கொடுத்துள்ளதுடன் ஊடகவியலாளர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளதெனலாம். இந்த ஆர்ப்பாட்டத்தில் சிங்கள தமிழ் அரசியல் வாதிகளும் பெருமளவில் கலந்து கொண்டு தமது அதிருப்தியை வெளிக்காட்டியுள்ளனர். அத்துடன் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து வடக்கு கிழக்கிலும் முன்னரை விட புதியதோர் மக்கள் விழிப்புணர்ச்சி உருவாகியுள்ளதையும் காணமுடிகிறது. அதன் ஒரு வெளிப்பாடே வடக்கு கிழக்கில் நிமலராஜன் படுகொலையைக் கண்டித்து இடம்பெற்ற கண்டனப் பேரணிகளும், ஹர்த்தால் நிகழ்வுகளுமாகும்.

யாழ் குடாநாட்டில் இருந்து வடக்கு கிழக்கின் மனித அவலங்களை கொடூர நிகழ்வுகளை வெளியுலகிற்கு கொண்டு வந்த ஒரே காரணத்திற்காக சுட்டுக் கொல்லப்பட்ட நிமலராஜனுக்கெதிராக நீட்டப்பட்ட கொலைவெறி பிடித்தவர்களின் துப்பாக்கி இன்றுமொரு பத்திரிகையாளனுக்கெதிராக நீட்டப்படுவதற்கு முன்னர் அனைத்து ஊடகவியலாளர்கள் மத்தியிலான ஒரு ஒருமைப்பாடே இன்றைய தேவையாகும்.

"நிவேதா" என்ற புனைபெயரில் யாழ் குடாநாட்டின் மனித அவலங்களை போர்க்கால நிகழ்வுகளை ஆதவனில் வெளிக்கொணர்ந்த பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலைச் சம்பவமானது குடாநாட்டின் மனித அவலங்களை அரசபடைகளினதும், ஆயுதக்குழுக்களினதும் அடாவடித்தனங்களை வெளிக்கொணர்வதற்கான ஒரு தற்காலிக பின்னடைவேயன்றி வெற்றிடமல்ல.

ஆதவன்

இல-83, பிலியந்தல வீதி மஹரகம

தொலைபேசி எண் - 851672, 851814

விநியோகப் பிரிவு - 842064

தொலைமடல் - 851814

### வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமைம ஆதவனுக்குண்டு.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

# ஜனநாயகவாதிகளால் ஜீரணிக்க முடியாத மரணம்

துணிச்சல் மிகுந்த ஊடகவியலாளரான மயில்வானம் நிமல்ராஜன் கடந்த 19ம் திகதி கருத்தை கருத்தால் வெல்ல முடியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். வடபுல மக்களின் துன்பதுயரங்களை சோக நிகழ்வுகளை கண்ணீர் நிறைந்த காவியங்களை வெளிஉலகிற்கு கொண்டு வருவதில் துணிச்சலுடன் செயல்பட்டுள்ளார். இலங்கையின் வடபுலமான யாழ்குடா நாடு இருண்ட பிரதேசமாகவே இருக்கின்றது. அங்கு என்ன நடக்கின்றது என்பதை எவரும் அறியமுடியாமல் இருந்தது. யாழ்குடாநாட்டில் வாழும் மக்களின் அவலங்களைக்கூட பாராளுமன்றத்தின் கதிரைகளை அலங்கரிக்கும் தமிழ் அரசியல் வாதிகளால் எடுத்து ஆணித்தரமாக இடித்துரைக்க முடியாத நிலையில் இருக்கின்றனர். ஆனால் அரசியல் வாதிகள் செய்யாததை நிமல்ராஜன் தனது அசாத்திய துணிவாலும் பேனாமுனையாலும் செய்து முடித்துள்ளார். இவற்றால் அவருக்கு கிடைத்த பரிசு துப்பாக்கி குண்டு. இவ்வாறான படுகொலைகளினால் பேனாவின் வலிமையை தலைகுனிந்திட வைக்க முடியுமா? உண்மைகளை மூடி மறைத்திட முடியுமா? ஜனநாயகம் என்பது வெறும் வாயளவில் மட்டும் பேசுவதாக இருக்கக் கூடாது. அது செயல் வடிவிலும், மற்றவர்களுடைய மாற்றுக் கருத்துக்களையும் ஜீரணிக்கக் கூடியதாக இருக்க வேண்டும், அப்போது தான் ஜனநாயகம் பாதுகாக்கப்படும். நிமலராஜன் கதைத்தது, எழுதியது எல்லாம் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காகவே. ஜனநாயகத்திற்கு புறம்பாக அவர் செயல்படவில்லை. நிமல்ராஜன் மரணம் ஜனநாயகத்திற்கு பேரிழப்பாகும். ஜனநாயக வாதிகளால் இதனை ஜீரணிக்க முடியாது.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று வந்த தமிழ் இளைஞர்களில் 25 பேர் கிராமவாசிகளால் தாக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளனர். இது மீண்டும் 83 வெலிக்கடையை ஞாபகம் ஊட்டுகின்றது. பாதுகாப்பு படையினர் சூழ்ந்திருக்க இக் கோரச் சம்பவம் நடைபெற்று இருக்கின்றது. இச்சம்பவம் நடைபெறும் பொழுது பாதுகாப்பு படையினர் பாதுகாப்பை வழங்கத் தவறியுள்ளனர், விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து சரணடைந்தவர்களே இவர்களில் அதிகமாக இருந்துள்ளனர். சரணடைந்தவர்களுக்கு இந்தக் கதியென்றால், ஏனையவர்களின் நிலை? நாட்டுமக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சாரும். எனவே இவர்களின் பாதுகாப்பை இத்துடன் சம்பந்தப்பட்டோர் வலுப்படுத்தியிருக்க வேண்டும். இந்தப் பொறுப்பில இருந்து இவர்கள் விலகி நின்றுள்ளனர். இதற்குரிய விசாரணையை அரசு உடன் மேற்கொள்ள வேண்டும். ஏனைய விசாரணைகள் போல் இதுவும் காலம் தாழ்த்தாமல், தட்டிக்கழிக்காமல் அரசு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இப்படி நடைபெற்றால் தான் தமிழ் மக்களுக்கு அரசின் மீது நம்பிக்கை ஏற்படும். பாராளுமன்றத்தில் இருக்கும் தமிழ் கட்சிகள் இது விடயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

ஆசிரியர்.



விக்டர் ஐவன் எழுதுகிறார்

# நாடாளுமன்றத்திற்கான கௌரவத்தை உறுதிப்படுத்துவதில் சபாநாயகர் எதிர்நோக்கும் சவால்கள்

நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையொன்றை ஏற்படுத்திக் கொண்டதன் பின்னர், மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருந்த அரச அதிகாரம் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களுடன் கூடிய ஜனாதிபதியொருவரின் கைகளில் அதனை ஒப்படைத்ததன் பின்னர் ஜனாதிபதிக்கும்- பாராளுமன்றத்திற்குமிடையே அதிகாரப் பகிர்வொன்று ஏற்பட்டிருந்தாலும், கூட நாட்டில் மிக மேல்நிலையான ஸ்தாபன முறையொன்றாகக் கருதப்படுவது பாராளுமன்றமேயாகும். அது பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுடன் கூடிய சட்ட அமைப்புச் சபையொன்றாக இருப்பதுடன், நாட்டுக்கு ஏற்ற கொள்கைகள் எவையென்பதை தீர்மானித்து, முக்கிய சட்டங்களை வகுத்துக் கொள்ளும் சட்ட அமைப்புச் சபையாகவும் அது செயற்படுகின்றது.

எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்றப் பிரதிநிதியொருவரான அநுராபண்டார நாயக்கா அவர்கள் அரசாங்கக் கட்சியினது ஆதரவோடு சபாநாயகராக தெரிவாகியிருப்பது பாராளுமன்றம் என்ற இந்த அரச ஸ்தாபன அமைப்பு மோசமான சீரழிவுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒரு சூழ்நிலையிலேயாகும். பாராளுமன்றத்திற்கே உரிய தனித்துவம் சம்பந்தமான விடயங்களில் ஏதும் முறைகேடுகள் ஏற்பட்டிருக்குமாயின் அதைச் சரிப்படுத்தி பாராளுமன்றத்திற்கான கௌரவத்தைப் பெற்றுக் கொடுப்பது புதிய சபாநாயகரின் பொறுப்பாகும். புதிய சபாநாயகரினது வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் முக்கிய அம்சங்களும் அவையாகவே இருக்கும்.

பாராளுமன்றமானது பொதுமக்கள் வாக்கெடுப்பொன்றின் மூலம் தெரிவாகும் பிரதிநிதிகளுடன் கூடிய பிரதான அரச ஸ்தாபனமாகும். இருந்தாலும் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் பிரதிநிதிகளுள் எவரேனும் பலாத்காரத்துடன் கூடிய வாக்குக் கொள்ளையடிப்பொன்றின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்களேயாயின் அவ்வாறான பிரதிநிதிகளுடன் கூடிய ஒரு ஸ்தாபனம் உன்னதமான கௌரவமான ஒன்றாக இருக்க முடியாது.

பாராளுமன்றத்தின் கௌரவத்திற்கு இழுக்கை ஏற்படுத்தும் இவ்வாறான நபர்களை வெளியேற்றுவதற்கான ஒரு வழிமுறையொன்று மிக அத்தியாவசியமாக இருப்பதோடு அவ்வாறானவர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவாவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படாமல் தடுத்துக் கொள்வதும் சபாநாயகருக்கான முக்கியமான பொறுப்பாகும். வெறுமனே பாராளுமன்றத்தை சீரான முறையில் முன்னெடுத்துச் செல்வதன் மூலம் மட்டும் சீர்குலைந்து போயுள்ள பாராளுமன்றத்திற்கான கௌரவத்தை மீளப் பெறமுடியாது. அதனை ஒழுங்குபடுத்தி செய்யவும் முடியாது. பாராளுமன்றத்திற்கான கௌரவம் சம்பந்தமாக மிக முக்கிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ள மேற்கூறப்பட்ட இம் முக்கிய பிரச்சினைக்கு ஏற்ற தீர்வொன்றை புதிய சபாநாயகர் அவர்களால் மட்டுமே கண்டு பிடிக்க முடியும்.

அதற்காக சென்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது நடந்துள்ள பாரதூரமான வாக்கு மோசடிகளையும், அதற்கு உடந்தையானவர்களைக் கண்டு பிடிக்கவும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றையோ அல்லது பாராளுமன்றத்திற்கு வெளியேயுள்ள பொதுமக்களின் கௌரவத்துக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரு குழுவினருடன் கூடிய கமிஷன் சபையொன்றையோ இதற்கென உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அதன் மூலம் குற்றவாளியெனக் கண்டு பிடிக்கப்படும் எல்லோரையும் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றிக் கொள்ளவும் முடியும்.

அத்தோடு எதிர்காலத்தில் நடைபெறவுள்ள எல்லாத் தேர்தல்களிலும் பாராளுமன்ற கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்தக் காரணமாகவுள்ள தவறுகள் இனியும் ஏற்படாமல் தடுத்துக் கொள்வதற்காக இந்தியாவில் நடைமுறையில் இருக்கும் சுயாதீன தேர்தல் கமிஷனுக்கு சமாந்தரமான, அதற்கான அதிகாரங்களுடன் கூடிய தேர்தல் கமிஷன் ஒன்றை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி பாராளுமன்றத்தில் வலியுறுத்தி அவ்வாறானதொரு தேர்தல் கமிஷன் ஒன்றை நியமிப்பதற்கான முன்னோடியாக சபாநாயகர் செயற்படலாம்.

நீதியான தேர்தல் ஒன்றின் மூலம் தெரிவாகும் பொதுமக்கள் பிரதிநிதிகள் சம்பந்தமாக அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களை பொதுமக்களின் நம்பிக்கைக்கும் கௌரவத்திற்கும் ஏற்ற வகையிலான ஓர் இடத்தை நோக்கி நகர்த்திச் செல்ல வேண்டிய தேவையொன்றும் உள்ளது. அது பாராளுமன்றத்தின் கௌரவம் பற்றிய அடிப்படைப் பிரச்சினையுமாகும். அதற்காக பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கான பொறுப்புக்கள், கடமைகளை வலியுறுத்தும் நெறிக்கோவையொன்றையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். அதற்கு மாறாகச் செயற்படுபவர்களுக்கு எதிராக முறையீடு செய்யும் வகையிலான ஏற்பாடுகளையும், முறையீடுகளை விசாரணை செய்து தண்டனை வழங்கும் நடைமுறையொன்றையும் பாராளுமன்றத்தின் மூலம் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் பிரதிநிதிகள் தமது நன்நடத்தை குறித்து தம்மை உறுதிப்படுத்துவது மிக முக்கியமானதொன்றாகும். பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் ஒரு அங்கத்தவர் சத்தியப்பிரமாணம் செய்தவுடன் தேர்தல் ஆணையாளருக்கும், அதன் பின்னர் வருகின்ற எல்லாக்காலங்களிலும் ஜூலை 31ம் திகதிக்கு முன்பு பாராளுமன்ற செயலாளருக்கு தான் தமது குடும்பத்தினதும் சொத்துக்கள் பற்றிய கோவையொன்றை வழங்குதல் வேண்டும் என்ற ஒரு சட்டம் இருந்த போதிலும் அது பாராளுமன்றப் பிரதிநிதிகள் தொடர்பில் செயற்படுத்தப்படுவதாக தெரியவில்லை. சொத்துக்கள் பற்றிய விபரங்களை வழங்காமல் இருப்பது தண்டனைக்குரிய செயலொன்றான போதிலும் தேர்தல் ஆனையாளரோ அல்லது பாராளுமன்ற செயலாளரோ அவ்வாறு சொத்துக்கள் பற்றிய விபரங்களை முன்வைக்காதவர்கள் சம்பந்தமாக சட்ட நடிவடிக்கைகள் மேற்கொள்வதில்லை. மறுபுறத்தில் சொத்துக்கள் சம்பந்தமான சட்டதிட்டங்களின் படி அவர்களால் முன்வைக்கப்படும் அவர்களது சொத்து விபரங்களை குறைந்த விலையில் தேவையானவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரிகள் கடப்பாடுடையவர்களாக இருந்த போதிலும் அது செயற்படுவதாகவும் தெரியவில்லை. இந் நிலையில் முக்கிய மாற்றங்களை பாராளுமன்றத்தில் ஏற்படுத்த புதிய சபாநாயகரால் முடியும். சென்ற பாராளுமன்றப் பிரதிநிதிகளிடமிருந்து அந்தந்த வருடங்களுக்கான சொத்து விபரங்களை பெற்றுக் கொள்ளும்படியும், தற்போதைய பாராளுமன்றத்தின் எல்லாப் பிரதிநிதிகளிடமிருந்து சொத்து விபரங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்யும்படியும் சபாநாயகர் பாராளுமன்றச் செயலாளரைப் பணிக்கலாம். அதேபோன்று அந்த விபரங்களைப் பெற விரும்பும் மக்களுக்கு ஒரு கட்டணத்தைச் செலுத்தி அவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்துமாறும் பாராளுமன்றச் செயலாளருக்கு சபாநாயகர் உத்தரவிடலாம்.

ஜனநாயக அரசியல் முறையொன்றில் சட்ட அமுலாக்கல் சபையானது அனைத்து விடயங்களையும் பொதுமக்களுக்காக வெளிப்படையாக முன்வைக்கப்படல் வேண்டும். அதற்காக பாராளுமன்றமும் ஊடகத்துறையினருக்காக தன்னை முன்கொணர்தல் வேண்டும். இலங்கையில் இன்று பாராளுமன்றம் ஓரளவேனும் திறந்து விடப்பட்டுள்ளமை பத்திரிகைத் துறையினருக்கு மட்டுமேயாகும். அதிலும் செயற்குழுக்களின் கலந்துரையாடல் பற்றிய செய்திகள் பத்திரிகைகளுக்கும் கூட மூடி மறைக்கப்படுகின்றன. பாராளுமன்றச் செயற்பாடுகளை பத்திரிகைகளுக்கு மட்டும் வரையறுக்காது எலக்ட்ரோனிக் ஊடகங்களுக்கும் கூட திறந்துவிடப்படல் ஜனநாயக சுதந்திரத்திற்கு முக்கியமான நிபந்தனையொன்றாவதோடு, மற்றைய நாடுகளில் போன்று தேசிய பாதுகாப்பு சம்பந்தமான முக்கிய செயற்குழுக்களின் கலந்துரையாடல்கள் தவிர்த்து. சமுதாய வாழ்க்கைக்கும் அரச பரிபாலனத்திற்குமாக கலந்துரையாடப்படும் செயற்பாட்டுக் குழு மட்டத்திலான கலந்துரையாடல்கள் ஊடகங்கள் மூலமாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

புதிய சபாநாயகர் அவர்கள் இப்பொறுப்புகளில் அடிப்படையான சிலவற்றையேனும் முழுமைப் படுத்துவதன் மூலமாக சரிந்து கொண்டிருக்கும் ஜனநாயக சுதந்திரத்திற்கு புத்துணர்வொன்றை ஏற்படுத்துவது மிக அவசியமாகும். அதன் மூலம் பாராளுமன்றத்தை பொதுமக்களின் கௌரவத்துக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான ஒரு ஸ்தாபனமாக மாற்றியமைத்துக் கொள்ளவும் முடியும்.

புதிய சபாநாயகர் அவர்கள் இச் செயற்பாட்டை முடிந்தவரைமுழுமைப் படுத்திக் கொள்வாராயின் இலங்கையில் நிலை குலைந்து போயிருக்கும் ஜனநாயக வழிமுறையை பாதுகாக்க முயற்சித்த ஒரு சிறந்த சபாநாயகராக அநுரா பண்டார நாயக்கா அவர்களின் பெயர் வரலாற்றில் பதியப்படலாம்.



# பத்திரிகையாளர் நிமலராஜன் மீதான படுகொலை

விக்டர் ஐவன்

நிமல் ராஜனின் படுகொலை சம்பந்தமாக ஈ.பி.டி.பி மீது சந்தேகம் எழுந்துள்ள இந்த நிலையில் இந்தப் படுகொலை இலங்கையின் ஜனநாயக அரசியல் சம்பந்தமாக பல பிரச்சினைகள் எழுப்பப்படுவதற்கும் காரணமாகவுள்ளது.

நிமலராஜன் படுகொலைக்கு பொ.ச.ஐ.முன்னணி அரசாங்கத்தின் இணைக்கட்சியொன்றான ஈ.பி.டி.பி கட்சி உடந்தையாக இருந்துள்ளது என அதன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ஈ.பி.டி.பி இயக்கத்தினால் தனது உயிருக்கு ஆபத்து உள்ளதாக நிமலராஜன் படுகொலை செய்யப்பட முன்னர் தான் சேவை செய்த சில பத்திரிகை ஸ்தாபனங் களுக்கு அறிவித்திருந்தார். நிமலராஜனின் நெருங்கிய யாழ்ப்பாண நண்பர்களினது கருத்தும் அவரது படுகொ லைக்கு முக்கிய காரண கர்த்தா ஈ.பி.டி.பி. கட்சி என்பதேயாகும். ஈ.பி.டி.பி. இயக்கத் தலைவருக்கான அமைச்சர் பதவி வழங்கலும் நிமல ராஜன் படுகொலையும் ஒரே தினத்திலேயே நடை பெற்றுள்ளது.

நிமலராஜன் படுகொலையோடு பொ.ஐ.முன்னணி ஆட்சியின் கீழ் நடந்து முடிந்துள்ள பத்திரிகையாளர்கள் படுகொலைகள் மூன்றாகும். ரோஹண குமார படு கொலைச் சம்பவம் குறித்த சந்தேகமும் பொ.ஐ.மு. அரசாங்கத்தின் மீதே எழுந்தது. அந்தப் படுகொ லையின் பின்னணியில் இருந்த மிக முக்கியமான தகவல்கள் பல வெளியாகிய போதும், பொதுமக்களின் நம்பிக் கைக்குப் பாத்திரமான வகையில் நேர்மையானதொரு விசாரணையை நடாத்த அரசாங்கத்தால் இன்றுவரை முடியவில்லை. தினமுரசு பத்திரிகையாளர் ரமேஷ் படுகொலையும் இன்னும் இரகசியமானதாகவே உள்ளது. அப்பத்திரிகை ஈ.பி.டி.பி.யின் நிதி உதவியோடு நடத்தப்பட்ட ஒரு பத்திரிகையாக இருந்ததோடு ரமேஷின் கருத்துக்களுக்கும் ஈ.பி.டி.பி. கருத்துக்களுக்கும் இடையே எப்போதும் மோதல்கள் இருந்து வந்ததாகவும் ஒரு கருத்து நிலவுகின்றது. நிமலராஜன் படுகொலை இறுதியாக நடந்த பத்திரிகையாளர் படுகொலையாக இருப்பதுடன் இதன் முடிவு எங்கே என்பதும் புரிந்து கொள்ளக் கூடிய தொன்றாகவே உள்ளது.

நிமல் ராஜனின் படுகொலை சம்பந்தமாக ஈ.பி.டி.பி மீது சந்தேகம் எழுந்துள்ள இந்த நிலையில் இந்தப் படுகொலை இலங்கையின் ஜனநாயக அர சியல் சம்பந்தமாக பல பிரச்சினைகள் எழுப்பப் படுவதற்கும் காரண மாகவுள்ளது.

ஜனநாயக அரசியல் முறை யொன்றின் கீழ் பொலிஸா ருக்கோ அல்லது இர ாணுவத்திற்கோ தவிர தனிப்பட்ட முறையில் ஆயுதம் தாங்கிய இராணுவமொன்றை முன்னெடுத்துச் செல்ல தனிநபர் ஒருவருக்கு உரிமை இருக்க முடியாது. இருந்தாலும் எமது நாட்டில் ஆயுதப் போராட்டமொன்றில் ஈடுபட்டதன் பின்னர், ஜனநாயக அரசியல் நீரோட்டத்தோடு இணைந்துள்ள தமிழ் கட்சிகள் சிலவற்றிற்கு ஆயுதம் தாங்குவதற்கான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அந்த உரிமையைப் பெற்றுக் கொண்டுள்ள முக்கியமான அரசியல் இயக்கம் ஈ.பி.டி.பி யாகும்.

ஈ.பி.டி.பி இயக்கத்திற்கு மட்டுமல்லாது ஜனநாயக அரசியல் நீரோட்டத்தோடு இணைந்துள்ள மற்றைய அரசியல் கட்சிகளுக்கும் புலிகளின் பலத்தின் முன் பாதுகாப்பு சம்பந்தமான பாரதூரமான பிரச்சினை உண்டென்பது உண்மையே. அவர்களை நிராயுதபாணிகளாக்கி புலிகளின் பயங்கரவாதத் திற்குப் பலியாக சந்தர்ப்பம் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கின்ற போதிலும், அவர்களது பாதுகாப்புக்கென சிறிய அல்லது பெரிய ஆயுதங்களை கையாள சந்தர்ப்பமளிப்பது ஜனநாயக நடைமுறைக்கும் சட்டத்திற்கும் முரணா னதாகும். அவர்களுக்கு பாதுகாப்பு பற்றிய பிரச் சினைகள் உண்டெனில், அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்க வேண்டியது உத்தியோக பூர்வமான பொலிஸ்ஸார் அல்லது இராணுவத்தினரே யாகும். இவர்களின் மூலம் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்புப் படை வீரர்சளை பெற்றுக் கொடுப்பது அத்தியாவசியமான தொன்ற ாயினும் தமக்கான ஒரு ஆயுதக் குழுவொன்றை நடாத்துவதற்காகச் சந்தர்ப்பமளிப்பது சட்டத்திற்கு முரணானதொன்றாவதுடன் ஜனநாயகத்திற்கும் விரோத மானதாகும். ஒரு அரசியல் கட்சிக்கு தமக்கான ஒரு இராணுவமொன்றைக் கொண்டு நடாத்துவதற்கு இடமளிப்பதன் மூலம் தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக அதிகாரத்தைச் செலுத்த அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படு கின்றது. அதனால் தமது அரசியலில் எதிரிகளை மர்மமாக கொலை செய்யும் சந்தர்ப்பம் அவர்களுக்குச் கிடைக்கின்றது. இதுபோன்ற ஆயுதமேந்திய குழுக்களுக்கு பாராளுமன்றப் பிரதிநிதித் துவங்களைப் பெற்றுக் கொடுப்பது சட்ட விரோத மாவதுடன் அது ஜனநாயக அரசியல் முறையில் மாற்றங் களை ஏற்படுத்தவும் காரண மாக அமைகின்றது.

பொதுசன ஐக்கிய முன்னணி தலைமையிலான அரசு ஒன்றை அமைக்க ஆதரவு வழங்க உடன்படாததாலும் அவசர காலச் சட்டத்திற்கு எதிராக வாக்களிக்காமையையும் காரணமாகக் காட்டி அர சாங்கம் டெலோ இயக்கத் திற்கு வழங்கியிருந்த ஆயுதங்களை மீளப் பெற்றுக் கொண்டுள்ளது. நீண்ட காலமாக ஆயுதமேந்திப் போராட்டங்களில் ஈடுபட்ட, பின்பு ஜனநாயக அரசியல் பிரவாகத்தினுள் புகுந்த குழுக்களுக்கு தமக்கான பாதுகாப்பிற்குத் தேவையான ஆயதங்களையும், தேவையான பணத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் ஆட்சி செய்யும் அரசாங் கத்திற்கு ஆதரவளிக்கும் கொள்கையொன்றைக் கொண்டிருக்க வேண்டுமென்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இருந்தாலும், அரசாங்கம் இதுவரை ஈ.பி.டி.பி இயக்கத்தை நிராயுத பாணியாக்க வில்லை. காரணம் ஈ.பி.டி.பி அரசாங் கத்தின் நெருங்கிய அமைப்பாக இருப்பதன் காரண. த்தினாலேயாகும்.

ஜனநாயக அடிப்படை யிலான அரசியல் கலாசார மொன்றை ஏற்படுத்துவதற்கு முதலில் ஜனநாயக நீரோட் டத்தினுள் இருக்கும் இதுபோன்ற அரசியல் குழுக்களை அவசியம் நிராயுத பாணியாக மாற்றுதல் வேண்டும். அதனோடு அவர்களது பாதுகாப்பும் அர சாங்கத்தினது பொறுப் பாகின்றது. பொலிசின் அல்லது இராணுவத்தின் உதவியோடு அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை பெற்றுக் கொடுப்பதன் மூலம் அப்பொறுப்பை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

நிமலராஜன் படுகொலை யைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பரவலாக பேசப்படும் விவகாரம் என்னவெனில் ஆயுதப் போராட்டங்களைக் கைவிட்டு ஜனநாயக அரசியல் பிரவா கத்தினுள் புகுந்துள்ள அனைத்து அரசியல் இயக்கங்களையும் உடனடியாக நிராயுதபாணியாக்கல் வேண்டும் என்பதேயாகும். தமக்குக் கொலைப் பயமுறுத்தல்கள் உண்டு என்ற ஒரே காரணத்துக்காக சிறிய அல்லது பெரியளவிலான இராணுவமொன்றைக் கொண்டு நடாத்தும் உரிமை ஜனநாயக முறையொன்றின் கீழ் எந்தவொரு நபருக்கும் இருக்க முடியாது.

நிமல ராஜன் படுகொ லைக்காக மட்டுமன்றி, பொ.ஐ.மு. அரசாங்கத்தின் கீழ் நடைபெற்ற மற்றைய இரண்டு பத்திரிகை யாளர்களினதும் (ரோகண குமார- ரமேஷ் நடராஜா) படுகொலைகள் சம்பந்தமாகவும் கமிஷன் சபையொன்றை நியமிப்பது மிகவும் அவசியமானதாகும். ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலம் தொட்டு தொடர்ந்து தமது அரசியல் தேவைகளுக்காக மனிதப் படுகொலைகளை மேற்கொள்ளும் "படு கொலைக்" கலாசாரத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பதென்பது இச் செயற்பாடுகளின் பின்னால் மறைந்திருக்கும் உண்மையைப் புரிந்து கொண்டு அவைகளுக்கு உடந்தையான நபர்களை சட்டத்தின் முன்னே கொண்டு செல்வதன் மூலம் மட்டுமேயாகும்.

---

## மலை மாந்தர்

வேதனை போக்காத
வேதனத்துடன்
சாதனை படைக்கச்
சாதனமாகியவர்
வாக்களித்தவரை நம்பி
வாக்கு அளித்தார் -
அவரோ
வாழ்வளிப்பதாய் கூறி
வாழ்வழித்தார்................

வே.தினகரன்,
பத்தனை.



களநிலைவரம்

கௌதமன்

# படையினருக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் திருமலை கடற்படை தளம் மீதான தாக்குதல்

திருமலைத் துறைமுகம் மீண்டும் ஒருமுறை அதிர்ந்துள்ளது. 1995ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ம் திகதி அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான நூறு நாள் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில் திருகோணமலை கடற்படைத் தளப் பகுதியில் நங்கூரமிட்டிருந்த கடற்படையினரின் இரு பீரங்கிக் கப்பல்கள் மீது கடற் கரும் புலிகள் தற்கொலைப் படகுத் தாக்குதலை முதற் தடவையாக நடத்தி அவ்விரு பீரங்கிக் கப்பல்களையும் அழித்திருந்தனர். மீண்டும் ஐந்து வருட இடைவெளியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை திருமலைத் துறைமுக கடற்படைத் தளத்தினுள் ஊடுருவிய கடற்கரும்புலிகளின், அதி சக்திவாய்ந்த வெடிபொருட்களை நிரப்பிய படகணியொன்று பாரிய தாக்குதலை நடத்தி இரு கடற்படைக் கலங்களை தகர்த்தழித்துள்ளது.

இயற்கையிலேயே மிகவும் பாதுகாப்பான, நாற்புறமும் குன்றுகளால் சூழப்பட்ட திருகோணமலைத் துறைமுகத்தை அண்டியதாகவே பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இந்த கடற்படைத்தளமுள்ளது. பெரும்பாலும் நாற்புறமும் தரைப் பகுதியால் சூழப்பட்டு போத்தல் ஒன்றின் வாய்ப்புறம் போன்று பாதுகாப்பான கடல் வழியைக் கொண்டு இயற்கையிலும் செயற்கையிலும் பாதுகாப்பு அமைவகமாக இந்தக் கடற்படைத் தளம் அமைந்துள்ளது. இதைவிட வடக்கு கிழக்கிலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்த தளமாக இக்கடற்படைத் தளம் விளங்குவதாலும், திருமலைத் துறைமுகம் பு லிகளின் முக்கிய இலக்காக கருதப்படுவதாலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு 24 மணிநேர கடற்கண்காணிப்பும் போடப்பட்டிருந்தது. அத்துடன், திருமலை நகரம் வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளை விட பலத்த பாதுகாப்புடனிருப்பதாலும் இந்த நகரினுள் புலிகளின் அதிகரித்த ஊடுருவல் இல்லாததாலும் நகரில் இடையிடையே நடைபெறும் பிஸ்ரல் குழுத்தாக்குதல் மற்றும் எப்போதாவது ஒரு தடவை இடம்பெறும் தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தவிர, புலிகள் பெருமளவில் அணிசேர்ந்து நகரில் முக்கிய இலக்குகளையும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளையும் தாக்க முடியாதவாறே பாதுகாப்பு அமைவுகள் மிகமிக வலுப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே கடற்படையினரின் கோட்டையாக கருதப்படும் திருமலைத் துறைமுக கடற்படைத் தளத்தினுள் கடற்கரும்புலிகள் வெற்றிகரமாக நுழைந்து, பாரிய தாக்குதலைத் தொடுத்து கடற்படைக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியதுடன், தாக்குதலணியில் பெரும் பகுதி தாக்குதலை முடித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளதும் பாதுகாப்பு வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதிகாலை நேரம் கண்முடி விழிக்கும் நேரத்தினுள் கடற்படைத் தளத்திற்கு பாதுகாப்பளித்துக் கொண்டிருந்த கடற்படையினருடன் மோதி அவர்களை அப்பகுதியிலிருந்து அப்புறப்படுத்திவிட்டு ஒரு வழிப் பாதையான கடற்படைத்தள நுழைவாயிலினூடாக நுழைந்து தங்கள் இலக்குகளைத் தாக்கிவிட்டு தப்பியோடியமை படையினர் தரப்பில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், இது எப்படிச் சாத்தியபடுமென்ற கேள்வியையும் எழுப்பி, நாட்டிலுள்ள அனைத்து கடற்படைத் தளங்களினதும் பாதுகாப்புக்களை கேள்விக் குறியாக்கியுள்ளதுடன் கடற்படைத் தளங்களின் பாதுகாப்பில் ஏற்பட்டுள்ள ஓட்டைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது. அதிகாலை 5.30 மணியளவில் திருகோணமலையின் தென் மேற்கு பகுதியில் சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள உப்பாறு மாபிள்அபீச் கடற்கரையோரத்தில் இருந்து திருமலை துறைமுகம் நோக்கியும் கடற்படைத் தளம் நோக்கியும் புலிகள் மோட்டர் குண்டுகளை ஏவத் தொடங்கினர். என்றைக்குமே இல்லாத இந்த தாக்குதலால் அதிர்ச்சியடைந்த படையினர் நிலமையை உணர்ந்து தாக்குதல்களை சுதாகரித்துக் கொண்டு எதிர்த்தாக்குதலை தொடுப்பதற்கு முன்னர் கடற் கரும்புலிகளின் படையணிகள் கடற்படைத் தள நுழைவாயிலை சமீபித்து விட்டன. புலிகளின் மோட்டார் தாக்குதலை அடுத்து அப்படிஇப்படி சுத்தித் திரிந்த



## ஒரே நேரத்தில் மூவகைத் தாக்குதலை நடத்தும் வல்லமை படைத்தவர்கள் என்பதையும் விடுதலை புலிகள் நிரூபித்துள்ளனர்

கடற்படைப் படகுகள் கடற்புலிகளின் படகுகளை எதிர்கொண்ட போது கடற்படைப் படகுகளை நோக்கி புலிகளின் படகுகளில் இருந்து பலத்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. புலிகளின் திடீர் தாக்குதலை எதிர்



பாராத கடற்படை பீரங்கிப் படகுகளும் கடற்புலிகளின் படகுகள் மீது தாக்குதலை ஆரம்பித்தன. இரு தரப்புக்குமிடையே கடற்பரப்பில் கடும் சமர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது திருமலை நகரையே அதிரச் செய்தவாறு தரைப் படைகளின் உதவிகள் கிடைப்பதை தடுப்பதற்காக, புலிகள் சரமாரியாக கடற்படைத் தளம் மீதும் அதையண்டிய பகுதிகள் மீதும் மோட்டார் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தனர்.

கடற்பரப்பில் கடும் சமர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தரைப் பகுதியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலால் மீட்பு அணிகளின் உதவி வழங்கல் பெரிதும் தடைப்பட்டது. அத்துடன் இந்த மோதல்கள் கடற்பரப்பிலா அல்லது தரைப்பகுதியிலா நடைபெறுகிறதென்று தெரியாதொரு நிலையையும் ஏற்படுத்தியது. இந்த வேளையில் சுமார் பத்து கடற்புலிப் படகுகளின் பலத்த பாதுகாப்புடன் அப்பகுதிக்கு வந்திருந்த கரும்புலிகளைக் கொண்ட, சக்தி வாய்ந்த வெடிமருந்துகள் பெருமளவில் பொருத்தப்பட்டிருந்த நான்கு தற்கொலைத் தாக்குதல் படகுகள் கடற்படைத் தளத்தின் மையப்பகுதி நோக்கி விரைந்தன. இவற்றின் மீது, கடற்படைத் தள படையினர் தாக்குதலைத் தொடுக்க முற்பட்ட போதும் உப்பாறு பகுதியிலிருந்து கடற்படைத் தளத்தை நோக்கி புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்ட மோட்டார் தாக்குதலாலும், கரும்புலிப் படகுகளுக்கு 'துணையாக வந்த கடற்புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலாலும், கரும்புலிப் படைகளுக்கு துணையாக வந்த கடற்புலிகள் மேற்கொண்ட பலத்த தாக்குதல்களாலும் கடற்படையினரால் வலுவான தாக்குதலை தொடுக்க முடியாது போய் விட்டது. இந்த நிலையில் கடற்படைத் தளத்தை அண்மித்த இரு கரும்புலிப் படகுகள், ஏற்கனவே திட்டமிட்டிருந்தவாறு தலா ஒரு கப்பலைத் தாக்கியழித்துள்ளன. அத்துடன், தாக்குதல் நடைபெற்ற போது கப்பலில் படையினர் ஏற்றப்பட்டிருந்தால் மிக மோசமான இழப்புகள் ஏற்பட்டிருக்குமெனவும் சில தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இதே நேரம் இவ்விரு கடற்படைக் கலங்களை விட மேலும் இரு கடற்படை பா-குகள் இத் தாக்குதலில் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் கரும்புலிப் படகுகள் தங்கள் இலக்குகளை எட்டித் தாக்குதல்களை நடத்திய பின்னர், இக் கரும்புலிப் படகுகளுக்கு பாதுகாப்பாக வந்த கடற்புலிகளின் ஏழுக்கும் மேற்பட்ட படகுகள் கடற்படைத் தளத்தை விட்டு தப்பிச் சென்றுவிட்டதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் தாக்குதல் வெற்றிகரமாக நடைபெறும் வரை கடற்படைத் தள பகுதியில் கடற்படைப் படகுகளுடன் சமரை நடத்தியவாறு நிலைமைகளை அவதானித்திருப்பதிலும் கடற்புலிகள் ஈடுபட்டிருந்ததாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதேநேரம் தாக்குதலை நடத்த வந்த கரும்புலிப் படகுகள் இலக்கை எட்டி தாக்குதலை நடத்திய பின்னர், அவற்றுக்குப் பாதுகாப்பாக வந்த கடற்புலிப் படகுகள் கடற்படைத் தளத்தை விட்டகன்று பாதுகாப்பான இடம்வரை செல்லும் வரை, உப்பாறு மாபிள் பீச் பகுதியிலிருந்து புலிகள் தொடர்ச்சியாக மோட்டார் தாக்குதலை கடற்படைத் தளம் மீதும் அதனையண்டிய பகுதிகள் மீதும் மேற்கொண்டிருந்தனர். இதனால் கடற்படையினருக்கு உதவி வழங்க மேலதிக படையணிகள் அங்கு உடனடியாக வந்து சேர முடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது.

இத் தாக்குதல்கள் சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்றிருந்தது. இத் தளப்பகுதியில் நின்ற அதிவேக டோரா பீரங்கிப் படகொன்றை முதல் கரும்புலிப் படகு மோதித் தாக்கி வெடித்துச் சிதறச் செய்த அதேநேரம், அப்பகுதியில் நங்கூரமிட்டிருந்த துருப்புக்காவி கப்பலொன்றை மற்றைய கரும்புலிப் படகு தாக்கியழித்துள்ளது.

இந்தத் துருப்புக்காவிக் கப்பலானது ஒரே நேரத்தில் 400க்கும் மேற்பட்ட படையினரை வேகமாகக் கொண்டு செல்லக் கூடியது. அண்மைக் காலத்தில் குடாநாட்டிற்கும் அங்கிருந்தும் பெருமளவு படையினரையும் இராணுவ தளபாடங்களையும் ஏற்றியிறக்கும் பணியில் இந்த துருப்புக்காவிக் கப்பல் ஈடுபட்டிருந்தது. தாக்குதல் நடைபெற்ற போது கப்பலினுள் இரு கடற்படையினர் இருந்துள்ளனர். இவர்களை விட வேறெவரும் இருக்கவில்லை எனப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் கப்பலினுள் இராணுவ தளபாடங்கள் ஏதும் ஏற்றப்பட்டிருந்ததா என்பது குறித்து எதுவும் தெரியவில்லை. சிலவேளைகளில், பாரிய ஆயுதங்கள் ஏதாவது குடாநாட்டுக்கு அனுப்பப்படுவதற்காக கப்பலினுள் ஏற்றப்பட்டுள்ளதாக புலிகளுக்கு தகவல்கள் ஏதும் கிடைத்திருக்கலாம் என்ற சந்தேகமும் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இது குறித்து படையினர் தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

தாக்குதலுக்கு உதவி வழங்கிய புலிகளின் தரைப் படை அணிகள் உப்பாறு பகுதியில் நிலைகொண்டிருப்பதை அவதானித்த படையினர், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள அப்பகுதியில் அவர்களை முற்றுகையிட்டும் திடீர் தாக்குதலொன்றை காலை 8.30 மணியளவில் ஆரம்பித்தனர். கடற்படையினரும், தரைப் படையினரும் கூட்டாக ஆரம்பித்த இந்த நடவடிக்கைக்கு, விமானப் படை தாக்குதல் ஹெலிகொப்டர்கள் இரண்டும் உதவி வழங்கின. உப்பாறு பகுதி நோக்கி தாக்குதல்களை நடத்தியவாறு படையினர் முன்னேறிச் சென்ற போது புலிகளும் படையினர் மீது பலத்த தாக்குதலைத் தொடுக்கவே கடும் மோதல் வெடித்தது. அதிகாலை முதல் கடற்பரப்பில் நடைபெற்ற கடும் சமர் பின்னர் தரையில் தொடர்ந்தது. "எம்.ஐ.24" ஹெலிகொப்டர்களும் புலிகளின் நிலைகள் மீது கடும் தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருநத போது ஹெலிகொப்டர்கள் மீது புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். இத் தாக்குதலினால் ஹெலிகொப்டரொன்று வானில் வெடித்துச் சிதறி உப்பாறு கடற்பகுதியினுள் வீழ்ந்தது. அதிகாலை, திருமலைத் துறைமுகப் பகுதி முதல் கடற்படைத் தளம் வரை மோட்டார் தாக்குதலை நடத்தியிருந்த புலிகள் பின்னர் கடல் வழித் தாக்குதலைத் தொடுத்து இரு கடற்கலங்களை அழித்த பின்னர் விமானப் படை ஹெலிகொப்டரையும் சுட்டு வீழ்த்தியமை படையனர் தரப்பில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. தரை கடல், வான்மார்க்கத் தாக்குதலை புலிகள் ஏககாலத்தில் நடத்தியமை அவர்கள் ஒரே நேரத்தில் மூவகைத் தாக்குதலையும் நடத்தும் வல்லமை படைத்தவர்கள் என்பதையும் நிரூபித்துள்ளது. புலிகளின் விமான எதிர்ப்புப் படையணியின் தாக்குதலில், ஐந்து நாள் இடைவெளியில் சுட்டு வீழ்த்தப்பட்ட இரண்டாவது எம். ஐ- 24 ரக ஹெலிகொப்டர் இதுவாகும்.

இந்தத் தாக்குதல்களுக்கு புலிகள் பயன்படுத்திய "சுடுகலம்" குறித்து பல்வேறு ஊகங்களும் தெரிவிக்கப்படுகிறது. புலிகள் வழமையாகப் பயன்படுத்துவதாகக் கருதப்படும் ஸ்ரிங்கர் அல்லது சாம்- 7 ஏவுகணையா அல்லது அவர்கள் புதிதாகக் கொள்வனவு செய்திருக்கும் 23மி.மீ ரக விமான எதிர்ப்பு துப்பாக்கியா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன. 'இந்தத் தாக்குதலானது, வெப்பத்தை தேடிச் சென்று தாக்கும் ஏவுகணை ஒன்றினதாகவுமிருக்கலாமென்றும் ஊகிக்கப்படுகிறது. ஐந்து நாள் இடைவெளியில் ஒரேவிதமான தாக்குதல்களால் ஹெலிகொப்டர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது. ஏவுகணைத் தாக்குதலாயின் ஏவுகணை ஹெலிகொப்டரைத் தாக்கி ஒரு சில நிமிடங்களில் ஹெலிகொப்டர் வெடித்துச் சிதறிவிடும். எனினும் கடைசி இரு தாக்குதல்களிலும் ஹெலிகொப்டர்கள் உடனடியாக வெடித்துச் சிதறாது குறிப்பிட்ட நேர இடைவெளியிலேயே தீப்பிடித்துச் எரிந்து நொருங்கிச் சிதறியுள்ளன. இதனால் இவ்விரு ஹெலிகள் மீதும் 23மி.மீ ரக விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளே தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென படை தரப்பில் ஊகிக்கப்படுகிறது. அத்துடன் இந்த

தொடர்ச்சி 15ம் பக்கம்

*சென்றவாரத் தொடர்ச்சி.....*

## உலகமயமாக்கம் ஏற்படுத்தும் புதிய நெருக்கடிகள்:

**சென்ற இதழில் பிரசன்ன பெரேராவினால் எழுதப்பட்ட உலகமயமாக்கமும், இலங்கையும் என்ற தலைப்பிலான கட்டுரையின் முதற் தொகுதியில் புதிய உலக ஒழுங்கின் கீழ் தேசங்கள் அனைத்தும் எவ்வாறு மையத்தை நோக்கி ஈர்க்கப்படுகின்றன என்பது குறித்து பார்த்தோம். இப்பத்தியில் பூகோள மயமாக்கலின் மூலமாக வளர்முக நாடுகள் மீதான ஏகபோக ஆதிக்கம் வளர்ச்சியடைந்த நாடுகளால் பிரதானமாக என்னென்ன அடிப்படையில் மேற் கொள்ளப்படுகின்றது என்பதையும் இதன் விளைவாக குறிப்பாக எதிர்நோக்கும் பிரதிகூலமான விளைவுகள் எவை என்பதையும் சற்று அவதானிப்போம்.**

பின்தங்கிய நாடுகளை வளர்ச்சியடைந்த நாடுகள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கு உபயோகிக்கும் முக்கியமான வழிமுறைகளில், நிதிச் சந்தைகளை கருவியாகப் பாவிப்பது கவனத்திற்குரிய ஒன்றாகும். உலகின் மைய நாடுகள் சர்வதேச நிதி நிறுவனங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றன என்பது பரவலாக எல்லோரும் அறிந்து கொண்டுள்ள ஒரு விடயமாகும். குறிப்பாக இது சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்) மூலமாக மத்தியத்துவப்படுத்தி கட்டுப்படுத்தப் படுகிறன்றது.

இந்நிதியம் வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை அது எப்போதும் கூறிவரும் ஆலோசனை கவனத்திற்கு உரியது. அதாவது வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் தமது வளர்ச்சியைத் தொடர்ந்து பேணுவதற்கு தாராள மயமாக்கலை அவை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதாகும். ஐக்கிய அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண் மற்றும் ஐரோப்பிய யூனியன் யூரோ என்பன சர்வதேச நாணயங்களாக கருதப்படும் ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இச்சர்வதேச நாணயங்களோடு எமது நாணயத்தின் பெறுமதியை ஒப்பிட்டு

அடுத்ததாக, பூகோள ரீதியான தொடர்பாடலில் மைய நாடுகள் ஏகபோகம் செலுத்துவது அடுத்து குறிப்பிட வேண்டிய பிரச்சினையாகும். அண்மைக் காலம் வரையில் நாடுகளைப் பரஸ்பர தங்கியிருத்தலுக்குட்படுத்துவதாக சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளே அமைந்திருந்தன. ஆனால்



அவதானிப்போம்.

சர்வதேச சந்தைப்படுத்தலுக்கான பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், சலுகையடிப்படையில் 1990களில் இருந்து சர்வதேச நாணயத்தின் மூலமாக வருடாந்தம் 620 மில் அமெரிக்க டொலர்களை இலங்கை அரசு பெற்று வருகின்றது. இந்நிதிமூலமான சர்வதேச உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகள் மூலம் அரசு தொடர்ந்து எதிர் நோக்கி வரும் நீண்ட கால வரவு செலவு திட்டப்பற்றாக் குறையை மட்டுப்படுத்தல், சாதகமான அந்நியச்

அவதானிக்க முடியும். 1990களில் 13.3%மாக இருந்த கைப்பணிப் பொருட்களின் மீதான வேலை வாய்ப்புகள் 2000 ஆண்டில் 20%மாக அதிகரிக்கும் அளவுக்குக்கூட அது எட்டவில்லை. தொழிலாளர்களில் இன்னமும் 38% தினர் விவசாயத்துறை சார்ந்த கூலிகளாகவே இருப்பதானது தாராள பொருளாதாரம் மூலம் இலங்கை எட்டியுள்ள அநுகூலமான விளைவுகள் மிகக் குறைந்த மட்டத்திலேயே உள்ளன என்பதையே வெளிப்படுத்துகின்றன.

பல வழிகளிலும் வளர்முகநாடுகளின் வளர்ச்சியை

# அவசியம் சீர்படுத்த வேண்டியிருக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கான ஒழுக்க நெறிக்கோவை

நோக்கினால் உலகமயமாக்கல் நிலைக்குட்பட்டிருக்கும் இன்றைய உலகில் எமது இலங்கையர்களின் மனப்பாங்கானது சுதந்திரத்திற்கு முற்பட்ட காலங்களில் பவுணுக்கு எவ்வாறான மதிப்பை அளித்து வந்திருந்ததோ அது போன்ற நிலையே இன்றும் காணப்படுகின்றது. சற்று வித்தியாசமாக மக்களின் விருப்பத் தேர்வு டொலராக இருக்கிறது அவ்வளவுதான். கீழ்நிலை நோக்கிய இவ்வளர்ச்சியானது மூன்றாவது மண்டல நாடுகளால் கையாளப்பட்டு வரும் எந்த ஒரு நாணயப் பரிவர்த்தனைக் கொள்கையையும் இது வலுவிழக்கச் செய்யக் கூடிய ஒன்றாகும் என்பது இங்கு கவனத்திற குரிய ஒன்றாகும்.

அடுத்து பூகோள மயமாக்கலின் குறிப்பிடத்தக்க பிரதான விளைவு ஒரு நாட்டின் வளங்கள் பிறநாடுகளால் கூடுதலாக சுரண்டப்படுவதாகும். பொருளாதார அபிவிருத்தியின் முக்கியமான கூறாக உலகச் சந்தை நோக்கிய பண்ட உற்பத்தி முறை வளர்ச்சியடைவதைத் தொடர்ந்து, இப்பண்ட உற்பத்திக்கான இயற்கை மூல வளங்கள், மனித நல நோக்கிலோ தார்மீக நோக்கிலோ கையாளப்படும் நிலை கைவிடப்பட்டு, மாறாக இலாபத்தை உச்சப்படுத்திக் கொள்ளும் ஒரே குறிக்கோளுடனேயே இயற்கை வளங்கள் பாவிக்கப்படும் நிலை தோற்றம் பெறுகின்றது இந்நிகழ்வுகள் ஒரு நாட்டினை எதிர்காலத்தில் அது தனது சொந்தக்காலில் நிற்பதற்கான சுய சார்புப் பொருளாதார முறையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளுக்கு மேலும் தடைகளையும் தாமதத்தையும் ஏற்படுத்தும் ஒரு செயன் முறையாகும்.

உலகளாவிய கலாசாரத்தை வடிவமைப்பதில் ஊடகங்களும் தொடர்பாடல் அமைப்புகளும் முக்கியமான செல்வாக்கை செலுத்தி வருகின்றன. இதில் குறிப்பிடத்தக்கதாக கணிப்பொறிகளின் பெருக்கமானது உலகின் ஏனைய பகுதிகளில் இருந்து எந்தவொரு நாடும் தனித்து விடப்படும் நிலையை தவிர்த்து விட்டிருக்கிறது என்பது குறிப்பிட வேண்டிய அம்சமாகும். மையத்தைச் சோந்த நாடுகள் மீது ஏனைய நாடுகள் தங்கியிருப்பதனைத் தீர்மானிப்பதில் இது பிரதானமான ஒன்றாகும் என்பதும் கவனத்திற்குரியது.

உலகமயமாக்கலில் குறிப்பிடத்தக்க இன்னொரு பிரச்சினையாக நவீன ஆயுதங்கள் குறித்த நாடுகளுக் கிடையிலான போட்டிகள், நெருக்கடிகள் என்பன் மிக முக்கியமானவை. வளர்முக நாடுகள் (சில தென் கிழக்காசிய நாடுகள் உட்பட) அவை கொண்டுள்ள நவீன ஆயுத வளர்ச்சி மற்றும் ஆயுத வளர்ச்சிகள் மைய நாடுகளுக்கு பெரும் தலையிடியாக இருப்பதுடன் அவற்றின் இருப்புக் குறித்த அச்சங்களும் ஏற்படுவதானது தவிர்க்க முடியாதபடி பூகோளரீதியாக மையப்படுத்தப்பட்ட அதி உச்ச திறன் கொண்ட நவீன ஆயுத உற்பத்திக்கான போட்டிக்கு இது மைய நாடுகளை நிர்ப்பந்திக்கின்ற ஒன்றாகி விடுகின்றது.

தொலைத் தொடர்பாடலின் வளர்ச்சியில் கடந்த 4 ஆண்டுகளில் இலங்கை சர்வதேசத் தொழில் நிறுவனங்கள் மற்றும் கம்பனிகளுடன் இணைந்த வளர்ச்சி எவ்வாறு இருக்கின்றது என்பதனை, 1998 - 1999ம் ஆண்டுக்கான உலக அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் இருந்து நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும். உலக வங்கியின் அவ் அறிக்கையில், தொடர்பாடலுக்கான தொழில்நுட்ப சந்தையில் இலங்கை போன்ற ஒரு மிகச் சிறிய சந்தையும் கூட உலக அளவில் போட்டியிடக் கூடிய நிதிச் செலவினத்தைக் கொண்ட நான்கு தொலை பேசிக் கம்பனிகளுக்கு வழங்க முடியும் என அது கூறிற்று. மேலும் அவ் அறிக்கையில் இந்நாடு உலகின் மிக மலிவான தொலை பேசிக் கட்டணங்கள் சிலவற்றைக் கொண்ட ஒரு நாடாக இருந்து வருகின்றது, என்றும் 1993க்கும் 1996க்கும் இடையில் புதிதாக 56,000 தொலைபேசிகளை அது சந்தைப் படுத்தியிருந்தது என்றும் அது தெரிவித்தது.

இத் தகவலானது, குறிப்பிட்ட தொழில் நுட்பத்துறை தொடர்பாக சர்வதேச தொழில் போட்டி அமைப்புக்களுடன், தமது வளர்ச்சி குறித்த நோக்கங்களுக்கேற்ற வகையில் அவற்றை வெளியே இருந்து உள்வாங்கி அதனை சந்தைப்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள வெறறியையே அவ்வறிக்கை வெளிப்படுத்துகின்றது. இவ்வளர்ச்சி இலங்கையின் அனைத்து மொத்த துறையிலும் என்ன தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது பற்றி சரியாக புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் தொடர்பாடல் தொழில் நுட்ப பாவனையில் அது சர்வதேச தொழில் நுட்பங்களை, உள்ளடங்கி பாவனைக்குட்படுத்துவதில் குறிப்பிட்ட வளர்ச்சியை அடைந்துள்ள மையையே இது சுட்டி நிற்கின்றது.

அடுத்து சர்வதேச வர்த்தக முயற்சிகளுக்கென உலக வங்கியிடமிருந்து அரசு வருடாந்தம் பெற்ற நிதி மூலம் கிடைத்த பெறுபேறுகள் எவ்வாறு இருந்தன என்பதை

*தொகுப்பு*
*சாலையூரான்*

செலாவணி முறையொன்றை ஏற படுத்திக் கொள்ளுதல் மற்றும் ஏற றுமதி நோக்கிய தனியார் சந்தை உற பத்திகளை ஊக்குவித்தலையும் அது நோக்கமாகக் கொண்டிருந்தது. இச் செயல் முறையின் மூலம் இலங்கை அரசு எதிர்பார்க்கும் சாதகமான அம்சங்களான தேசிய மட்டத்திலான நாட்டின் வளர்ச்சி, நாட்டின் பணவீக்க வீதத்தினை மட்டுப்படுத்தல் உறுதியான சென்மதி நிலுவையொன்றை பேணிக் கையாளுதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தபோதும் நடைமுறையில் எதிர்பார்த்த இலக்குகளை அரசு அடையவில்லை.

இலங்கை அரசானது தாராள பொருளாதாரத்தின் கீழ், கணிசமான வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் அதற்கான சந்தை வாய்ப்பும் உற்பத்திப் பெருக்கமும் இதனூடாக கணிசமான அளவிலான வேலை வாய்ப்புகளையும் வழங்க முடியும் என்றும் எதிர்பார்த்தது. இருந்த போதும் 1980 இற்கும் 1990 இற்கும் இடையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருடாந்த சராசரியான 4.2% மானது 1990-1997 இடைவெளியில் 4.9 சதவீதமாக அது வளர்ச்சியடைந்திருந்த போதும் 1998ல் வேலையில்லாத் திண்டாட்டத்தின் வளர்ச்சியானது 12%த்தை எட்டியிருந்தது.

மேற்கூறப்பட்ட விபரங்களை நோக்கும் போது வர்த்தகத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது உற்பத்தி அதிகரிப்பிற்கோ வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கோ உதவவில்லை என்பதை எம்மால்

மட்டுப்படுத்தியுள்ள இப் பூகோள மயமாக்கத்தின் பிரதிவிளைவுகளில் இருந்து விடுபடுவதற்கு சில ஏற்பாடுகள் அவசியம் மேற் கொள்ளப்பட வேண்டியுள்ளன. உலக மயமாக்கமானது மூலதனத் தேவைகளை மட்டுமே கவனத்தில் கொண்டு சமூகத்தின் தேவைகளை அது புறக்கணிக்கிறது. எனவே சமூகத்தின் உண்மையான அவசியமான தேவைகளை இனங்கண்டு மேற்கொள்வதுடன் இதற்கான சர்வதேச ஒழுக்க நெறிக் கோவை தயாரிக்கப்படுவதற்கான ஒழுங்குகளும் மேற் கொள்ளப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியமானது மைய நாடுகளின் நலன்களுக்காக கட்டுப்பட்டுப் பணியாற்றும் நிலையில் இருந்து அது விடுவிக்கப்பட வேண்டும் என்பதுடன், உலகின் பல்வேறு தரத்திலான வளர்ச்சிகளைக் கொண்ட அனைத்து நாடுகளுக்குமான மத்திய வங்கியாக அது செயற்படுவதற்கான மாற்றுத்திட்டமொன்றும் முன்வைக்கப்படவேண்டும் இவ் வங்கியின் நிர்வாகக் கட்டமைப்பு மற்றும் நிர்வாகத் தெரிவுக்கான வாக்களிப்பு முறை என்பவற்றிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

இறுதியாக, பூகோள மயமாக்கலின் மூலமான கடந்தகால பெறுபேறுகளை முறையாக சம்பந்தப்பட்ட அனைத்து சர்வதேச அமைப்புகளும் அரசுகளும் சீர்தூக்கிப் பார்ப்பதுடன், இதனால் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் ஆபத்துக்களை தடுத்து நிறுத்தும் வகையிலான செயற்திட்டமொன்று இனங்காணப்படாது விடின் மைய நாடுகளின் வளர்ச்சியில் வறிய நாடுகள் அழிந்து மடிவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.




# தளம் மாறியுள்ள தலைமைத்துவமும் எதிர்நோக்கியுள்ள சவால்களும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிசின் தலைவர் அஷ்ரப் அவர்கள் அமரத்துவம் அடைந்து வாரங்கள் பல கடந்து விட்ட இன்றைய நிலையில், அவரின் மரணம் ஏற்படுத்திய அதிர்ச்சி மற்றும் துயரங்களிலிருந்து மக்களும் ஓரளவு மீண்டு கொண்டிருக்கின்றனர்.

கிழக்கு மண்ணிலிருந்து, குறிப்பாக அம்பாறைக் கரையோரப் பிரசேதத்திலிருந்து கை மாறியுள்ள மு.கா.வின் தலைமைத்துவம் பற்றியும் தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களது திறமை, ஆளுமை போன்றவை பற்றியும் இன்று கிழக்கு மாகாண ஆதரவாளர்களிடையே பல்வேறு வகையான கேள்விகள் எழுந்துள்ளதை பரவலாகக் காணக் கூடியதாக உள்ளன.

கிழக்கு மு.கா. ஆதரவாளர்கள் தற்போதைய புதிய தலைவரை, மறைந்த தமது தலைவர் அஷ்ரப்போடு பல்வேறுபட்ட விடயங்களிலும் ஒப்பிட்டப் பார்க்கத் தலைப்பட்டுள்ளனர். இதனால், றவூப் ஹக்கீம் அவர்களது ஒவ்வொரு அசைவிலும் மற்றொரு அஷ்ரப்பையே அவர்கள் எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது.

அஷ்ரப் எனும் தமது தலைவன், எவ்வாறு தம்மையும் தமது விடயங்களையும் சிறந்த முறையில் அணுகினாரோ, அவ்வாறானதொரு அணுகுறையையே தமது புதிய தலைவரிடத்திலும் இம் மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். ஆனால், இவ் அதரவாளர்களின் மேற்கண்டவாறான எதிர்பார்ப்புகளும், ஆதங்கங்களுமே எதிர்காலத்தில் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கு மிகப் பெரிய தலையிடிகளை ஏற்படுத்தவுள்ளதோடு, அவரின் முன் பாரிய சவால்களாகவும் எழுந்து நிற்கப் போகின்றன.

எனவே அவ்வாறான சாவல்கள் பற்றியும் புதிய தலைமைத்துவத்தை ஏற்றுள்ள றவூப் ஹக்கீம் அச்சவால்களை முறியடிப்பதற்காக எதிர்கொள்ளவுள்ள சங்கடங்கள் பற்றியும் நாம் சற்று விரிவாக காண்போம்.

1980களுக்குப் பின்னரான காலப்பகுதியில், முஸ்லிம் சமூகத்தின் மீது, குறிப்பாக கிழக்கு முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சிங்கள பேரினவாதத்தின் அடக்கு முறைகள் மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்களின் தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்ட பதட்ட நிலையும், அபாயகரமான சூழ்நிலையும் இப்பகுதி மக்களை முஸ்லிம்களுக்கானதொரு நிறுவன ரீதியான அரசியல் தலைமைத்துவம் பற்றிச் சிந்திக்க வைத்தது. அந்த சிந்தனையின் விளைவே மு. காங்கிரசின் தோற்றமாயிற்று.

முஸ்லிம் காங்கிரஸ் எனும் அரசியல் நிறுவனம் அப்போது, குறிப்பிட்ட ஒரு சிலராலேயே தோற்றுவிக்கப்பட்டது. ஆயினும், அது மிகக் குறுகிய காலப் பகுதியினுள் அசுர வளர்ச்சி கண்டு விட்டது. அவ்வாறான வளர்ச்சிக்கு பாரிய உந்து சக்திகளாவிருந்த காரணிகளுள் மிக முக்கியமாகக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்கள், அம்பாறை மாவட்ட கரையோரப் பகுதி முஸ்லிம் மக்களாவர்.

இலங்கையைப் பொறுத்த வரை, விகிதாசார ரீதியில் மிக அதிகமான முஸ்லிம்கள் வாழும் பகுதியாக அம்பாறை மாவட்டமே கொள்ளப்படுகிறது. இம்மாவட்டத்தில் வாழும் 95 வீதமானவர்கள் கரையோரப் பிரதேசங்களையே அண்டி வாழ்கின்றனர். இவர்களின் பிரதான் ஜீவனோபாயத் தொழில்களாக மீன் பிடியும், விவசாயமுமே காணப்படுகிறது. முஸ்லிம் காங்கிரசின் மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்களும் இக்கரையோரப் பகுதியில்தான் பிறந்து வளர்ந்தவர்.

மீன் பிடித்தொழில் சார்ந்த (சிங்களத்தில் கராவ, தமிழில் கரையார் என்று அழைக்கப்படும்) மக்கள்தான், இலங்கையில் போர்க்குணம் அதிகம் கொண்ட குழுமத்தினர் என்று குறிப்பிடப் படுகிறது. இவ்வாறான மக்களைப் பற்றி ராவய பத்திரிகை ஆசிரியர் விக்ரர் ஐவன் குறிப்பிடுகையில் கரையோர மீன்படி வாழ்நிலை அவர்களுக்கு அந்த குணாம்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்கிறார். புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன், ஜே.வி.பியின் மறைந்த தலைவர் றோகண விஜயவீர ஆகியோர்களும் இவ்வாறான மீன் பிடித் தொழிலைக் கொண்ட மக்கள் குழுமத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

ஆக, இவ்வாறான கரையோரப் பகுதி முஸ்லீம் மக்களின் இயல்பினையும், குணாம்சங்களையும் நன்கு புரிந்து வைத்திருந்த அஷ்ரப் அவர்கள், அம்மக்களை மு. காங்கிரசின் வளர்ச்சிக்காக மிகவும் நுணுக்கமான முறையில் பயன்படுத்தி அதில் வெற்றியும் கண்டார்.

அஷ்ரப் அவர்கள் கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு பிரதேசத்தைப் பற்றியும் மிக நுணுக்கமாகப் புரிந்து வைத்திருந்தார். ஒவ்வொரு பகுதி மக்களோடும் எவ்வாறு பழக வேண்டுமென்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. அதற்கு அவர் அப்பகுதியில் செய்து வந்த வக்கீல் தொழிலும் ஒரு காரணம் எனலாம்.

ஆனால் தற்போதைய புதிய தலைவர் றவூப் ஹக்கீம் அவர்களால், இப்பகுதி மக்களோடு அஷ்ரப் அவர்களின் அளவுக்கு பழக முடியுமா? அஷ்ரப் அவர்கள் அம்மக்களோடு வைத்திருந்த உறவைத் தொடர முடியுமா? என்பது கேள்விக் குறியாகவே காணப்படுகிறது. நாவலப்பிட்டி என்ற இடத்தில் பிறந்து, கிழக்கு மாகாணத்தின் தன்மைக்கு முற்றிலும் மாறுபட்ட கண்டி, கொழும்பு ஆகிய பகுதிகளில் படித்து வளர்ந்த் ஹக்கீம் அவர்கள் கிழக்கு மாகாண மக்களின் கலை, கலாசார குணாம்சங்களோடு ஒத்துப் போவதென்பது எந்தளவுக்கு சாத்தியமோ தெரியவில்லை.

அஷ்ரப் அவர்கள் தனது பகுதி மக்களோடு பழகிய விதமும், அம்மக்களின் பிரச்சினைகளை எதிர்கொண்ட விதமும் (சரி, பிழை என்ற விவாதத்திற்கப்பால் காணும் போது) சுவாரஸ்யமானது. தனது கட்சி ஆதரவாளர்கள் சிலர் ஒரு சமயம் தனது கருத்துக்கு மாற்றமாக நடந்தபோது, அம்மக்களின் கரங்களைப் பிடித்து அழுது, தனது கருத்துக்கு உடன்பட வைத்திருந்தார். அஷ்ரப் அவர்கள். ஆனால், மற்றொரு சந்தர்ப்பத்தின் போது, தன்னோடு முரண்பட்ட தனது போராளிகள் என்று அழைக்கப்படும் மிகப் பலமான ஆதரவாளர்கள் சிலரை அடித்தும், சுடு சொற்களால் பேசியுமே தன்னோடு உடன்பட வைதிருக்கிறார். பாம்பின் காலை பாம்பே அறியுமென்பார்களே அப்படி தனது பகுதி மக்களை மிகத் துல்லியமாகப் புரிந்து கொண்டதன் காரணமாகவே அஷ்ரப் அவர்களால் இப்படியெல்லாம் செயற்பட முடிந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் தமது தலைவர் இப்படி நடந்து கொள்வதைத்தான் இந்த மக்களும் விரும்பினார்கள்/ விரும்புகிறார்கள் போலும்.

அப்படியாயின், இப்படி, இந்தளவுக்கு ரவூப் ஹக்கீம் அவர்களால் செயலாற்ற முடியுமா? தன் குழந்தையின் பசியறிந்து பாலூட்ட பெற்ற தாயொருவளால்தான் பூரணமாக முடியும். ஆனால், ஒரு செவிலித்தாயினால் அது எந்தளவு முடியும் என்பதே நமது கேள்வி. அஷ்ரப் எனும் மனிதர், முஸ்லிம் காங்கிரசின் தாயகமான கிழக்கு மாகாண மக்களின் பெற்ற தாய் என்றால், தற்போதைய தலைவர் ஹக்கீம் அவர்களை ஒரு செவிலித்தாயாகவே காண முடிகிறது.

தமது மறைந்த தலைவர் அஷ்ரப் அவர்கள் தம்மோடு எப்படியெல்லாம், சாதகமாக நடந்து கொண்டாரோ (கவனிக்க அனைத்து விடயங்களிலும் இம்மக்களோடு அஷ்ரப் அவர்கள் சாதகமாக நடக்கவில்லை என்பது இங்கு வேறு விடயம்) அவ்வாறானதொரு நடவடிக்கையைத்தான் றவூப் ஹக்கீமிடமிருந்தும் இம்மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அவ்வாறான நடவடிக்கையிலிருந்து சறுகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஹக்கீம் அவர்கள் தனது கணக்கில், கிழக்கு மக்களிடமிருந்து உருவாகும் எதிர்ப்பின் கனதியையும், தொகையையும் அதிகப்படுத்திக் கொண்டே செல்வார். மக்களின் இந்த எதிர்ப்பே நாளாக, நாளாக அவருக்கு பாரிய தலையிடிகளையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதோடு அவரின் தலைமைத்துவ இருப்பினையும் கேள்விக்குட்படுத்தும்.

றவூப் ஹக்கீம் அவர்கள் முன்னுள்ள மற்றுமொரு பிரச்சினை, கிழக்கின் உண்மையான உள்ளூர் மு. காங்கிரஸ் தலைவர்கள் எவர் என்பது பற்றியும், மக்களின் நம்பிக்கைக்குரிய கட்சியின் முக்கிய புள்ளிகள் (முக்கிய புள்ளிகளாக தம்மைத் தாமே கூறிக் கொள்பவர்கள் அல்லர்) யார் என்பது பற்றியும் அறிந்து கொள்வதேயாகும். ஏனெனில் அஷ்ரப் அவர்கள் இவைகள் பற்றி மிகச் சிறப்பாக அறிந்து வைத்திருந்தார். அவ்வாறு தெரிந்து வைத்திருந்ததனால், பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கும் அதன் மூலம் தீர்வு கண்டார்.

அஷ்ரப் அவர்கள் உயிருடன் இருக்கும் போதும் இவ்வாறு நடைபெற்றிருக்கின்றது. ஒரே பிரதேசத்திலுள்ள முக்கிய உள்ளூர் தலைவர்கள் இருவர் மோதிக் கொள்வதும், பின் ஒருவரைப் பற்றி மற்றவர் அஷ்ரப் அவர்களிடம் முறைப்பாடு செய்வதுமான சிறுபிள்ளைத்தன நடவடிக்கைகள் இப்பகுதிகளில் ஏராள மாகவே அரங்கேறியுள்ளன. ஆனாலும் பிரச்சினைக்குரிய இருவர் பற்றியும் அஷ்ரப் அவர்கள் குணம், குடும்பம், கல்வியறிவு, மக்கள் செல்வாக்கு என்று அக்குவேறு ஆணிவோறாக அறிந்திருந்ததால், ஒவ்வொருவரினது தன்மையினையும் கருத்திற் கொண்டு அவர்களுக்கென்று ஒவ்வொரு பதவியும், நிலையும் வழங்குவார். அத்துடன் அப்பிரச்சினை தீர்ந்தே போகும்.

மேற்கண்டவாறான ஒரு பிரச்சினை ரவூப் ஹக்கீம் அவர்களது ராஜசபைக்கு தற்போது கொண்டுவரப் படுமானால், ஹக்கீம் அவர்கள் அப்பிரச்சினையை தீர்த்து வைப்பதில் எத்தனை வீதம் வெற்றி காண்பார் என்பதே பிரச்சினை யதார்த்த பூர்வமாகச் சிந்திப்பவர்களுக்கு இதன் உண்மைத் தன்மையைப் புரிந்து கொள்வதில் எந்த விதமான சங்கடங்களும் இருக்க நியாயமில்லை என்றே தோன்றுகிறது.

ஆக, முஸ்லிம் காங்கிரசின் தளப் பகுதிகளில், குறிப்பாக அதன் பாரிய தளமான கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூர் தலைவர்களைப் பற்றி மிகச் சரியாக அறிந்து கொள்வதோடு, உண்மையான கட்சி விசுவாசியான தலைவர்கள் எவரெவர் என்பதனையும் ஹக்கீம் அவர்கள் மிகப் புத்தி சாதுர்யத்துடன் தேர்வு செய்யவும் வேண்டும். இதுவும் ஒரு பாரிய சிக்கலான சவாலொன்றாகவே ஹக்கீம் அவர்கள் முன் எழுந்து நிற்கிறது. இவ்வாறான உள்ளூர் தலைவர் தெரிவில் ஹக்கீம் அவர்கள் சிறு பிழை கூட விடுவாராயின், ஒரு சிறு குழுவான ஆதரவாளர்களை தம் வசம் வைத்துக் கொண்டிருக்கும் சுய நலமிகளும் கொந்தராத்துக்காரர்களும் கட்சியின் உள்ளூர் தலைவர்களாக தெரிவு செய்யப்படக் கூடிய சந்தர்ப்பமேற்பட்டு விடும். அவ்வாறானதொரு நிலை ஏற்படுமானால், மக்களாதரவற்ற ஒருவரை தமது பிரதேசத் தலைவராக நியமித்த குற்றச் சாட்டுடன் குறிப்பிட்ட பிரதேச மக்களின் சுட்டு விரல்கள் ரவூப் ஹக்கீம் அவர்களை நோக்கி நீள்வதை தவிர்க்க முடியாததாகி விடலாம்.

இவைகள் இப்படியிருக்க, அஷ்ரப் அவர்கள் விட்டுச் சென்ற தலைமைத்துவ இடைவெளி கிழக்கு மாகாணத்தை, குறிப்பாக அம்பாறை மாவட்ட கரையோரப் பகுதியைச் சேர்ந்த ஒருவராலேயே நிரப்பப் பட வேண்டுமென்கிற கருத்தொன்றை, முஸ்லிம் காங்கிரசின் உயர் பீட புள்ளிகள் சிலரே மக்கள் மத்தியில் விதைத்து வருவதையும் காணக் கூடியதாகவுள்ளது. பிரதேச வாதங்கொண்ட இக்கருத்து, துரதிஷ்டவசமாக மக்கள் மத்தியில் வலுப்பெறத் தொடங்குமானால், ஹக்கீம் அவர்களது தலைமைக்கு விபரீதங்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும்.

இவை மட்டுமன்றி, ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் ஊடாக கிடைக்கும் சலுகைகள் மற்றும் அபிவிருத்தி ஆகியவைகளில் கணிசமான பங்கினை வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு, குறிப்பாக கிழக்குப் பகுதிகளுக்கு வழங்க வேண்டுமென்றுதான் இம் மக்கள் எதிர்பார்ப்பார்கள். ஏனெனில், அதிகமான வாக்குகளை வழங்கி, அதிகமான பிரதிநிதிகளை மு.காவுக்கு பெற்றுக் கொடுப்பது இம்மாகாண மக்கள்தான். அது மட்டுமன்றி, அதிகமான முஸ்லிம்கள் செறிந்து வாழ்வது கூட (சுமார் 35 வீதமானவர்கள்) இந்த மாகாணத்திலேயே என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. எனவே, அவ்வாறான அபிவிருத்தி மற்றும் சலுகைப் பங்கீடுகளில் ரவூப் ஹக்கீம் அவர்கள் சற்றுத் தடுமாறினால் கூட, கிழக்கு மக்கள் புதிய தலைமைத்துவத்தை சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தலைப்பட்டு விடுவர்.

எனவே மேற்கண்டவாறான நடவடிக்கைகளின் போது புதிய தலைவர் ஹக்கீம் அவர்கள் கத்தியில் நடப்பது போன்ற அவதானத்துடன் செயற்பட வேண்டும். தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவரின் தலைமைத்துவத்திற்கெதிரான குழிகள் பறிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கும்.

எது எப்படியோ, கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளார்களிடையே நிலவி வரும் ரவூப் ஹக்கீம் அவர்கள் பற்றிய நல்லபிப்பிராயத்தில், எப்போது கறுப்புப் புள்ளிகள் விழ ஆரம்பிக்கிறதோ, அப்பொழுதிலிருந்தே ரவூப் ஹக்கீம் அவர்களது தலைமை கொஞ்சம், கொஞ்சமாக வீழ்த்துவதற்கான துரித ஆயத்தங்களும் ஆரம்பிக்கப்படும் என்பதை மட்டும் அடித்துச் சொல்லலாம்.

யூயெல் மப்றூக்

இவ்விதழில், பெண்ணுக்கான ஒழுக்க நெறிக்கென கற்பிதம் செய்யப்பட்ட "கற்பு" என்றும் கருத்துநிலை குறித்து பண்டைக் கால (சங்ககால) அறிஞர்களிடையே இருந்து வந்த வெவ்வேறு கருத்துக்கள் அபிப்பிராயங்களை இக் கட்டுரை அலச முற்படுகிறது. ஒரு ஒழுக்கக் கோவையாகவும் அதாவது அது உடல் தூய்மை கருதாது பெண்ணுடைய ஒவ்வொரு செயல்பாட்டையும் கருத்தில் கொண்டு வரையறுக்கப்பட்டதாகவும். அதற்குப் பின்னர் பெண்ணினது மன வலிமையை பரீட்சிப்பதாக இக் கற்பு விளக்குவதையும் இக்கட்டுரையில் நாம் அவதானிக்கலாம்.

தொகுப்பாசிரியர்.

## சங்ககாலத்து பெண்ணியம் - சில குறிப்புகள்:

# ஒழுக்க நெறிக் கோவையான கற்பு கேள்விக்குள்ளாக்கப்படுகிறது!

ஆரோக்கியமான பெண்நிலைச் சிந்தனைக்கான விவாதத்தளமொன்றை நோக்கிய தொடர் - 2

சுதர்ஷினி

பெண்விடுதலையின் பெரும்பான்மையான அம்சங்கள் பாலியல் சார்ந்ததாகவே அமைந்துள்ளது. இதில் கற்பு என்பதும் உள்ளடக்கம். பெண்ணின் தூய்மை தொடர்பான விடயம் பண்டைய காலம் தொட்டே இருந்து வரும் ஒரு விடயமாக இருக்கின்றது. "கற்பு" பெண்களின் பாலியல் தொடர்பான ஒழுக்கத்தை கொண்டவையாகவும் இதை ஒழுங்குமுறையாக பின்பற்றியவர்கள் பெண் தெய்வங்களாகவும் புனிதர்களாகவும் போற்றப்படுவதை எமது இலக்கிய வரலாறுகள் இன்றும் எடுத்துரைக்கின்றன. பெண்களை பத்தினித் தெய்வங்களாகவும், புனிதர்களாகவும் போற்றப்படும் இவ்வித்தையானது மறைமுகமாக அவர்களை ஒடுக்குவதற்கும் தம் வசப்படுத்தி வைத்திருக்கவுமே பயன்படுத்தினரே ஒழிய இதைக் கொண்டு பெண்மையை முதன்மைப்படுத்தினார்கள் என்பது மிகவும் போலித்தனமான பிரச்சாரமாகும்.

சங்க இலக்கியங்களில் "அணங்கு" என்ற சொல் பெண்ணினுடைய சொல் வலிமை, விசாலம், அறம் போன்றவற்றை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டு வந்தது. உண்மையிலே இச் சொற்பதமானது பலதரபட்ட விளக்கங்களை கொண்டிருந்தன என ஆய்வாளர் கூறுகின்றார். பெண்களின் புனித ஆற்றலாக ஹார்ட் விளக்கும் "அணங்கு" கற்புடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது என்றும் விளக்குகிறார். இதன் மூலம் பெண்ணின் கற்புக்கு களங்கம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றமையால் உடன்கட்டையேறுதல் அவளுக்கு பொருத்தமானது என்பதை ஹார்ட் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றின் மூலம் பெண் கணவனின் சிதையில் வீழ்ந்து உயிரை மாய்த்துக் கொள்வதை இவர் மறைமுகமாக வலியுறுத்துகின்றார் என ஆய்வாளர் கூறினாலும் உண்மையில் அவர் அதனை நேரடியாகவே வலியுறுத்துகின்றார்.

பெண்ணுக்கே உரித்தான சில குணாம்சங்களை இந்த ஆணியச் சமுதாயம் வரையறுத்து அதன் மூலம் பெண் தனது தேவையை பூர்த்தி செய்ய விடாமல் தடுப்பது கடந்த எல்லா காலகட்டத்திற்கும் உரிய ஒன்றாக உள்ளது.

ஹார்ட்டின் இக்கருத்தானது பிற்காலங்களிலும் தூக்கிப்பிடிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருவதை ஆதாரபூர்வமாக தகவல்கள் நிரூபித்துள்ளன. அணங்கு பற்றி ஹார்ட்டின் கருத்து விவாதத்துக்குரியது என ராஜம் கருதுகின்றார். பண்டைக்கால இலக்கியங்களில் காணப்பட்ட அணங்கின் பிரதான தோற்றம் கற்பே என்பது மிகவும் தவறான ஒரு கருத்தாக இவர் கூறுகின்றார். கற்புக்கும் அணங்கிற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும். பெண்கள் தொடர்பாக இவை குறிப்பிடப்படும் போது இவை வெறும்பால் நிலைத்தன்மையை குறிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டது என்றும் ராஜம் கூறுகின்றார். கற்பு பற்றிய கருத்தாக்கங்கள் பண்டைய இலக்கியங்களில் இடப்பொருத்தமற்று பயன்படுத்தி தற்கால பெண்ணிய ஆய்வாளர்களால் அது எவ்வாறு தவறாக விளக்கப்பட்டுள்ளது என்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உண்மையாகவே பெண் புனிதமானவள், மாசற்றவள், கற்புள்ளவள் எனப்பல பட்டங்களை அக்கால இலக்கியங்களில் பெண்களுக்கு சூட்டியது வெறும் போலித்தனமான வித்தையே அன்றி வேறொன்றும் இல்லை என்ற நாம் வரமுடியும்.

பெண்ணிய கோட்பாட்டு வளர்ச்சியானது எவ்வாறு காலத்துக்குக் காலம், வேறுபட்டு வந்ததோ அவ்வாறே கற்பிற்கான வழக்காறுகளின் தோற்றமும் வளர்ச்சியும் வெவ்வேறுபட்டதாக காணப்படுகிறது. ஆதலால் இப்போது இதனைப் பற்றிய ஒரு முழுமையான கோட்பாட்டு ரீதியான விளக்கமும் தெளிவும் தேவையாக உள்ளது. தமிழில் "லெக்சிக்கன்" கற்பு முறை முன்னைய காலத்தில் காணப்பட்டு வந்தது. களவியின் பின் தலைவன் தலைவியை விதிப்படி மணந்து இல்லறம் புரியும் ஒழுக்கத்தினை "லெக்சிக்கன்" என்னும் சொல் குறிக்கின்றது. தொல்காப்பியர் கற்பை இவ்வாறு விளக்குகின்றார். உரிய தலைவனுக்கு கொடுப்பதற்கு உரிமையுடைய பெற்றோர் தலைவியை தத்தெடுத்துக் கொடுத்தல் என்பதனை குறிக்கின்றது என்கிறார்.

எனவே அக்கால மரபின்படி கற்பு என்பது திருமண விசுவாசத்தை மட்டுமே குறித்து நிற்கும் ஒன்றாக விளங்கியது. ஆண்களும் பெண்களும் திருமணத்திற்கு முன் களவுக்காதல் "கலவி" எனப்படும் உறவு முறைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். திருமணத்திற்கு முன் கன்னித்தன்மை என்பது இங்கு பொருட்படுத்தப்படவில்லை. தாய்த்தெய்வம் ஒரு கன்னியாக இருந்த அதே வேளை கன்னித்தன்மை என்பது பெண்களிடம் எதிர்பார்க்கப்படவில்லை என்பது ஒரு முரண்பட்ட கருத்தாக அமைந்துள்ளதை இங்கு காணக்கூடியதாக உள்ளது.

உயர்சாதியினரின் திருமணச் சடங்கின் ஒரு பகுதியான "கன்னிகா தானம்" என்பது பிராமணர்களின் திருமண சம்பிரதாயங்கள் ஊடாக சங்ககாலத்தின் பின்னரே இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்று மனுவின் சட்ட விதிகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எது எப்படியாயினும் கற்பு கட்டுப்பாட்டுக்கு உட்படாத எல்லா உணர்வுந்துதல்களையும் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்துவதாக இப்பொழுது இதன் பொருள் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பதை நாம் அவதானிக்கலாம். சாந்தம், அமைதி, மென்சொல், பேச்சில் துடுக்கைத் தவிர்த்தல் என்பன கற்புடைய பெண்களின் குணங்களாக கருதப்பட்டன. கற்பு உடல் தூய்மையை மட்டும் கருதாது ஒரு ஒழுக்கக் கோவையையும் கொண்டிருந்தது. எனவே இவற்றில் ஏதாவது ஒன்றில் மீறினாலும் அவள் ஒழுக்கம் கெட்டவளாக கருதப்படுகிறாள். இந்நிலையை எமது இன்றைய சமுதாயத்திலும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஒரு பெண் அளவுக்கதிகமாக பேசினாலோ அல்லது அதிகம் கோபப்பட்டுப் பேசினாலோ "இவள் என்ன பெண்ணா" என்ற கேள்விக்குட்படுவதை நாம் காணக்கூடியதாக உள்ளது. இதே குணாம்சங்கள் ஒரு ஆணிடம் காணப்பட்டால் அவன் ஆண், ஆண் என்றால் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறுத்து வைத்துக் கொள்ளும் போக்கு காலம் காலமாக நிலவி வரும் ஒன்றாக இன்றுவரையும் காணப்படுகிறது.

சங்க காலத்தில் கணவன் - மனைவிக்கிடையே இருந்த தலைவன்-தலைவி என்ற சமூக சமத்துவநிலை மாறி இப்பொழுது கணவனை கடவுளாகவும், தெய்வமாகவும், பதியாகவும் வணங்குகின்ற போக்கு காணப்படுகின்றது. தெய்வத்தை தொழாது கணவனையே தொழுது வாழும் கற்புடைய பெண் "பெய்" என்று சொன்னவுடன் மழை பெய்யும் என திருவள்ளுவர் கூறுகின்றார். சங்க காலத்திலேயே கற்பு கடவுளுக்குச் சமமாக மாற்றம் பெறுகின்றது என ஆய்வாளர் கூறுவது இங்கே குறிப்பிடத்தக்கது.

முன்னர் கற்பு ஒழுக்கக் கோவையையும் உள்ளடக்கியது என நாம் அவதானித்தோம். ஆனால் அது பின்னர் விரிவாக்கப்பட்டு உடல் தூய்மை என்று கருதாது மனத்தூய்மையையும் உள்ளடக்கியதாக வளர்ச்சி பெறுகின்றது என ஆய்வாளர் கூறுகின்றார். ஒரு பெண் வேறொரு ஆடவனை மனதால் நினைத்தால் கூட அவள் தூய்மையற்றவள் ஆகின்றாள் இக்காலகட்டங்களில் ஒரு பெண் பிரிதொரு ஆடவனை மனத்தால் நினைப்பது ஒரு கற்புடைய பெண்ணிற்கு அழகன்று என இலக்கியங்கள் கூறுகின்றன. பெண்களின் கற்பு பற்றிய இவ்வாறான அதீத எதிர்பார்ப்புகளால் அக்கால இலக்கிய அறிஞர்கள் கற்பு பற்றிய விரிவான வரைவிலக்கணத்தை கூறத் தூண்டியுள்ளது.

சங்ககாலத்தின் பின்னர் சிலப்பதிகாரத்தில் தோன்றிய கண்ணகி மூலம் கற்பு ஒரு அழியாத நிலையைப் பெற்றது. ஒரு அரசை அழிப்பதற்கான வலிமை கற்புக்கு இருந்தது என இக்கால கட்டத்தில் நம்பினர். இதன் பின்னர் தோன்றிய அனேகமான இலக்கியங்களும் கற்பின் மகிமையை வலியுறுத்துவனவாகவே அமைந்தன.

**சிலப்பதிகாரத்தில் வந்த கண்ணகி தனது கற்பின் வலிமையால் மதுரையை எரித்தாள்.**

**நல்லதங்களாள் ஈர விறகை எரியச் செய்தாள்**

**சந்திரமதி காட்டுத் தீயை குளிரச் செய்தாள்**

**தமயந்தி தன்னை இம்சித்த வன வேடனை சுட்டெரித்தாள்.**

**அநுசூயை தன் கற்பைச் சோதிக்க வந்த திரு மூர்த்திகளை குழந்தைகளாக்கி அமுதூட்டினாள்.**

**சாவித்திரி தன் கணவன் உயிரை யமன் கொண்டு செல்லும் சமயத்தில் அவனுடன் வாதாடி கணவன் உயிரை மீட்டாள்**

**நளாயினி பொழுது விடியாதிருக்க பிரதி சாபமிட்டு தேவர்கள் வேண்ட விடிய அனுக்கிரகித்தாள்.**


இப்படி நாம் கண்ட வரலாறுகளில் பெண்களின் கற்பின் வலிமை எவ்வாறு சோடனை செய்யப்பட்டு அதனை வலிமையாக்க முற்படுகின்றனர் என்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவை வெறும் வரலாற்றுத் தகவல்களாகவும் இதனைப் பின்பற்றி பெண்களை தெய்வங்களாக வழிபட்டு அதன் மூலம் அவர்களை ஒடுக்குவதற்கு இவற்றை பயன்படுத்துகின்றார்கள் என்பதை நம் பெண்கள் இன்னும் உணரவில்லை என்பதையே நான் கூற விரும்புகின்றேன்.

இதில் ஒன்றை ஆசிரியர் முக்கியமாக குறிப்பிடுகின்றார். இங்கு அனேகமாக பெண்கள் தமது வலிமையான கற்பினை நிரூபிப்பதற்கு "தீ"யையே பயன்படுத்தியிருப்பதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது தற்செயலான ஒன்றல்ல. அழிக்கும் ஆற்றலுக்கும் ஒன்றை படைக்கும் ஆற்றலுக்கும் அது குறியீடாக அமைந்துள்ளது என்பதை ஆசிரியர் விளக்க விரும்புகின்றார்.

சங்காலத்தில் தோன்றிய இலக்கிய அறிஞர்களுள் தொல்காப்பியரும் ஒருவர். இவர் பெண்களின் கற்பினை மிக உயர் நிலையில் வைத்துப் பேசுகின்றார். தொல்காப்பியர் கற்புடைய பெண்களை மூன்று வகையாக பிரிக்கின்றார். அவை முதானந்தம், புறங்காடு தாபநிலை என்பன. இவற்றில் முதானந்தம் என்பது கணவன் இறந்த செய்தியை கேட்ட உடனேயே மனைவி தனது உயிரை அந்த நிமிஷமே மாய்த்துக் கொள்வதைக் குறிக்கின்றது. இவள் கற்பின் உச்சநிலையை எய்தியவளாக கருதப்படுகிறாள். புறங்காடு எனப்படுவது தன் கணவனின் சிதையில் உடன்கட்டை ஏறுவதைக் குறிக்கின்றது இவள் இரண்டாம் நிலைக்குரியவள். தாபநிலை எனப்படுவது தன் கணவனின் இறப்பிற்கும் பின் விதவையருக்கு உரிய அனுஷ்டானங்களை வழுவாது பேணிவருவது இவள் மூன்றாம் நிலைக்கு உரியவள். முதலாம் நிலைக்கு உதாரணமாக சிலப்பதிகாரத்தில் பாண்டியனின் மனைவி தன் கணவனின் இறப்புச் செய்தியை கேட்டவுடன் தானும் விழுந்து இறப்பதை தொல்காப்பியர் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாறு கற்பு பற்றிய விளக்கமானது காலத்துக்குக் காலம் ஆளுக்கு ஆள் வேறுபட்டதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஒரு கால கட்டத்தில் திருமண விசுவாசத்தை மட்டுமே குறித்து நின்ற கற்பு பின்னர் இவ்வாறான கருத்தியல்களின் மத்தியில் நாம் கற்பு என்பதை நோக்கும் போது அதன் விளக்கம் தெளிவற்றதாகவும் மயக்கம் தரும் நிலையிலும் காணப்பட்டது. சங்ககாலத்தின் பின்னர் தோற்றம் பெற்ற இலக்கியங்களுக்கு உரைகள் எழுதப்பட்டன இதன் பின்னர் கற்பு என்ற சொல்லின் பொருள் தேடப்பட்டு அது கல், கற்றல் என்னும் பொருள் உடையது என வரையறுக்கப்பட்டது. இது முற்றிலும் வேறான ஒரு விளக்கமாக இருந்தது. புகழ் பெற்ற சங்க இலக்கிய உரையாசியர்கள் நச்சினாக்கினியார் சற்றே மரபுக்கு புறம்பான வகையில் கற்பு என்னும் சொல்லின் விளக்கத்தை தர முயன்றுள்ளார். அவர் கற்பு என்பது பெண்களுக்கு கற்பிக்கப்படுவது என வரையறுக்கின்றார். எனினும் இதிலும் ஒரு கேள்வி எழும்புகின்றது கற்பிதம் பெண்களுக்கு மட்டுமா? ஆணுக்கு இல்லையா? இது தொடர்பான விரிவான விளக்கம் என்பது ஆய்வாளரினால் விரிவாக்கப்படவில்லை.

தொடரும்.........



தமிழ்த் தேசிய அரசியல்
அன்றிலிருந்து இன்று வரை

அரசியல் தொடர் 20

- ஆதிசங்கரர் -

# நாவலரின் கருத்து நிலைகளை முன்னெடுத்த யாழ்சைவ பரிபாலன சபை

நாவலர் யாழ்ப்பாண சைவ, வேளாளரின் நலன்களைப் பேணினார். குடாநாட்டில் சாதியால் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக இருந்தார். சைவ வேளாளரின் நலன்களையும் சாதியமைப்பையும் கட்டிக்காப்பதற்காக, எமது பாரம்பரிய சடங்கு முறைகள் பலவற்றை கைவிட்டு சமஸ்கிருத மயமாக்கல் சிந்தனையை உருவாக்கினார், இதற்காக தமிழகத்தில் அப்போது ஊடுருவியிருந்த திராவிடவியல் கருத்துக்கள் குடாநாட்டில் ஊடுருவுவதை தடுத்தார். சைவவேளாளரை உயர்சாதிப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்புதற்காக சற்சூத்திரர், அசற்சூத்திரர் என்ற கோட்பாட்டை முன்வைத்தார். குடா நாட்டிற்கு வெளியேயான தமிழ் மக்கள் மீதான அக்கறையை காட்டாதிருந்தார்.

இவ்வாறான குற்றச் சாட்டுக்கள் நாவலரை நோக்கி முன்வைக்கப்படுகின்ற போதிலும், நடுநிலைநின்று ஆய்வுகளை மேற் கொள்பவர்கள் நாவலருடைய தொழிற்பாடுகளின் சாதகமான தன்மைகளையும் பார்ப்பதற்கு தயங்கக்கூடாது. நாவலர் பற்றி இதுவரை வந்த ஆய்வுகளில் நாவலரைப் போற்றி எழுதிய மரபுப் பேணுகைக் கூட்டத்தாரின் ஆய்வுகளும், நாவலரை நிராகரித்து எழுதிய முற போக்காளரின் ஆய்வுகளுமே அதிகளவில் களத்திற்கு வந்துள்ளன. அன்றைய காலகட்ட சமூகப் பின்னணியில் நின்று நாவலரின் தொழிற்பாடுகளை அது- விளைவித்த, சாதகபாதக தன்மைகளை நடுநிலை நின்று வெளிப்படுத்திய ஆய்வுகள் போதியளவிற்கு வெளிவர வில்லை.

இலங்கைத் தமிழரின் பாரம்பரியத்தில் நாவலரின் சாதகமான பங்களிப்புத்தான் என்ன? இக்கேள்வியை பேராசிரியர் சிவத்தம்பி அவர்களிடம் கேட்டேன் அவர் சொன்னார்.

"தமிழ் மொழி அபிவிருத்தி தொடர்பாக நாவலரின் பணி மகத்தானது. அவர் தமிழை வாத, விவாதங்களுக்குரிய மொழியாக பிரயோகிக்கலாம் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டினார். தமிழின் வீச்சை பல இடங்களுக்கும் கொண்டு சென்றார். தமிழ் மொழியில் மிகச் சுத்தமான பதிப்புக்களை வெளியிட்டார். தமிழை பாடநூலாக கற்பதற்குரிய வன்முறையான பாடநூலை எழுதினார். தனது கல்வி முறைமையில் தமிழுக்கு முக்கிய இடத்தினைக் கொடுத்தார். நவீன தேவைகளை நிறைவு செய்வதற்கான கருவியாக தமிழையும் பயன்படுத்தினார், தமிழ்ப் பத்திரிகை எழுத்துக்களை ஈழத்தில் தொடக்கி வைத்தார். எல்லாவற்றுக்கும் மேலாக அவர் தனது கொள்கைகளிலும், செயற்பாடுகளிலும் திரிகரண சுத்தியாக, நேர்மையாக நின்றார்"

1879ம் ஆண்டு நாவலர் மரணமடைந்ததை தொடர்ந்து அவருடைய மாணாக்கர்கள் அவரது பணியை முன்னெடுத்துச் சென்றனர். மரபுப் பேணுகையில் இறுக்கமாக இருந்த போதும், ஆங்கில மொழிமூலக் கல்வியை இவர்கள் ஏற்றுக் கொண்டனர். இது பற்றி முன்னரே பார்த்துள்ளோம்.

வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் 1888ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29ம் திகதி ஏப்பிரல் மாதம் 29ம் திகதி நாவலரின் மருமகனான பொன்னம்பல பிள்ளையினால் சைவ பரிபாலனசபை உருவாக்கப்பட்டது. இச்சபையினால் "THE HINDU DRAGAN இந்துசாதனம்" என்ற இரு மொழிப்பத்திரிகையும் ஆரம் பிக்கப்பட்டது. இவை இரண்டும் நாவலரின் கருத்துக்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்றன.

சைவ பரிபாலன சபை உருவாக்கப்பட்ட போது அச்சபை தனது நோக்கங்களை பின் வருமாறு முன்வைத்தது.

1. சைவ சமயத்தை வளர்க்கவும், சைவக் கல்விக்கு ஒத்துழைப்பு நல்கி சைவ மக்களுக்கு அறிவூட்டவும், முயற்சிப்பதுடன் வேதம், ஆகமம், சித்தாந்த சாஸ்திரக் கருத்துக்கள், இவற்றை சைவமக்களிடையே பரப்புதல்.

2. வைதீக சமய உண்மைகளையும், கேட்பாடுகளையும் தீவடங்கிலும் சென்று பிரச் சாரம் செய்யக் கூடிய திறமையான பிரச்சாரக் குழு ஒன்றை அமைத்தல்.

3. சைவ சமூகத்தினது அரசியல், சமூக, சமய, அபிலாசைகளை வெளிப்படுத்தக் கூடிய பத்திரிகைகள், இலக்கியம், விஞ்ஞானம் சமயம் ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட நூல்களைக் கொண்ட ஓர் நூலகம் நிறுவுதல்.

4. தமிழ் இலக்கியம், சமயம், பக்தி இலக்கியங்கள், மூலம் மக்களுக்கு சமய அறிவை வளர்த்தல்.

5. உயர்தர உலகியற் கல்வியையும், சமயக்கல்வியையும் போதிக்கக் கூடிய ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவுதல், சைவப் பாடசாலைகளுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை அச்சிட்டு உதவுதல்.

6. சைவ சமயப் பரீட்சை வைத்து அதனால் திற மையடைந்தவர்களுக்கு வெகுமதி வழங்குதல், சான்றிதழ் வழங்குதல்.

7. சைவ சம்பந்தமான அறிக்கைகள், பத்திரிகைகள் உருவாக்குதல்.

8. இவற்றிற்கு பொருத்தமான முறையில் பரிபாலிக்க வேண்டிய பொருளாதார அமைப்பை ஏற்படுத்தல்.

9. பழைய கோவில்களைப் புதுப்பித்தும், மேற்பார்வை செய்தும் வருவதற்கு திறமை வாய்ந்த குழுவொன்றை ஏற்படுத்தி செயற்படுத்துதல்

10. வைச மடங்களைப் பரிபாலித்தல், மக்கள் ஆதரவுடன் கூடிய சொத்துக்களைச் சேர்த்து கூடிய பயனைப் பெறச் செயற்படுத்துதல்.

11. சைவ சமய பழக்க வழக்கங்கள், சைவக் கிரியை முறைகள் இவற்றைச் சரியான முறையில் மேற்பார்வை செய்தல்.

12. பெண்களுக்கு சமய அறிவையும், கல்வியையும் ஊட்டுதல்.

13. இலவச மருத்துவம், உளப்பிணி போன்ற சேவைகளை சைவ மக்களுக்கு செய்தல்.

14. தமிழ் இலக்கியம், கலை, நாடகம், இவற்றை வளர்ச்சி அடையச் செய்ய உற்சாகப்படுத்தல்.

15. அறிவை வளர்க்க உற்சாகப் படுத்துதல், உடல் நல ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், அறிவுவளர்ச்சியில் ஈடுபடுமுகமாக ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

மேற்கூறப்பட்ட சைவ பரிபாலன சபையின் நோக்கங்களில் நாவலர் தொடக்கி வைத்த பாரம்பரிய மரபைப் பேணுதல், அதற்கான கருத்து நிலைகளால் புலமையூட்டப்பபடட மக்கள் சமூகத்தை உருவாக்குதல், அவர்களுக்கு அரசியல், பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொடுத்தல். போன்றன தொக்கி நிற்பதை அவதானிக்கலாம். சட்டசபை உறுப்பினராக இருந்த அ.கனககசபை சைவ பரிபாலன சபையின் தலைவராக விளங்கினார் என்பதையும் இணைத்துப் பார்க்கும் போது தமிழர் அரசியலில் இதன் அழுத்தம் எவ்வாறு இருந்திருக்கும் என்பதை ஊகித்து அறிந்து கொள்ளலாம்.

1890ம் ஆண்டு யூலைமாதம் 29ம் திகதி நடைபெற்ற சைவ பரிபாலன சபையின் கூட்டத்தில் எஸ்.ரீ.எம். பசுபதிச் செட்டியார் கொண்டு வந்த தீர்மானத்துக்கு அமைய யாழ் இந்துக் கல்லூரியை சைவ பரிபாலன சபை பொறுப் பேற்றுப் பரிபாலிப்பது என தீர்மானிக்கப்பட்டது.

"மதுரை திருமலை நாயக்கர் மகால்" கட்டிடத்தை போன்ற பாரிய கட்டிடத் தொகுதிகள் யாழ் சைவ பரிபாலன சபையால். கட்டப்பட்டன. பசுபதிச் செட்டியர் யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியில் தமக்கு இருந்த கட்டிடத் தொகுதி ஒன்றை இநதுக்கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார். இக் கட்டிடத் தொகுதியிலிருந்து வாடகைப்பணம் இன்றுவரை யாழ் இந்துக் கல்லூரியின் பரிபாலனத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1893ம் ஆண்டு கல்கத்தா பல்கலைக் கழகம் இக்கல்லூரியை தமது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கக்கூடிய தராரதரமுடைய கல்லூரியாக அங்கீகரித்தது. 1895ம் ஆண்டு இக் கல்லூரியை தனது இணைப்புக் கல்லூரிகளில் ஒன்றாக்கியது. 1902ம் ஆண்டு இக் கல்லூரி இலங்கைச் சட்ட சபையினால் பதிவு செய்யப்பட்டது.

யாழ் இந்துக் கல்லூரியின் உருவாக்கத்தை தொடர்ந்து கொக்குவில் இந்துக்கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி, காரைநகர் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி என்பன ஏப்ரல் மாதம் 29ம் திகதி சைவ பரிபாலன சபையின் முயற்சியினால் தொடங்கப் பெற்றன.

சைவ பரிபாலன சபைக்கு புறம்பாக கந்தையா உபாத்தியாரினால் கந்தரோடையில் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி 1894இலும், தெ.து. துரை யப்பாவினால் தெல்லிப் பளையில் மகாஜனக் கல்லூரி 1910இலும் தோற்றம் பெற்றன.

இவ் இந்துக்கல்லூரிகள் ஆங்கிலேய அரசின் நவீனப்பாடுகளை சைவப் பாரம்பரியத்திற்குள் உள்வாங்குவதை சுலபப்படுத்தின.

தொடரும்...

நாவலர் யாழ்ப்பாண சைவ, வேளாளரின் நலன்களைப் பேணினார். குடாநாட்டில் சாதியால் ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக இருந்தார். சைவ வேளாளரின் நலன்களையும் சாதியமைப்பையும் கட்டிக்காப்பதற்காக, எமது பாரம்பரிய சடங்கு முறைகள் பலவற்றை கைவிட்டு சமஸ்கிருத மயமாக்கல் சிந்தனையை உருவாக்கினார், இதற்காக தமிழகத்தில் அப்போது ஊடுருவியிருந்த திராவிடவியல் கருத்துக்கள் குடாநாட்டில் ஊடுருவுவதை தடுத்தார். சைவவேளாளரை உயர்சாதிப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பதற்காக சற்சூத்திரர், அசற்சூத்திரர் என்ற கோட்பாட்டை முன்வைத்தார். குடா நாட்டிற்கு வெளியேயான தமிழ் மக்கள் மீதான அக்கறையை காட்டாதிருந்தார்.

# ஒற்றுமையின்மையினால் பறிபோயுள்ள பிரதிநிதித்துவம்

- ஓஷோ யதீந்திரா.

நடந்துமுடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்ட சார்பில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி மூன்று ஆசனங்களையும், (இரண்டு முஸ்லிம் உறுப்பினர்கள், ஒரு சிங்கள உறுப்பினர்), ஐக்கிய தேசியக் கட்சி ஒரு ஆசனத்தையும் (முஸ்லீம் உறுப்பினர்) பெற்றுக் கொண்டதைதொடர்ந்து கடந்த ஐம்பது வருடங்களாக பாதுகாக் கப்பட்டு வந்த தமிழ்ப் பிரதிநிதித் துவம் பறிபோயிருக்கிறது. ஒன்றுபட்டால் உண்டு பிரதிநிதித் துவம் என்று எவ்வளவோ எடுத்து கூறியும் அதற்காக எத்தனையோ பிரயத்தனங்களை மேற்கொண்டும் ஏற்காத தமிழ்கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் தனித்து போட்டி யிட்டதை தொடர்ந்தே திருகோணமலை மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோனது. ஆனால் தமிழ் அரசியல் வாதிகள் இது பற்றி அக்கறைப்பட்டதாகவோ கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை. கடந்தகால வரலா றுகளை கிண்டி ஒருவரை ஒருவர் தரம் கெட்ட முறையில் விமர்சித்தும், பழையபாடல்களால் உரத்து சத்தமிட்டும் சுமார் ஒரு மாத காலமாக திருமலை நகரை யே உலுக்கிய அரசியல் கட்சிகளும் சுயேட்சை குழுக்களும் கடுகை பிரித்தெடுத்துக்கொண்ட வெற்றிக்க ழிப்பில் வீடுகளுக்குள் பதுங்கிக் கொண்டனர்.



இத் தேர்தலின் போது தமிழ் பிரதிநிதித்துவத்திற்காக போட்டி யிட்ட அரசியல் கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி (14088) ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (4522) அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (3748) தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (498) ஆகியனவும் பெ. சூரியமூர்த்தி (2625) அ. பாக்கியத்துரை வரதர் அணி (762) ஆகிய சுயேற்சை குழுக்களும் இணைந்து பெற்ற வாக்குகளின் மொத்த எண்ணிக்கை சுமார் 27000 அளவினதே. இத்தனைக்கும் திருகோணமலை மாவட்டத்தின் பதிவு செய்யப்பட்ட தமிழ் வாக்குகளின் எண்ணிக்கை 78524 (மாவட்டத்தின் பெரும்பா ன்மை வாக்குகள்) இவற்றுள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் வாக்குகளும் உள்ளடங்கும் என்பதும், இம்மக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்வதை விடுதலை புலிகள் விரும்புவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (1994ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலின்போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற வாக்குகள் சுமார் 500 அளவினதே).

இத்தகையதொரு இக்கட்டான நிலையை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும், சுயேட்சை குழுக்களும் நன்கு அறிந்திருந்தன, ஆனால் தலைமைத்துவ மோகத்தாலும், சுயநலப் போக்கினாலும் பிரதிநிதித்துவத்தை இழந்து நிற்கின்றனர். அன்று தமிழர் மகாசபையின் இணக்கப்பாட்டு முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் நிட்சயமாக இந்தநிலை ஏற்பட்டி ருக்காது என்கின்றனர் திருமலை மண்ணில் அக்கறையுள்ள சிலர் .(தமிழர் மகாசபையில் உள்ள ஒருசிலர் தேர்தல்காலங்களில் இரு பெரும் பேரினக் கட்சிகளின் ஆதரவாளர்களாக செயற்பட்டதாக கூறப்படுகிறது) தமிழர் மகா சபையின் கோரிக்கைகளை ஆரம்பத்திலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தர் புறக்கணித்திருந்தார் என்பதும் அதைத் தொடர்ந்து மகாசபை மேற்கொண்ட முயற்சிகள் எவ்வாறு தோல்வியுற்றன என்பது பற்றியும் கடந்த 10.08.2000 அன்று ஆதவனில் வெளியான திருமலை தேர்தல் நிலவரம் பற்றிய கட்டுரை யில் நான் தெளிவாக குறிப்பிட்டிருந்தேன்.

இத்தனைக்குமப்பால் இம்முறை நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலின்போது, பெரும்பாலான தமிழ் வாக்காளர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித் துள்ளனர். குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தின் ஆலங்கேணி தம்பலகாமம் ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்கள் ஒட்டுமொத்தமாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித் துள்ளதை தரவுகள் ஊர்ஜிதப் படுத்துகின்றன. இதற்கு அப்பகுதி மக்கள் விடுதலைப்புலிகளே தங்களிடம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்கும்படி கூறியதாக கூறுகின்றனர். இதனை ஏற்காத சில கொள்கை வாதக் கட்சிகள் அவர்கள் அனைவரும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பா ளர்களின் பணத்துக்கு விலை போனவர்களென குற்றம் சாட்டுகின்றனர். (பிரதேசப்பற்றற்ற திருமலை வாழ்தமிழர்கள் அப்படி செய்திருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை).

கடந்த கால தேர்தல் வரலா றுகளை பொறுத்தவரையில் திருமலையின் தமிழ் பிரதிநிதித் துவத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியினரே தொடர்ந்தும் கைப்பற்றி வந்திருக்கின்றனர், ஆனால் இம்முறை அவர்கள் எதிர்பார்த்தபடி இலகுவாக வெற்றி பெற முடியவில்லை. 1994ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலின்போது கூட்டணியினர் பெற்ற 28000 வாக்குகளில் அரைப்பகுதியையே இம்முறை பெற்றிருக்கின்றனர். இத்தகையதொரு பாரியவீழ்ச்சிக்கு கூட்டணியினர் மீது மக்கள் கொண்டிருந்த அதீத வெறுப்பே காரணம் எனலாம். தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் ஒரு சிலரது கட்சிசார் தனிப்பட்ட நடவடிக்கைகள் மக்களை பொருட்படுத்தாத தன்மை, தாங்கள் என்ன செய்தாலும், எப்படி நடந்து கொண்டாலும் மக்கள் (செக்குமாடுகள்போல்) தங்களுக்கே வாக்களிப்பார்கள் என்ற, கூட்டணியினரின் வறட்டு நம்பிக்கை ஆகியவையே மக்களின் அதீத வெறுப்பிற்கு காரணமாக அமைந்தது. அத்தோடு இம்முறை நடந்த தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மத்தியில் தமிழ் பிரதிநிதித்துவத்தை காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வை விட, யார் பாராளுமன் றத்திற்கு தெரிவாவது போன்ற போட்டி மனப்பான்மையிலான கோஷ்டிவாத பிரச்சாரங்களே மேலோங்கியிருந்தது. ஆனால் இத்தகைய காரணங்கள் எதனையும் ஏற்றுக் கொள்ளாத தமிழர் விடுதலைக் கூட்டணியினரோ இம்முறை தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோனதற்கு அகில இலங்கை தமிழ் காங்கிஸ் காரணமென சாதிக்கின்றனர். இதுபற்றி கருத்து கூறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட முதன்மைவேட்பாளர் சட்டத்தரணி கா. சிவபாலன் எமது கட்சி ஒரு பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கு மேலதிகமாக 1516 வாக்குகளே தேவையாக இருந்தது. இம்முறை திருமலையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் போட்டியிடாது இருந்திருக்குமானால் நிச்சயமாக அது சாத்தியப்பட்டிருக்கும். அத்தோடு ஒரே ஒரு சிங்கள உறுப்பினரான குணவர்த்தன பிதிநிதித்துவம் இழந்திருப்பார் ஒரு புதிய வரலாறும் உருவாகியிருக்கும் என்று கூறும் கா. சிவபாலன் மேலும் கல்லோயா குடியேற்றத் திட்டம் போன்ற இனவாத குடியேற்றத்திட்டங்களை தமிழ் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்டு நடாத்திய ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சராக இருந்து குளிர்காய்ந்த அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம் கூட திருமலையில் தமிழ் காங்கிரஸை போட்டியிடச் செய்வதன் மூலம் தமிழ் பிர திநிதித்துவம் பறிபோக வழிசமைக்கவில்லை. அமரர் புத்திரர் (மாமனிதர்) குமார் பொன்னம்பலமும் அதனை அனுசரித்தே தனது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். ஆனால் அவர்களது வாரிசுகள் என்று தங்களை சொல்லிக் கொள்ளும் ஒரு சிலர் தங்களது வடிகட்டிய முட்டாள்தனமான நடிவடிக்கை மூலம் தமிழ் பிரதிநிதித்துவம் பறிபோவதைமிகச்சிறப்பாக முன்நின்று நடாத்தியுள்ளனர் என்றும் கூறுகிறார் சட்டத்தரணி கா.சிவபாலன்.

இதற்கு பதில் கூறும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முதன்மை வேட்பாளர் சட்டத்தர ணி சி.சுபாஷினி பிரதிநிதித்துவ இழப்பிற்கு மக்களே காரணம் என்கிறார். (சுபாஷினி மக்களிற்கு என்ன செய்தார் என்பது வேறுவிடயம்) மக்கள் பொறுப்புணர்வுடன் வாக்களிக்கவில்லை என்று மக்களை சாடும் சி.சுபாஷினி எம்மை போட்டியிடாது இருக்கும்படி கூறுவதற்கு கூட்டணியினருக்கு என்ன அருகதை இருக்கிறது? என்றும், அங்கலாய்க்கிறார். மேலும் அவர் வறட்டுத்தனமாக பாக்கட்டுக்குள் 25000 வாக்குகள் இருப்பதாக கூறிய கூட்டணியினர் இன்று தமது தோல்விக்கு அ.இ. தமிழ் காங்கிரஸை காரணம் காட்டுவது வேடிக்கையாக இருக்கிற து. உண்மையில் இம்முறை கூட்டணியினர் பெற்ற வாக்குகளில் அரைவாசி கள்ள வாக்குகள் என்றும் கூறுகிறார்.

எது எவ்வாறோ பல வருடங்களாக நிலைத்திருந்த திருகோணமலை மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதித்துவம் இம்முறை பறிபோனதில் அனைத்து அரசியல் குழுக்களுக்கும் காத்திரமான பங்குண்டு என்பதே உண்மை. ஒரு வேளை வரும் வருடத்தில் நகராட்சி மன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டால் திருமலையில் இன்னும் சில புதிய கட்சிகள் களம் இறங்கினாலும் ஆச்சரியப்படு வதிற்கில்லை. எனவே, அனைத்து அரசியல் குழுக்களும் கட்சி சார்புகள், கொள்கைகள் மறந்து ஒன்றுபடுவதன் மூலமே எதிர்காலத்தில் இத்தகைய இழப்புகள் ஏற்படுவதை தடுக்க முடியும்.

---

தவறுக்கு மன்னிக்கவும் சென்ற இதழில் பிரசுரமான மலையகக் கட்டுரையின் தொடர்ச்சி தவறுதலாக இடம்பெறவில்லை ஆதலால் இந்த இதழில் அதன் தொடர்ச்சி பிரசுரமாகின்றது.

## தோட்டத் தொழிலாளர்களும் தொழிற்சங்கத் தலைமைகளும்

பச்சோந்தியாக மாற முடிகிறது.

ஒரு சமூகத்தின் பொறுப்புள்ள தலைவன் அல்லது, அச்சமூகத்தின் தனித்துவத்தை பாதுகாக்கக் கூடிய ஒரு பிரதிநிதி என்றால் இப்படி எல்லாம் இவர்களால் நடந்து கொள்ள முடியாது. ஏன் எனில் இவர்கள் உருவாக்கிய தொழிற்சங்கங்கள் உண்மையாக மலையக மக்களின் மீட்சிக்காக உயர்வுக்காக உருவாக்கப்பட்டிருக்குமானால் அதற்கான தனித்துவமான கொள்கைகளும் கோட்பாடுகளும் இருந்திருக்க வேண்டும் அல்லது வெறும் கூலி உயர்வு, தொழிற் சம்பந்தப்பட்ட தொழிற் சட்டங்களையாவது உருப்படியாக கொண்டிருத்தல் வேண்டும். எமது மலையக தொழிற் சங்கத் தலைமைகள் இவைகள் இரண்டுமே இல்லாத ஒரு இரண்டும் கெட்டான் நிலையில் இருப்பது தான் இன்றைய எமது மலையகத்திலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களினதும் உண்மை நிலையாகும்.

ஆரம்ப காலங்களில் ஓரளவுக்காவது தொழிலாளர் வர்க்கத்திற்கு சேவை செய்து வந்த தொழிற் சங்கங்கள் 70களின் பின் தொழிலாளர்களின் வேதனத்திலிருந்தே மாதா மாதம் தொழிற்சங்க சந்தா அறவிடும் சட்டம் வந்ததின் பின்பும், ஏழு நபர்கள் இருந்தால் ஒரு தொழிற் சங்கத்தை உருவாக்கலாம் என்ற S.W.R.D. பண்டாரநாயக்காவால் கொண்டு வரப்பட்டிருந்த சட்டமும் தொழிலாளர் வர்க்கத்தை சிதறடிக்கும் பிழைப்புவாத தொழிற்சங்க தலைவர்கள், மழையைக் கண்டு காளான்கள் தோன்றும் கணக்கில், மலையகத்தில் தொழிற் சங்கங்கள் தோன்றத் தொடங்கின. இன்றும் அது தொடர்கின்றது.

இப்படிப்பட்ட ஓர் துர்ப்பாக்கியமான நிலை இனியும் தொடருமானால் இனிவரும் காலங்களில் மலையக மக்கள் ஒரு துரும்பளவு உரிமைகளையோ, சலுகைகளையோ தோட்ட முதலாளிகளிடம் பெற்றுக் கொள்ள முடியாத நிலை உருவாவதை எவராலும் தடுத்து நிறுத்தி விட முடியாது.

எந்தக் காரணத்திற்காக தொழிற் சங்கங்கள் உருவானதோ அந்தக்காரணத்தை எல்லாம் இழந்து இன்று தொழிற்சங்கங்களே தோட்டத் தொழிலாளர்களை சுரண்டும் ஒரு பிரதான ஸ்தாபனமாக ஆகிவிட்டது. இந்த வேலிகளே பயிர்களை மேயும் விபரீதத்தில் இருந்து தோட்டத் தொழிலாளர்களை காப்பாற்ற வேண்டிய வரலாற்று தேவை ஒன்று, மலையகத்தில் படித்த, சமூக உணர்வுள்ள, இளம் சந்ததியினர்களின் முன்வைக்கப்பட்டு விட்டது.

காலாவதியாகிப் போன சமூக கருத்துக்களையும், சிந்தனைகளையும் வேரோடு வேரடிமண்ணோடும் அகற்றி விட்டு அவ்விடத்தில் காலத்திற்கேற்ற, புதுமையான, புதிய சிந்தனைகளை விதைத்துஅதை வளர்த்தெடுக்க வேண்டிய இந்தப் பாரிய வரலாற்று கடமையை செய்து முடிப்பதற்கு, ஆற்றலும், அறிவும் கொண்ட எமது மலையக இளைய சமூகம் முன்வரவேண்டும்.

தோழர்.

**இந்திரா காந்தியின் நினைவு தினத்தை குறிக்கும் கட்டுரை**

# ஈழப் பிரச்சினையில் இந்திரா காந்தி ஆரம்பித்து வைத்த இரட்டை நிலைப்பாடு

"இலங்கையின் ஐக்கியத்துக்கும், ஒருமைப்பாட்டுக்கும், சுதந்திரத்துக்கும் சார்பான ஒரு நிலைப்பாட்டையே இந்தியா கொண்டுள்ளது. இந்தியா மற்றைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் ஒரு போதும் தலையிட்டதில்லை. இருந்த போதிலும் இரு நாட்டு மக்களிடை யேயுமான - குறிப்பாக தமிழர்களுடனான நெருக்கமான கலாசார , சரித்திரத் தொடர்புகள் காரணமாக அங்கு இடம் பெறக் கூடிய சம்பவங்களால் நாம் பாதிக்கப்படாமல் இருக்க முடியாது...!"

இந்தியாவின் தவப் புதல்விகளில் ஒருவர் என வர்ணிக்கப்படும் இந்திரா காந்தி, ஈழத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக எடுத்துக்கொண்ட நிலைப்பாடு என்ன் என்பதை விளக்குவதற்கு அவரது இந்த கூற்றே போதுமானது. 1983 ஜூலைக் கலவரத்தின் பின்னர் இப் பிரச்சினையில் தலையிட்ட போது இந்திரா கூறிய வாசகம் தான் இது. 83 ஆகஸ்ட்டில் வெளிவிவகார அமைச்சராக இருந்த ஏ.சி.எஸ்.ஹமீத் புதுடில்லி சென்றிருந்தார். அவருடன் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் விஷேட தூதுவர் எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனவுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் பத்திரிகையாளர்களிடம் உரையாற்றிய போதே இந்த நிலைப்பாட்டை இந்திரா விளக்கினார்.

இந்திரா காந்தியின் இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கை 1980களின் ஆரம்பத்தில் வகுக்கப்பட்டது. இந்திரா கோட்பாடு (Idindra0's Doctoryne) என வெளியுறவுத் துறை கொள்கை வகுப்பவர்களால் குறிப்பிடப்படும் இந்தக் கோட்பாடே அவரைத் தொடர்ந்து பதவிக்கு வந்த ராஜீவ் காந்தியாலும் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்திரா காந்தி என்றவுடன் தமிழ் மக்கள் மத்தியில் ஒரு அனுதாபம் எழுவது வழமை. "இந்திரா இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது" என ஈழத் தமிழர்கள் சிலர் இப்போது கூட ஆதங்கப்படுவதும், இந்திரா மீது அளவுகடந்த பக்தியை வெளிப்படுத்துவதும் வழமைதான். அதாவது ஈழத் தமிழர்களின் பால் சரியான ஒரு நிலைப்பாட்டை இந்திரா எடுத்திருந்தார். ஆனால் ராஜீவ் ஈழப் பிரச்சினையை தவறாகக் கையாண்டு நிலைமைகளை மோசமடையச் செய்து விட்டார் என ஒரு தரப்பினர் கருதினாலும், அதற்கான வேர்கள் இந்திராவின் காலத்திலேயே முளைவிடத் தொடங்கி விட்டன.

உண்மையில் ஈழப் பிரச்சினையில் இந்திரா காந்தி சுமார் இரண்டு தசாப்த காலத்துக்கு முன்னர் எடுத்துக்கொண்ட நிலைப்பாட்டை ஒட்டியதாகவே இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடும் உள்ளது. அப்போது இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை வடிவமைப்பதில் செல்வாக்குச் செலுத்திய சில காரணிகள் இப்போது இல்லாத போதிலும், இந்தியா கைக்கொள்ளும் அடிப்படைகளில் பெரியளவிலான மாற்றங்கள் இடம்பெறவில்லை.

இலங்கை விவகாரத்தில் திருப்பு முனையை ஏற்படுத்திய சம்பவம் 1983 ஆம் ஆண்டு ஜூலை கலவரம் தான். ஈழப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடுவதற்கான அந்த அருமையான வாய்ப்பை அந்தக் கலவரம்தான் இந்தியாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. ஜூலைக் கலவரம், இதனைக் கையாள்வதற்கு இந்தியா கையாண்ட தந்திரோபாயங்கள், இந்தியா வெளியுறவுக் கொள்கையில் அந்தக் கலவரம் ஏற்படுத்திய தாக்கங்கள் என்பவற்றைப் பார்ப்பதற்கு முன்னதாக, இந்தக் கலவரத்துக்கு முந்திய காலத்தில் இலங்கை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாடு எப்படியிருந்தது என்பதையிட்டு, மேலும் சில விடயங்களைப் பரிசீலனை செய்வோம்.

1980களின் ஆரம்பத்திலேயே தமிழ்ப் போராளிகள் தமிழகத்தைத் தமது பின்தளமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள் என்பதில் எந்த ரகசியமும் இல்லை. இது தொடர்பான தகவல்கள் இந்திரா காந்திக்கும் கிடைத்தன. போராளிகளைத் தமிழகத்திலிருந்து இயங்க அனுமதிக்கக் கூடாது. றோ.ஐ.பி. ஆகிய மத்திய புலனாய்வு அமைப்புக்கள் இந்திராவைக் கடுமையாக எச்சரித்தன.





இந்திரா காந்தியும் இந்தக் கருத்துடன் உடன்பட்ட ஒருவராகவே காணப்பட்டார். இருந்த போதிலும் இவ்விடயத்தில் அவரால் கடுமையாக நடந்துகொள்ள முடியாமைக்கு தமிழக அரசியல் நிலைமைகள் தான் காரணம். தமிழக உணர்வுகளை மீறிச் செயற்படுவது தமது அரசியலுக்குப் பாதகமானது என்பதை இந்திரா கண்டு கொண்டார். உண்மையில், மத்திய அரசு இவ்விடயத்தில் கடுமையாக நடந்துகொண்டால், தமிழக அரசு தனக்குத் தெரியாமல்- தனியாகச் செயற்பட முற்படலாம் என இந்திரா அஞ்சினார். அதனால், போராளிகளுக்கு உதவுவது போலக் காட்டிக்கொண்டு, அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசின் கண்காணிப்புக்குள்- கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என இந்திரா கருதினார். தமிழக அரசுடன் தொடர்பு பட்டிருந்த போராளிகளை மத்திய அரசு தனது வலையில் வீழ்த்தியது இப்படித் தான்.

இலங்கை தொடர்பான இந்தியாவின் நடவடிக்கைகள் அனைத்தும் இந்திரா காந்தியின் பெரும் நம்பிக்கைக்குரியவராக இருந்த (K.N.Kao) என்பவராலேயே திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டிருந்தது. இதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை

**ரதன்**

நாயர் என்பவர் ஏற்றிருந்தார். ஆரம்ப காலத்தில் இலங்கை தொடர்பான இந்தியாவின் நடவடிக்கைகள், புதிதாக அமைக்கப்பட்ட ஒரு புலனாய்வு நிறுவனமான "மூன்றாவது ஏஜென்சி" (Third Agency) மூலமாகவே முன்னெடுக்கப்பட்டது. இந்தியாவின் பிரதான புலனாய்வு நிறுவனங்களான "ஐ.பி (I.B) மற்றும் "றோ" (RAW) ஆகியன இதில் தலையிடவில்லை.

புதிய ஒரு புலனாய்வு நிறுவனத்தை ஆரம்பித்து, அதன் மூலமாக இலங்கை தொடர்பான நடவடிக்கைகளை இந்திரா காந்தி கையாண்டமைக்கு பல காரணங்கள் இருந்தன. முக்கியமாக 1977 முதல் 1980 வரையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்த மொரார்ஜி தேசாயின் ஆட்சிக் காலத்தில் "றோ" மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. வரவு- செலவுத் திட்டத்தில் இதற்கான ஒதுக்கீடுகள் வெட்டப்பட்டன. இதன் நடவடிக்கைகள் தடுக்கப்பட்டன. "றோ" இந்திரா காந்திக்கு நம்பிக்கையான ஒரு அமைப்பாக இருந்ததாலேயே மொரார்ஜி தேசாய் திட்டமிட்ட இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். இதனைவிட இந்திரா காந்தியால் நம்பிக்கை வைக்க முடியாதவர்கள் பலரும், இந்த அமைப்பின் முக்கியமான பொறுப்புக்களை ஏற்றிருந்தார்கள்.

1980 ஆம் ஆண்டில் இந்திரா காந்தி மீண்டும் அதிகாரத்துக்கு வந்தபோது, "றோ" வை முழுமையாகவே மாற்றியமைக்க வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது, இதனால் தான். அதாவது மொரார்ஜி தேசாயின் பதவிக் காலத்துக்குப் பின்னர் "றோ" மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட முடியாதவராக இந்திரா காந்தி இருந்தார் என்பதே இதன் சாராம்சம். புலனாய்வு நடவடிக்கைகளில் மட்டுமன்றி, மற்றும் பல செயற்பாடுகளிலும், மறைமுகமாக ஈடுபடும் இந்த அமைப்பு, தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள், தனக்கு முழுமையான நம்பிக்கையானதாக- விசுவாசமானதாக இருக்க வேண்டும் என இந்திரா காந்தி எதிர்பார்த்தார். அதிகாரங்களைத் தன்னிடம் முழுமையாக வைத்திருக்க விரும்பும் எந்த ஒரு பிரதமருக்கும் உள்ள எதிர்பார்ப்புத்தான் இது!

இதனை உடனடியாகச் செயற்படுத்த முடியாத கட்டத்தில் தான் "றோ", "ஐ.பி" போன்றவைகளை ஒரு புறம் ஒதுக்கிவைத்து விட்டு, தனக்கு மிகவும் நம்பிக்கையானவர்களின் துணையுடன் மூன்றாவது ஏஜென்சியை இந்திரா காந்தி உருவாக்கினார். இலங்கை நடவடிக்கைகளைக் கையாள்வதற்கென்றே பிரதானமாக அமைக்கப்பட்ட இந்த மூன்றாவது ஏஜென்சி, இந்திரா காந்தியின் மரணத்தாலும்- அதனைத் தொடர்ந்து அதிலிருந்து விலகிக் கொண்டமையினாலும் செயலிழந்தது. ஆனால் இதன் நடவடிக்கைகள் அனைத்தையும், "றோ" தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது எனக் குறிப்பிடுகின்றார். இலங்கை- இந்தியா விவாகாரங்கள் தொடர்பான ஆய்வாளரான றோஹான் குணரட்ண இருந்த போதிலும், இலங்கை தொடர்பான நடவடிக்கைகளை வடிவமைத்து, திட்டமிட்டு, நடைமுறைப்படுத்திய அமைப்பாக மூன்றாவது ஏஜென்சியே இருந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த மூன்றாவது ஏஜென்சி முழுமையாக இந்திரா காந்திக்கு விசுவாசமான ஒரு அமைப்பாக இருந்தது. இந்திராவால் இந்திராவுக்கென அமைக்கப்பட்ட ஒரு அமைப்பு என்றே இதனைக் கூறுவார்கள். இந்திராவின் நேரடி உத்தரவின்படி இந்த அமைப்புக்கு வரையறுக்கப்படாத வளங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. தேசிய பந்தோபஸ்து ஆலோசகரமான ஆர்.என்.கா இந்த அமைப்புக்குத் தலைவராக நியமிக்கப்பட்டது கூட தனக்கு மிகவும் நம்பிக்கையானவர்களை அவ்வமைப்பின் முக்கிய பொறுப்புக்களில் வைத்திருப்பதற்கு இந்திரா காந்தி விரும்பியதால் தான். உண்மையில் இந்தியாவின் நலன்களை மட்டுமன்றி, இந்திரா காங்கிரசினதும் இந்திரா காந்தியினதும் நலன்களையும் கண்காணிக்கும் பொறுப்பு இந்த அமைப்பிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தது.

இந்த மூன்றாவது ஏஜென்சிதான் அப்போது இந்தியாவின் எரியும் பிரச்சினையாக இருந்த பஞ்சாப் விவகாரத்திலும் முக்கியமான பங்கை ஆற்றியது, பஞ்சாப்பியர்களின் அரசியல் ரீதியான போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில்- தீவிரவாதிகளைத் காட்டிக் கொடுத்ததும் இந்த அமைப்புத்தான். ஆப்கானிஸ்தானிலிருந்து பெறப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்கள் இவர்களுக்கு வழங்கப்பட்டன. தீவிரவாதத்தை வளர்ப்பதன் மூலம் மிதவாதிகளின் அரசியல் செல்வாக்கை உடைத்தெறிவது தான் இந்திராவின் நோக்கமாக இருந்தது. அரசியலில் அதிகாரத்தைப் பெறுவதற்காக அரசியல்வாதிகள் எப்படியெல்லாம் செய்படுகின்றார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இதன் மூலம் தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டுக்குள், எலும்புத் துண்டுக்கு வாலாட்டும் நாயாகச் செயற்படுவார்கள் என்பது தான் இந்திரா காந்தியின் எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால், தீவிரவாதிகள் அரசு கட்டுப்பாட்டுக்குள் இருந்து விலகு முற்பட்ட போது இந்திரா அதிர்ச்சியடைந்தார். மிதவாதிகளை ஓரங்கட்டிவிட்டு, போராட்டத்தை தீவிரவாதிகள் தமது கைகளில் எடுத்துக் கொண்ட போது, அவர்களை ஒடுக்க வேண்டிய அரசியல் தேவை அவருக்கு ஏற்பட்டது, தீவிரவாதிகளின் புகலிடமாக இருந்த அமிர்த சரஸ் பொற்கோவில் மீது தாக்குதல் நடத்தி அதனைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக இந்திரா காந்தி உத்தரவிட்ட "ஒப்பரேஷன் புளூஸ்ரார்" நடவடிக்கையானது தனது உயிருக்கே உலை வைப்பதாக முடியும் என்பது அவர் எதிர்பார்க்காதது. இந்த நடவடிக்கைகள் கூட மூன்றாவது ஏஜென்சியால் திட்டமிட்டே மேற்கொள்ளப்பட்டது. இந்த அமைப்பு தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எவ்வாறான ஆபத்தான பாதைகளையும் தெரிவு செய்யக் கூடியதாகவுள்ளது என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்!

இதே போலத்தான் இலங்கை விவகாரத்தில் மறைமுகமான இராணுவத் தலையீட்டையும், வெளிப்படையான அரசியல் தலையீட்டையும் மேற்கொள்ளுமாறு இந்திரா காந்திக்கு மூன்றாவது ஏஜென்சி ஆலோசனை கூறியது. இவற்றுக்கு மத்தியில் ஒரு மத்தியஸ்த்தர் என்ற வகையில் இலங்கைப் பிரச்சினையில் தலையிடுவது தான் இந்திரா காந்தியின் திட்டமாக இருந்தது. தமிழகத்தில் அப்போது காணப்பட்ட அரசியல் சூழ்நிலையே இவ்வாறான ஒரு உபாயத்தைக் கையாளவேண்டிய "தேவை"யை இந்திரா காந்திக்கு ஏற்படுத்தியது.

இது தொடர்பான முழுமையான தகவல்கள் பெறப்பட்டு, றோ, ஐ.பி. போன்றவற்றால், இந்திரா காந்திக்கு அறிக்கைகளாகச் சமர்ப்பிக்கப்பட்டன. இது இந்திரா காந்திக்கு ஒரு அபாய எச்சரிக்கையாக இருக்க, இப்பிரச்சினையில் ஏதாவது தீவிரமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டிய அவசரம் இந்திராவுக்கு ஏற்பட்டது. 83 கலவரம் இதற்கான சிறந்த வாய்ப்பை இந்தியாவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு மத்தியஸ்தர் என்ற பாணியில் இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட்டது.

1977ல் பதவிக்கு வந்த ஜெயவர்த்தனா மேற்கு நாடுகளுக்கு சார்பான ஒரு நிலைப்பாட்டையே கையாண்டார். இது இந்தியாவுக்குப் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியது. தமது நலன்களுக்கு இது பாதிப்பை ஏற்படுத்தலாம் என இந்தியா அஞ்சியது. ஜெயவர்த்தனாவைப் பணியவைப்பதற்கு என்ன வழி எனத் தேடிக்கொண்டிருந்த இந்திரா காந்திக்கு அதற்கான வாய்ப்பு 83 கலவரம் மூலம் கிடைத்தது. ஒரு புறம் தமிழ்ப் போராளிகளை தமது கைகளில் கொண்டு வந்த ஜெயவர்த்தனாவுக்கு அச்சுறுத்தல் ஒன்றைக் கொடுத்தது, அரசியல் தீர்வு ஒன்றுக்கான அழுத்தங்களைப் பயன்படுத்தி- மேற்கு நாடுகளுடனான தொடர்புகளை முறித்துக் கொள்ளுமாறு இலங்கைக்கு நிர்ப்பந்தங்களைக் கொடுத்தல் என்பன தான் இந்திரா கோட்பாடு. 1987ஆம் ஆண்டு இலங்கை- இந்திய ஒப்பந்தம் கூட இதன் அடிப்படையில் உருவானது தான் என்பதை அதனைக் கவனமாக ஆராய்ந்தவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்கள்.

தமிழ்ப் போராளிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு இந்திரா விரும்பிய போதிலும், அவை தமிழீழத்தைப் பெறக் கூடிய இராணுவ சக்தியாக அவை வளர்வதை அவர் விரும்பவில்லை. இந்தியா வழங்கும் வரையறுக்கப்பட்ட ஆயுத பலத்துடன் இலங்கை அரசுக்கு அச்சுறுத்தலைக் கொடுக்கக் கூடிய இயக்கங்களைத் தான் அவர் விரும்பினார். அதாவது, இலங்கை அரசு மீது தமது செல்வாக்கை திணிப்பதற்கான ஒரு ஆயுதமாகவே தமிழ் அமைப்புக்களை இந்திரா பயன்படுத்திக் கொண்டார் என்பது இதிலிருந்து புலனாகின்றது.

இந்திரா கையாண்ட இந்த இரட்டை நிலைப்பாடு தான் இன்றைய குழப்பங்களுக்குக் காரணம். இன்று வரையில் ஈழப் பிரச்சினையில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதென்பதில் இந்தியா தடுமாறுவதற்கும் இந்திரா ஆரம்பித்து வைத்த இந்தக் கோட்பாடுகள் தான் காரணம்.

சிறுகதை

# மதமாற்றம்

துறை·சண்முகம்



வேப்ப மரத்தடியில் உட்கார்ந்து வெற்றிலை பாக்கை மென்றபடி மண்ணாங்கட்டி தானாகவே குபீர் குபீர் என்று எச்சில் தெறிக்க சிரிப்பதைப் பார்த்தால், யாருக்கும் சிரிப்பு வரும் சிரித்துக் கொண்டே அவன் தெருவைப் பார்த்து கையை நீட்டுவதைப் பார்த்தால் ஒரு தத்துவ ஞானிக்குரிய தோரணை இருக்கும்.

பல காலமாய் எண்ணெய்ப் பசை காணாமல் சடை சடையாய்த் தொங்கும் முடியை ஒரு முறுக்கு முறுக்கி அவன் வளையமாக சுற்றுவதைப் பார்த்தால் கூழைப் பாம்பைச் சுருட்டி தலையில் வைத்தது மாதிரி இருக்கும். சலூன் கடைக்காரர் வலியக்கூப்பிட்டு, "மண்ணாங்கட்டி முடிய வெட்டிட்டுப் போடா" என்றால் "போ! போ கலியபெருமா கோயிலுக்கு வச்சிருக்கேன்" என்று இடத்தைக் காலி செய்து விடுவான்.

தனக்குத்தானே அவன் குபீர் குபீர் என்று சிரித்துக் கொள்வதையும், ஈசான மூலையைப் பார்த்து பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டு முறைப் பதையும் பார்த்து பைத்தியக்காரன் என்று சொன்னாலும், அவன் இல்லாவிட்டால் தெருவுக்கே கை முறிந்தது போல இருக்கும்.

மாங்குமாங்கென்று விறகைப் பிளந்து போட்டு விட்டு கூலி கொடுத்தால், "தே! சோறு குடு, இது வேணாம்" என்பான். இந்த மாதிரி இளிச்சவாயனைத் தெருவே தேடுவதில் வியப்பென்ன?

மாரிமுத்து இருப்புக் கொள்ளாமல் அடிக்கடி வேப்ப மரத்துக்கும், சத்திரத்துக் கொளத்துக்கும் அலைந்து கொண்டிருந்தார். "ரெண்டு நாளாமாடு அடிவயத்த இழுத்துக்கிட்டு கத்துது, காளைக்குப் போட அனுப்பலாம்னா இந்தமண்ணாங் கட்டிப்பய எங்க போயி தொலைஞ்சான்."

"ஒரு வாரமா ரூம்ல எலி செத்த நாத்தம் வருது, உத்தரத்துல ஏறி பாக்கச் சொல்லலாம்னு நானும் அவனதான் தேடறேன்" செட்டியார் வீட்டம்மாவும் சேர்ந்து கொண்டாள்.

முந்தா நாள் கூட எருக்குழி அள்ற வேல செஞ்சான். டீ குடிக்க காசு கொடுத்தா வேண்டாமுன்னுட்டு சோறு கேட்டான். எடுத்துட்டு வரகொஞ்சம் நேரமாயிடுச்சி. ஆளக் காணோம்; செம்மறியாடு ஒதுங்குன இடம் மாதிரி அந்த சீண்ட நாத்தந்தான் இருந்துச்சு"

"கிருஷ்ணசாமி அவன் முன்ன மாதிரி இல்ல, ஒரு நா அவனான்ட ஏண்ட இப்படி சோறு சோறுன்னு வர்றியே, வேலைக்கு கூப்புட்டா அவசரத்துக்கு உதவ மாட்டேன்ற, இங்க அவசரத்துக்கு இல்லாம பட்டீசுரத்துல போய் உட்கார்ந்து பிச்ச எடுக்குறேன்னதுக்கு, "நீயுந்தான் கோயில்ல பிச்ச எடுக்கறே"ன்று துடுக்குன்னு கேட்டான். நேக்கு என்னமோ அவன் பைத்தியம் இல்லேன்று தோண்றது" குருக்கள் அய்யர் சொல்ல, "எப்படியோ போறாங்க, ஒரு வேளை சோறு குடுத்தா காலைலேந்து சாயங்காலம் வரைக்கும் வேலி கட்ட அவன் விட்டா யார் வருவா? எங்க போய் தொலைஞ்சானோ!" என்றார் மற்றொருவர்.

"மகா மக குளத்துக்கு ஜெயலலிதா வர்றான்னு பெரிசா விழாக் கோலமோ இல்லியோ போயிருப்பன் பைத்தியம். எங்க போயிடப் போறன், அவன் பொழப்பு நம்ப கால சுத்திதான், தானா வருவான் விடுங்கோ"

"ஏட்டய்யா"

அங்க பாருங்க சோழன் புக்கிங் கவுண்டர் அடியில் ஒருத்தன் ஒளிஞ்சி கிட்டு இருக்குற மாதிரி தெரியுது"

"ஆமான்யா, தாடியையும்,, முஞ்சியையும் பாத்தா பிச்சைக்காரன் மாதிரில்ல இருக்கு."

"நீங்க வேற சார், இப்பெல்லாம் தீவிர வாதிங்க இந்த மாதிரி வேசம் போட்டுட்டு திரிவானுவ. மக மகத்துக்கு சி.எம்.வர்றாங்கல்ல உஷாரா இருக்கணும் சார். அந்த பொம்பளைக்கு வேற தீவிரவாதிங்க ஆபத்து இருக்குன்னு க்யூ பிராஞ்ச் காரங்களே பேசிக்குறாங்க."

"ரொம்ப கண்டுக்குற மாதிரி பார்க்காத, ஓடிப் போறான்; வேணும்னே சட்டையை அழுக்காக்குன மாதிரிதான் தெரியுது. வா! வா நேக்கா மடக்குவோம்."

பக்கவாட்டாகப் போய் திடீரெனத் திரும்பிய எட்டு டார்ச்சை நீட்டிப் பார்த்தார். குறி பார்த்த டார்ச்லைட் ஒளிக்கு விலகி பழுப்பு விழிகள் வேகமாக அசைந்தன.

"ஏய் யார்ரா நீ? இந்த நேரத்துல எதுக்கு பஸ் ஸ்டாண்டுல மறைஞ்சி உக்காந்திருக்க?"

சற்றும் சலனமில்லாமல் தரையைப் பார்த்தும், மேலே பார்த்தும் ஒரு சிரிப்பு சிரித்தான்அவன்,

"சார் விடக்கூடாது இவன், பயங்கர மா நடிக்குறான், விவகாரமான ஆளா இருப்பான் போல இருக்கு! சந்தேகப்பட்டது சரி சார்?"

"ஏய் எழுந்திர்ரா, கேட்டா மழுப் புறியா? எதுக்குடா இங்க உட்காந்திருக்க?" இரண்டு பேருமே லத்திக் கம்பால் நெம்பினர்.

"என்னங்கய்யா நீங்க வேற செத்தா மயிறு" என்று திரும்பவும் தானாகச் சிரித்துக் கொண்டான். மிரட்டலுக்குப் பயப்படாததைக் கண்டு கான்ஸ்டபிள் இருவருக்கும் திகிலேறிப் போனது.

"சந்தேகமே இல்ல சார். இவன் தீவிரவாதக் கும்பல்தான். மாட்டிக்கிட்டேன்னு நடிக்குறான் போல, இங்க சரியா வராது ஸ்டேசன்ல வச்சு விசாரிச்சா தானா உண்மை வெளியே வரும் பாருங்க" பரபரப்பான இருவரும் "ஏய் வாடா இங்கவா" லத்திக் கம்பால் நெட்டித் தள்ளிக் கொண்டு போனார்கள்.

"என்னய்யா விடியுற நேரத்துல! பிச்சக்காரன் மாதிரி இருக்கான் இவன தள்ளிட்டு வர்றீங்க. ஏற்கனவே லாக்கப் ஃபுல்லு. அங்கேயே குளத்து பக்கம் போகக் கூடாதுன்னு அடிச்சு வெரட்ட வேண்டியது தானே" இன்ஸ்பெக்டரின் முகத்தில் கண் விழிப்புக்கான எரிச்சலும் சேர்ந்து வெளிப்பட்டது.

"இவள் அந்த மதிரி கேசு இல்ல சார். தீவிரவாத டீம் போல இருக்கு, எதுக்கும் பதில் சொல்லாம பயங்கர அழுத்தமா இருக்கான் சார். கிறுக்கன் போல பாடுறான் நடிக்குறான்."

சொல்லிக் கொண்டிருக்கும் போதே லத்திக்கம்பு அவன் மேல் சதிராட அவன் கைகளை இடுப்புக்கு கொண்டு போவதைக் கவனித்த இன்ஸ்பெக்டர் பரபரப்பானார்.

"யோவ் கட்டு மொதல்ல அவன் கைய பின்னால மடக்கிக் கட்டுய்யா! இடுப்புக்கிட்ட வேற நைசா கையை கொண்டு போறான். கம்ப்ளீட்டா அவன சர்ச் பண்ணுங்கய்யா. ஏதாவது வெடிச்சுறப் போவுது.

இன்ஸ்பெக்டரின் எச்சரிக்கையில் பயம் கூடியது. ஏட்டுக்கு.

"யோவ்,அய்யா சொல்றாங்கல்ல, அவன் இடுப்ப சர்ச் பண்ணுய்யா" ஏட்டு தள்ளிப் போய் நின்ற கான்ஸ்டபிளுக்கு எரிச்சலோடு ஆணையிட்டார். இன்ஸ்பெக்டர் வேண்டுமென்றே தெருப்பக்கம் போய் நின்று கொண்டு எதையோ ஆராய்வது போல நடந்து கொண்டிருந்தார்.

மின்னல் வேகத்தில் செயல்பட்ட கான்ஸ்டபிள் லத்திக் கம்பால் அவனது இடுப்பை குத்திக் கிளற ஒரு பாலித்தீன் பொட்டலம் பிரிந்து வந்து விழுந்தது. அதிலிருந்து உருண்டையாக விழுந்து ஒன்று உருண்டோடி வாசல் பக்கமிருந்து இன்ஸ்பெக்டரை நோக்கி போக "சார் சார்" என்று ஏட்டு கத்த ஒரு கணம் பதறிப் போய் காலைத் தாறுமாறாக நகர்த்தி விழப்போன இன்ஸ்பெக்டர் வியர்த்துப் போய் "சே! கொட்டப் பாக்கு!" என்று களைத்துப் போன முகத்தோடு,, பயங்கரமாகக் கடுப்பாகிப் போன இன்ஸ்பெக்டர் கோபம் அனைத்துக் கைக்கு வர லத்திக் கம்பால் மாட்டை வதக்குவது போல அவனை அடித்து "ஏய் யார் நீ! உண்மையைச் சொல்லு? சொல்லு?" என்று கத்த ஆரம்பித்து விட்டார்.

"ஏன் சாமி நீ வேற வலங்கமான் கோயிலுக்குபாட கட்டி, கலியபெருமா வேண்டிகிட்டு எழவெடுக்க வந்தானாம் மயிறு, மயிறு" என்று பாட்டாகப் பாட.

"இப்படிதான் சார் பயித்தியம் மாதிரி நடிச்சாலும் செத்தாமயிறு, பாடை, எழவெடுக்கணும்னு கொலை வெறியோட பேசுறான். ஒரு வேளை இந்த நக்சலைட் கோஷ்டியா இருக்குமோ!"

இன்ஸ்பெக்டருக்கும் சந்தேகம் பிடித்தாட்ட, "சொல்ல முடியாது எந்த கோஷ்டின்னு தெரியல்ல", என்று பேசிய படியே லத்திக் கம்பால் இடுப்பைப் பதம் பார்க்க, அவன் பற்களை நறுநறுவென்று கடித்தபடி மோட்ட வளையை வெறிக்க ஆரம்பித்தான்.

"சந்தேகமே இல்ல சார், இவன் தீவிர வாத டீம்தான். இத்தனை அடிக்கும் ஒரு அடிக்குக் கூட பயப்படவோ, கெஞ்சவோ இல்ல பாருங்க. என்னா அழுத்தமா பல்ல கடிக்குறான் சார்" சொல்லி ஆத்து ஆத்துப் போனார் ஏட்டு.

"விடிஞ்சிருச்சு. சி.எம்.வர்றநேரம் வந்துருச்சு. இவன கவனிக்கிறபடி கவனிச்சாதான் உண்மை வரும்" என்று இன்ஸ்டெக்டர் ஆணையிட, வலி தாங்காமல் "பட்டீசுவரம்... பட்டீசுவரம்" என்று பாட ஆரம்பித்தான்.

"கொடுக்கறத கொடுத்தாதான் உண்மை வருது. ஆள ஜீப்புல ஏத்துங்க. பட்டீஸ்வரம் போனா டீம் பதுங்கி இருக்குறத புடிச்சிடலாம். நான் மேலதிகாரிக்கு மெசேஜ் தந்துட்டு வாறன் கௌம்புங்கய்யா!"
இன்ஸ்பெக்டர் வழிகாட்ட நெட்டி ஜீப்பில ஏற்றியவர்கள், "கொஞ்சம் உஷாரா இல்லேன்னா, விடியற வரைக்கும் பதுங்கி இருந்து ஏதாவது நாசம் பண்ணிருப்பான்யா"

"ஒண்ணும் செய்யலேன்னாலும் சி.எம். முகத்துல நோட்டீசு வுட்டான்னு வச்சுக்க, ராப்பகலா நாம கண்ணு முழிச்சும் நாக்க புடுங்கிக்குற மாதிரி மேலிடத்துல திட்டுறத வாங்கிக்கணும்!"

எரிச்சல் மேலிட இன்ஸ்பெக்டர், "மயிரா சொல்ற, இன்னும் கொஞ்ச நேரத்துல உங்க மயிரெல்லாம் பாரு! எங்கண்ணு மத்த பசங்கள காட்டலே பெட்ரோலை ஊத்தியே பொசுக்கிடுவேன்" என்று திட்டியபடியே" இதுல முனிவர் மாதிரி ஜடாமுடி வேற" என்று லத்திக் கம்பால் தலையில் போட "சாமி காட்றேன் சாமி" என்று கடுப்பாகிக் கத்தினான்.

காலை நேரம் துர்க்கை அம்மன் கோயிலுக்கு முன்பு திடுதிப்பென போலீஸ் ஜீப் வந்து நிற்க கோயிலுக்கு முன்பு பரபரப்பு கூடிப் போனது.

"அய்யோ அங்க பாருண்ணே நம்ப மண்ணாங்கட்டிப் பய ரத்தக் காயத்தோட முகம் வீங்கிப் போய் வாரான்" கோயிலுக்கு முன் உத்திராட்சை மாலையோடு பிச்சை எடுக்கும் கூட்டத்திலிருந்தவன்

> **"யோவ் ஏட்டு மொதல்ல அவன் கைய பின்னால மடக்கிக் கட்டுய்யா! இடுப்புகிட்ட வேற நைசா கையை கொண்டு போறான். கம்ப்ளீட்டா அவன சர்ச் பண்ணுங்கய்யா. ஏதாவது வெடிச்சுறப் போவுது.**

அடையாளம் காட்ட, மொத்த கூட்டத்துக்கும் தலைவர் போல் இருந்த ஒருவர் எழுந்து கொள்ள,

"அதோ அவங்கதான்" மண்ணாங்கட்டி கை காட்டிய திசையில் பிச்சைக்காரசாமியார்கள் திரண்டுவர இன்ஸ்பெக்டர் குழப்பமாகி ஏட்டு பக்கம் திரும்ப அவர் வேறு பக்கம் முகத்தைத் திருப்பி கோபுரத்தை ஆராய்ந்தார்.

"யோவ் அங்க என்ன ஆராய்ச்சி புடுங்குற. சாமியார் பசங்க வர்றானுங்க பாரு என்னான்னு கேளு"

"அய்யா, இவன் பேரு மண்ணாங்கட்டிங்க எங்க கூட்டாளி. அப்பிராணி, பைத்தியம் மாதிரி பாடுவான். கடுமையா வேலை செய்வான் பேசத் தெரியாம பேசுவானுங்க. இங்கதான் பிச்சை எடுப்பான். தப்பத் தண்டாவுக்குப் போக மாட்டானே! வுட்டுடுங்க."

"நேத்து சந்தேக கேசுல மாட்டிட்டான். கேட்டா பதில் சொல்லாம ஏறுக்குமாறு பேசி, நம்மாளுங்க அடிச்சிட்டாங்க; யோவ் பிச்சைக்காரன்ங்குற காவி, கீவி கட்டி விட வேண்டியதுதானே? தீவிரவாதி மாதிரி இருக்கான், பின்ன அடிக்காம கொஞ்சுவாங்களா? எங்க வேலையெல்லாம் வுட்டுட்டு நேத்துலேந்து இவன வச்சிட்டு மார டிக்கிறோம். சி.எம்.வேற வர்ற நேரம். போடா! அவனவுடுங்கய்யா" இன்ஸ்பெக்டர் குரல் கொடுக்க.

"நான் தாங்க இந்தக் கோயில் வாசலுக்கு தலைவரு. இவன் எங்கள் மாதிரி ஆளுதான், தீவிரவாதி இல்லங்கய்யா! ஒரு வயதான காவி உடை முன்வந்தார்.

"பெரிய மயிறு இதுக்கு ஒரு தலைவரு; போங்கடா என்ன கூட்டம்" இன்ஸ்பெக்டர் அதட்ட கூட்டம் கலைந்தது.

ஜீப் மறைந்த பிறகு "போடா மயிறு... மயிறு" என்று மண்ணாங்கட்டி மண்ணை வாரி இறைக்க ஆரம்பித்தான்.

"தோ பாரு மண்ணாங்கட்டி இனிமே நீ இந்தகாவிய போட்டுகிட்டு, உத்திராட்சைய மாட்டிக்கணும். அப்பதான் எவனும் கைய வைக்க மாட்டான்" வயதான பிச்சைக்காரன் மாட்டிவிட, இன்னொரு பிச்சைக்காரர் "இப்பதான் மண்ணாங்கட்டிய பார்த்த கலிய பெருமாசாமி மாதிரியே இருக்கு" என்று சிரிப்பு மூட்ட "அய் கலிய பெருமா... கலிய பெருமா" என்று பாடியபடியே கிளம்பிய மண்ணாங்கட்டியிடம் "ஏய் மண்ணாங்கட்டி எங்கயும் பொய் தொலைச்சிராத, அந்த திண்ணையில படுத்திட்டு திரும்பவும் இங்கேயே வா. மத்தியானம் சோறு இருக்கு" என்று ஒருவன் விடாப்பிடியாய்ச் சொல்லி வைத்தான்.

வலியும் களைப்பும் கூட திண்ணையில் தலைசாய்ந்த மண்ணாங்கட்டிக்குப் புதிதாக மாட்டிக் கொண்ட உத்திராட்சக் கொட்டை உறுத்த ஆரம்பித்தது. இடது கன்னம் வீங்கி வலியெடுத்ததால் வலது பக்கம் திரும்பிப் படுக்க உத்திராட்சை கழுத்திலும், தாடையிலும் அரணை போல உராய்ந்து இடைஞ்சல் கொடுக்க "சே! எழவு, மயிறு" என்று வெறுப்போடு கழட்ட நினைக்கையில்,

"சாமி நீங்க வந்ததுக்கு சந்தோஷம். வேண்டிகிட்ட மாதிரி இன்னைக்கு ஒரு சாமியார்க்காவது அமுது படைக்கலேன்னா இத்தன நாள் நான் விரதம் இருந்ததுக்கே பலன் இல்லாம போயிருக்கும். நல்ல நேரம் பாத்து வந்தீங்க, நாங்க பாக்கியம் பண்ணிருக்கோம் கொஞ்ச நேரம் படுத்திருங்க. வட பாயசத்தோடு சாப்பாடு தயார் ஆயிட்டு இருக்குது. தயார் ஆனவுடனே வந்து எழுப்புறேன்" வீட்டுக்காரர் கர்ம சிரத்தையுடன் பவ்யமாக விடை பெற்றார்.

இதற்கு முன் தன் வாழ்நாளிலேயே இப்படியொரு உபசரிப்பைக் கண்டிராத மண்ணாங்கட்டி கழுத்திலிருந்த உத்திராட்சத்தைப் புதிய வாஞ்சனையுடன் நோட்டமிட்டவாறு அதை பத்திரமாக கைகளால் இறுகப் பிடித்தபடி படுத்துக் கொண்டே "குபீர் குபீர்" என்று சிரித்துக் கொண்டான். ஏதோ அர்த்தம் புரிந்து கொண்டது போல் மீண்டும் மீண்டும் புன்னகைத்துக் கொண்டான்.

# JVPயின் இரட்டை வேடம்
# தமிழ் மக்களுக்கெதிரான நாசிஸம் உருவாகும் அபாயம்




மத்திய கிழக்கில் பாலஸ்தீனர்களுக்கு எதிராக இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்டுவரும் கண்மூடித் தனமான தாக்குதல்களைக் கண்டித்தும், டெல் அவிற்கு எதிராக சர்வதேச சமூகம் பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தியும் அண்மையில் கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்துக்கு முன்னால் ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம் செய்தது. சுயவிளம்பரத்துக்காக இது செய்யப்பட்டதாயினும் நல்ல காரியம் என்றபடியால் வரவேற்கத்தக்கதே.

ஆனால், அதேவேளை சொந்த நாட்டில்- சகோதர சமூகம் ஒன்றுக்கெதிராக கடந்த 17 வருடங்களாக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாதத்துக் கெதிராக இதுவரையும் இவர்கள் குரல் கொடுக்க முன்வரவில்லை. கோடிக்கணக்கான ரூபா செலவில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வடபகுதி மக்கள் மீது குண்டு மழை பொழிந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் இதுவரை மடியவும், கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான வீடுவாசல், சொத்து சுகங்கள் அழியவும் காரணமான அரசாங்கத்தின் செயல் பற்றி கண்டிக்கக் கூட இச்செஞ்சட்டை வீரர்கள் முன்வந்ததில்லை. மாறாக யுத்தத்தை முன்னெடுத்து தமிழர் போராட்டத்தை அழிக்க வேண்டுமென்று கூறும் சிங்கள பேரினவாதத்துக்கு தோள் கொடுக்கும் இத் தோழர்கள் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை மறுப்பதோடு தேசியம் என்ற கொள்கைக்குள் தமிழரை அடக்கியாளும் மனோபாவத்துடனேயே செயற்பட்டு வருகின்றனர்.

வன்னியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் உணவு, மருத்துவ வசதிகளின்றி செத்துமடியும் நிலையில் அதைக் கண்டுகொள்ளாத இந்நபர்கள் டெல்அவிவிற்கு எதிராக சர்வதேச சமூகம் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்று கூக்குரல் இடுகின்றனர்.

பாலஸ்தீனத்துக் கெதிராக செயற்படும் இஸ்ரேல் பற்றி கூச்சலிடும் இவர்கள் இலங்கையில் இஸ்ரேலிய இராணுவத்தினர் தமிழினத்துக்கெதிராக போரில் பல சந்தர்ப்பங்களில் நேரடியாக ஈடுபட்டும், இராணுவத்துக்கு பயிற்சியளித்தும், யுத்த தளபாடங்களை வழங்கியும், ஆலோசனைகளைக் கூறியும் வருவதை எதிர்க்காத இவர்கள் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்குப்பால் நடக்கும் சம்பவங்களுக்காக மட்டும் தெருவில் இறங்கி இஸ்ரேலுக்கெதிராக கோசம் எழுப்பும் இவர்களது செயலை கோமாளித்தன மென்பதா? அல்லது தமிழீழ உரிமைப் போராட்டத்துக்கெதிராக இஸ்ரேலுடனும் தோழமை பூண்டுகொள்ளும் பச்சோந்தித் தனமென்பதா?

அத்தோடல்லாது, அண்மைக் காலத்தில் அரசாங்கம் இனப் பிரச்சினை தீர்வுக்கான ஆலோசனைகளை, சர்வதேச சமூகத்தையும், தமிழ் மக்களையும் ஏமாற்ற பாராளுமன்றத்தல் முன்வைத்த போது பேரினவாதிகளோடு சேர்ந்து தெருவில் இறங்கி இவர்கள் செய்த ஆர்ப்பாட்டம் தமிழர்களுக்கு இந்நாட்டில் உரிமைகளை மட்டுமல்ல, சாதாரண சலுகைகளைக் கூட வழங்கக் கூடாது என்பதில் இவர்கள் எவ்வளவு தூரம் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டியது.

இவர்களது நடைமுறைகளையும், போக்குகளையும் பார்க்கும் போது ஹிட்லரின் அரசியல் சித்தாந்தமும், அவரது அரசியல் நடைமுறை அணுகுமுறைகளுமே ஞாபகத்திற்கு வருகின்றன. ஹிட்லர் அதிகாரத்திற்கு வந்து தனது நாஸிஸக் கொள்கையை நடைமுறைப்படுத்தி பல லட்சக்கணக்கான யூத மக்களை கொன்றுக்குவிக்கு முன்னர், இவர்களைப் போன்றே தம் மக்கள் மத்தியில் கவர்ச்சிகரமான பொதுவுடமைக் கொள்கைகளையும், தேசியம் என்ற கருத்தையும் முன்வைத்தான். அக்கருத்துகளுக் கூடாக தன் பேச்சுவன்மையால் இனவாதத்தை ஊட்டி வளர்த்தான். மக்களை இனவெறியர்களாக மாற்றி வளர்த்தான். நாஸிஸக் கட்சிக் கூடாக நாடு முழுதும் இனவாதப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் சென்றான். மக்களை குறுகிய இன உணர்வுக்கு ஆட்படுத்தி ஆட்சியைக் கைப்பற்றினான். பாராளுமன்றத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி சர்வ வல்லமையுள்ள சர்வாதிகாரியாக மாறினான். அதன் பின்னர் அவன் யூதர்களுக்கெதிராக செய்த படுபயங்கரமான படுகொலை சம்பவங்கள் இன்றும் வரலாற்றில் இரத்த சாட்சிகளாக உள்ளன.

இந்த வரலாற்றுப் பின்னணியோடு பார்க்கும் போது J.V.P யின் அரசியல் சித்தாந்த சந்தர்ப்பவாதமும், அவர்களது இனப் பிரச்சினைக்கான தீர்வுக் கொள்கையும், சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் தொடர்பான அணுகுமுறைகளும், அவர்களின் தற்போதைய பேரினவாத, பௌத்த மத பீடங்களுடனான கூட்டுறவுகளும், ஆட்சியதிகாரத்தை எப்படியாவது பிடித்துவிடவேண்டுமென்ற தீராத தீவிர வெறியும்- எதிர்காலத்தில் அதனது படுபயங்கரமான இனவாதப் பசிக்கு இந்நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்கள்- குறிப்பாக தமது உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்கள் இரையாகப் போகின்றனர் என்பதையே நிகழ்வுகள் எடுத்து காட்டுகின்றன.

இவர்களது மார்க்சிய முகமூடிக்குள் மறைந்துள்ள நாஸிஸ கோரமுகத்தை உலகுக்கு வெளிப்படுத்த அனைத்து முற்போக்கு சக்திகளும் முன்வர வேண்டும். இல்லையெனில் ஹிட்லரைப் போன்ற உண்மையான இடதுசாரி சக்திகளின் இரத்தத்தையே இவர்களும் முதலில் சுவை பார்ப்பர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எனவே இந்நாட்டிலுள்ள உண்மையான முற்போக்கு சக்திகள் சிங்கள, தமிழ், முஸ்லிம் என வேறுபட்டு நிற்காது ஐக்கியப்பட்டு இவர்களின் போலி மார்க்சீயத்தையும், உண்மையான நாஸிஸத்தையும் அம்பலப்படுத்த முன்வரவேண்டும்.

**சண்.**

---

வட பிரதேச பத்திரிகைகளுக்கு தடைகளை விதிப்பதையும் விட பயங்கரமான செயல்களில் தற்போதைய ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளதை நிமலராஜனின் படுகொலையின் மூலம் உணரக் கூடியதாக உள்ளது. இப்போது அரசாங்கத்தின் தலைவர்கள் கூட தலையில் கைவைத்துக் கொண்டு இது அக்கிரமமான செயலொன்றென ஓலமிடுகின்றனர். தட்டு குடும்ப அங்கத்தவர் ஒருவரின் இழப்பைப் போன்றே இவர்களது ஓலம் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. பத்திரிகையாளர்கள் மட்டுமல்ல, அரசாங்கத்தின் உயர் அமைச்சர்களும் இதற்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். முழுமையாகவே இதனை டக்ளஸ் தேவானந்தாவின் தலையில் சுமத்தி விட்டு மறைந்து செல்ல அரசாங்கத்தின் சில தலைவர்களும் எதிர்க்கட்சித் தலைவர்களும முயற்சி செய்கின்றனர். டக்ளசின் மேல் பொறுப்பைச் சுமத்திவிட்டு தப்பிச் செல்வது இலகுவான காரியம் தான். இருந்தாலும் டக்ளஸ் தேவானந்தாவின் இராணுவமும் அரச இராணுவத்தின் ஒரு பகுதியே என்பதை இவர்களும் மறந்து போயுள்ளனர். இப்போது டக்ளஸ் அரசாங்கத்தின் ஒரு அமைச்சர். அதனோடு ஒப்பிடும் போது இந்தப் பாவத்திலிருந்து சந்திரிகாவினால் கூடத் தப்ப முடியாது.



## கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன பார்வையில்

சில சிங்களத் துவேசிகளும் கூட நீலிக்கண்ணீர் வடிப்பவர்களோடு இணைந்து கொண்டுள்ளனர். அவர்கள் கூறுவதும் ஈ.பி.டி.பி பயங்கரவாதம் பற்றி மட்டுமேயாகும். அரசு இது சம்பந்தமாக எதுவும் பேசுவதில்லை. சிங்கள இராணுவத்தின் மீது பொறுப்பைச் சுமத்தி ஈ.பி.டி.பி செய்ததொன்றாக இன்னும் சிலர் கூறுகின்றனர். இந்த நிலையில் அரசாங்கத்தை நேரடியாக தாக்குவதற்குப் பதிலாக ஈ.பி.டி.பியையும் முஸ்லிம் காங்கிரசையும் தாக்க சிங்கள இனவாதிகள் விரும்புகின்றனர். காரணம் அக்கட்சிகளை தாக்கி அவர்களை அரசாங்கத்தில் இருந்தும் ஒதுக்கியதன் பின்பு ஐ.தே.காவை அரசாங்கத்தோடு இணைத்து அடக்கு முறையுடன் கூடிய சிங்கள அரசாங்கமொன்றை அமைத்துக் கொள்ள முடியுமென அவர்கள் நம்புகின்றனர். மகா சங்கத்தின் காலம் தொட்டுக் கூறுவது தமிழ் முஸ்லிம் சிறுபான்மைக் கட்சிகளை ஒதுக்கிவிட்டு சிறந்த சிங்கள அரசாங்கமொன்றை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதேயாகும். எந்த விதமான பொருளாதாரக் கொள்கையொன்றானாலும் மகா சங்கத்தினருக்கு பிரச்சினைகள் இல்லை. அமெரிக்காவுக்கு முழு நாட்டையும் ஒப்படைக்கப்பட்டாலும் அமைதியாக இருப்பர். மகா சங்கத்தினர்கள் சிலர் சந்திரிகாரணில் ஒன்றாக இணைந்து தமிழர்களை அடக்குவார்களேயாயின் நாட்டுக்கு அது நடந்தாலும் பிரச்சினையில்லை என்ற கொள்கையிலேயே இருக்கின்றனர்.

அத்தோடு சிங்கள இனவாத சக்திகள் நிமலராஜனின் படுகொலை சம்பந்தமாக நீலிக் கண்ணீர் வடிப்பது, அதற்கு ஈ.பி.டி.பி பொறுப்பென கோஷமெழுப்புவது அதன் உண்மை நிலைமையைத் தெளிவாக புரிந்து கொண்டதன் பின்பல்ல. அதற்குப் பதிலாக இந்த அரசாங்கத்தை யுத்த அரசாங்கமொன்றாக முன்னெடுத்துச் செல்வதைத் தூண்டுவதற்காக அதனால் நிமலராஜன் மரணம் சம்பந்தமாக நீலிக் கண்ணீர் வடிப்பவர்களைப் பற்றி எம்மால் சிந்தனையோடு நோக்க வேண்டியுள்ளது. அந்தக் கொலைக்கு ஈ.பி.டி.பி உடந்தையாக இருக்கலாம். அதனை எம்மால் சரிவரக் கூற முடியாது. எதுவாயினும் இந்தப் பாவத்திற்கு டக்ளஸ் உரிமையாளன் தான். இருந்தாலும் இந்தக் கொலையின் இரத்தத்திலிருந்து தூரமாக இருக்க இந்த அரசாங்கத்தில் எந்த அங்கத்தவர்களாலும் முடியாது.

வடக்கில் தமிழ் மக்களை சந்திரிகா அரசாங்கம் அடக்குகின்றது. அது இராணுவத்தினர்தான். டக்லஸ் ஒரு கையாளன் மட்டும் தான். இந்தக் கொலை அரசாங்கத்தின் திட்டத்தின் படி செய்யப்பட்டதாகும். அரசாங்கத்தின் திட்டங்களில் இருந்தும் தூரமாகி இந்தப் பிரச்சினையை நோக்குவதில் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. அரசாங்கத்திற்கு எதுவும் தெரியாதென்று சிலர் கூறுகின்றனர். சந்திரிகா இந்தக் கொலைச் சம்பவம் பற்றி அதிர்ச்சிக்குள்ளாகியுதாகக் கூறுவதை எங்களால் நம்ப முடியவில்லை. அவ்வாறு கூறுபவர்கள் சொல்ல முனைவது வடக்கில் கூட சந்திரிகா அரசு, ஜனநாயக முறையில் செயற்படுவதாகச் சுட்டிக்காட்டுவதற்கேயாகும். அவர்கள் கூறுவது சந்திரிகா யுத்தம் செய்வதும் மானசீகமான முறையிலேயே என்பதாகும். அவரிடம் எந்தவிதமான தவறும் இல்லை. இது அவர்கள் வரையும் ஓவியம். இந்த ஓவியத்தை முன்வைக்கும் அனைவரும் சுற்றிவளைத்து கொலையாளிகளாகவே மாறுகின்றனர்.

நிமல ராஜன் தெரிந்து கொண்டே காரியங்களை முன்னெடுத்துச் சென்ற ஒரு பத்திரிகையாளன். அவ்வாறான ஒருவர் அடக்குமுறைக்கு எதிராக குண்டைச் சுமந்து கொண்டு வரும் புரட்சிவாதியையும் விடப் பயங்கரமானவன். குண்டைச் சுமப்பவனின் பொறுப்பு ஓரிரண்டு எதிரிகளைக் கொலை செய்வது மட்டும்தான். பத்திரிகையாளன் அடக்கு முறையின் கொடூரத்தை ஆயிரக்கணக்கான மக்களிடம் எடுத்துச் செல்கின்றான் அடக்கு முறையின் கொடூரத்தை இடைப்பட்ட தனது மக்களிடையே வாழ்ந்த ஒரு மனிதன் முகம் கொடுக்கும் மரணத்தை நிமலராஜன் எதிர்கொண்டார். இருந்தாலும் ஒரு நிமலராஜனைக் கொலை செய்து இதனை முடிவுக்கு கொண்டு வர முடியுமா?

அடக்கு முறைக்கு உண்மை வெறுப்பானதாகும். காரணம் அது பொய்யை அடிப்படையாகக் கொள்ள வேண்டியதன் காரணத்தால். அதனால் உண்மையான செய்திகளை எடுத்துக் கூறும் எல்லாரும். அடக்கு முறையின் பரம எதிரிகளாகின்றனர். இதனை எல்லாப் பத்திரிகையாளர்களும் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

---

## படையினருக்கு................ 7ம் பக்கத் தொடர்ச்சி

ரக துப்பாக்கிகள் சிலவற்றையாவது புலிகள் கொள்வனவு செய்திருக்கலாமெனவும் கருதப்படுகிறது. அடுத்தடுத்து, வடமராட்சி கிழக்கிலும் திருகோணமலையிலும் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதால் இனிவரும் நாட்களில் வான்வழித் தாக்குதல்கள் மற்றும் போக்குவரத்துக்களுக்கும் புலிகளால் பெரும் அச்சுறுத்தல்கள் ஏற்படும் அபாய நிலை தோன்றியுள்ளது. அத்துடன் தரைவழித் தாக்குதலொன்றில் விமானப்படையினரின் உடனடி வருகையை எதிர்பார்க்கும் புலிகள் அங்கு வரும் விமானங்கள் ஹெலிகொப்டர்களை தாக்கியழிக்கும் சாத்தியங்கள் அதிகரித்து வருவதாகவும் அஞ்சப்படுகிறது. இதன் ஒரு கட்டமே உப்பாறு பகுதியில் எம்-ஐ-24 ஹெலிகொப்டர் அழிக்கப்பட்டமையாகும்.

இதைவிட வடபகுதிக்கான அனைத்து விநியோகங்களும் தற்போது திருமலைத் துறைமுகத்திலிருந்தே படையினருக்கு கிடைத்து வருகிறது. அத்துடன் வடக்கு கிழக்கு கடற் கண்காணிப்பும் இப்பகுதியிலிருந்து புறப்படும் கடற்படைப் படகுகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் கடற்படைக் கப்பல்கள் மற்றும் படகுகளின் நடமாட்டங்களுக்கு பாரிய அச்சுறுத்தல்களை ஏற்படுத்துவதாயின் அவற்றின் புறப்படு தளங்களினுள் நுழைந்து பாரிய தாக்குதல்களைத் தொடுத்து அவற்றின் இருப்பை ஆட்டம் காணச் செய்வதும் கடல் வழி விநியோகத்தை கேள்விக் குறியாக்குவதும் முடிந்தளவு கடற்படை தாக்குதல் படகுகள் மற்றும் துருப்புக் காவிக் கப்பல்கள், தாய்க் கப்பல்களை அழிப்பதும் புலிகளின் திட்டமாகும். இதற்காகவே குடாநாட்டில் படையினரின் நிலையான இருப்பை கேள்விக்குறியாக்கும் "ஓயாத அலைகள்-4" தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் குடாநாட்டுக்கான பிரதான கடல் வழி விநியோகத்திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விதத்தில் புலிகள் இத் தாக்குதலைத் தொடுத்துள்ளனர். அத்துடன் தங்களுக்கு பெரிதும் சாதகமற்றதும் தற்காலிக நிலை கொள்ளுதலுமான இடமொன்றிலிருந்து சிறுபடையணியொன்றைப் பயன்படுத்தி சில மணிநேர இடைவெளியில் முப்படைகளுக்குமெதிராக தாக்குதல் நடத்தி அதனை வெற்றிகரமாக பூர்த்தி செய்தமை இராணுவத்தினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. படையினருக்கு இந்தத் தாக்குதல்கள் மூலம் புலிகள் பேரழிவுகளை ஏற்படுத்திய அதேநேரம் புலிகளுக்கு இந்தச் சமரில் குறைந்தளவு இழப்பே ஏற்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டு முற்றுகைச் சமரில் திருகோணமலைத் தாக்குதலானது மேலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் சாத்தியமுள்ளது. வடமராட்சிகிழக்கு கடலோரப் பகுதியிலுள்ள நாகர்கோவில் படைத்தளம் மீதான பாரிய முற்றுகை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இந்தத் தாக்குதல் மூலம் கடற்புலிகளின் கை வடபகுதிக் கடற்பரப்பில் ஓங்கிவிடும் சாத்தியமும் அதிகரித்துள்ளது. இதன் மூலம் நாகர்கோயிலுக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் புலிகள் கடல்வழித் தரையிறங்கல்களை மேற்கொண்டு நாகர் கோவில் முகாமுக்கான பருத்தித்துறை பாதையூடான அனைத்து விநியோகங்களையும் துண்டித்து விடும் சாத்தியமும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் தரைவழியிலும், கடல் மார்க்கத்திலும், வான்பரப்பிலும் புலிகளின் தாக்குதல் பலம் அதிகரித்து வருவதால் எதிர்காலப் போர்களில் அதன் தாக்கமும் வெகுவாக உணரப்படும் சர்தியங்களுள்ளன. இதைவிட புலிகளும் மிக நவீன ஆயுதங்களை கொள்வனவு செய்து படையினருக்கு இணையாக தங்கள் ஆயுத வளத்தையும், பலத்தையும் அதிகரித்து வருவதால் போரிடும் இரு தரப்பினதும் ஆயுத பலம் எதிர்காலத்தில் சமநிலை ஒன்றை ஏற்படுத்தலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்- 20

# அவன் விதி



மிகயீல் ஷோலகவ்

“பிற்பகலில் கம்பெனி தலைவர் என்னைக் கூப்பிட்டு அனுப்பினார். அங்கே முன்பின் அறியாத பீரங்கிப் படை லெப்டினென்ட் கர்னல் ஒருவர் உட்கார்ந்திருந்தார். நான் அறைக்குள் சென்றதும் கர்னல் மேல் அதிகாரியைக் கண்டது போல எழுந்து நின்றார். எனது கம்பெனி தலைவர், “சகலோவ், இவர் உன்னைக் காண வந்திருக்கிறார்” என்று சொல்லிவிட்டு ஜன்னல் புறமாகத் திரும்பி நின்று கொண்டார். அப்போது ஏதோ மின்சார அதிர்ச்சி போல என்னூடே பாய்ந்தது; தொல்லை வருகிற தென்று உணர்ந்தேன். லெப்டினன்ட் கர்னல் என்னிடம் வந்து, “மனத்தை உறுதிப்படுத்தித் தாங்கிக் கொள்ளுங்கள், தந்தையே! உங்கள் மகன் காப்டன் சகலோவ் இன்று கொல்லப்பட்டார். என்னுடன் வாருங்கள்” என்றார்.

“நான் அப்படியே கிறுங்கி ஆடினேன்; ஆனால் விழாதவாறு காலூன்றி நின்றேன். உடைந்த கற்கள் சிதறிக் கிடந்த தெருக்களினூடே லெப்டினன்ட் கர்னலும் நானும் காரை ஓட்டிச் சென்ற விதத்தை இப்போது நினைத்தாலும் கனவு போலத்தான் இருக்கிறது. போர்வீரர் வரிசையாக அணி வகுத்து நின்றதும் சவப்பெட்டி சிவப்பு வெல்வெட்டால் மூடப்பட்டிருந்ததும் என் நினைவில் பனிப் படலத்தில் மறைந்தது போன்றே மங்கலாக இருக்கிறது. ஆனால் என் அனத்தோலியை மட்டும், அண்ணே, இப்போது உன்னைப் பார்க்கிறேனே, இதே தெளிவுடன் காண்கிறேன். சவப் பெட்டி அருகே சென்றேன், ஆம், என் மகன் தான் அங்கே கிடந்தார். இருந்தாலும் அது என் மகனாக இல்லை. எனது மகன் சிறு பிள்ளை; எப்போதும் புன்சிரிப்புடனேயே இருப்பான். குறுகலான தோள்கள்; அவனது மெலிந்த கழுத்தில் கூரிய சின்னமிடறு துருத்திக் கொண்டிருக்கும். ஆனால் இங்கேயோ அகன்ற தோளுடைய, முழுதும் வளர்ந்த அழகிய வாலிபனல்லவா கிடந்தான்! அவன் கண்கள் என்னையும் கடந்து அப்பால் நெடுந்தொலைவு எங்கேயோ நோக்கிக் கொண்டிருப்பது போன்று பாதி மூடியிருந்தன. எனது மகன் முகத்தில் வழக்கமாகக் காணப்படும் புன்சிரிப்பில் கொஞ்சம் இன்னும் அவனது உதடுகளின் ஓரத்தில் இருந்தது. ஆம், ஒரு காலத்தில் நான் அறிந்த அதே அனத்தோலிய் தான்.... நான் அவனை முத்தமிட்டு விட்டு ஒரு புறம் நகர்ந்து நின்றேன். லெப்டினனட் கர்னல் ஒரு சொற்பொழி வாற்றினார். எனது அனத்தோலியின் நண்பர்கள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்கள். ஆனால் என்னால் அழ முடியவில்லை. எனது நெஞ்சிலேயே என் கண்ணீர் வறண்டு விட்டது என்றே நினைக்கிறேன். ஒரு வேளை அதனால் தான் அது இன்னும் துன்புறுத்துகிறது போலும்...

“என்னுடைய கடைசி மகிழ்வையும், நம்பிக்கையையும் அந்த வெளிநாட்டு ஜெர்மானிய மண்ணில் புதைத்தேன். தங்கள் தலைவருக்கு இறுதி வணக்கம் செலுத்தும் முறையில் பீரங்கிப் படையினர் வேட்டுத் தீர்த்தனர். என்னுள்ளே ஏதோ ஒன்று சட்டென்று முறிந்தது போன்று தோன்றியது... நான் நடைப் பிணம் போல என்னுடைய படைப்பிரிவுக்குத் திரும்பி வந்தேன். விரை வில் என்னைப் படையிலிருந்து விலக்கி விட்டார்கள். எங்கே போவேன்? வரோனெஷுக்கா? என்ன கிடைத்தாலும் மாட்டேன். குளிர் காலத்தில் என் நண்பன் ஒருவன் காயமுற்று படையிலேயிருந்து விலக்கப்பட்டு வீடு திரும்பினான்; இப்போது அவன் ஊருபின்ஸ்க்கில் வாழ்ந்து வந்தான் என்பது என் நினைவுக்கு வந்தது. ஒரு முறை அவன் என்னைத் தன்னோடு வந்து வாழும்படி சொல்லியிருந்தான். ஆகவே அவனிடம் போனேன்.

“என் நண்பனுக்கும் அவன் மனைவிக்கும் குழந்தைகள் இல்லை. நகர்க் கோடியில் அவர்களுக்குச் சொந்தமான வீடு ஒன்று இருந்தது உடம்பு இயலாதோருக்கான பென்ஷன் அவருக்குக் கிடைத்து வந்தது. இருந்தாலும் அவன் ஒரு லாரி டிப்போவில் டிரை வராக வேலை செய்து கொண்டிருந்தான். அங்கே எனக்கும்கூட வேலை கிடைத்தது. நான் என் நண்பனுடன் தங்கிவிட்டேன். அவர்களால் எனக்கு வீட்டு வாழ்க்கை கிடைத்தது. நாங்கள் நகரப் புறங்களில் பல்வேறு வகையான சுமைகளை ஏற்றிச் செல்வது வழக்கம். இலையுதிர் பருவத்தில் தானியத்தைக் கிடங்குகளுக்குக் கொண்டு சேர்க்கும் வேலையை மேற்கொண்டோம். அப்போது தான் எனது புதிய மகன், அதோ அங்கே மணலில் விளையாடுகிறானே, அவன் தான், எனக்கு அறிமுகமானான்.

“நெடுந் தொலைவு சுற்றி வந்தபிறகு, முதல் வேலையாக ஒருவன் செய்வது சாப்பாட்டுக் கடைக்குப் போய் ஏதாவது கொறிப்பதும், அதோடு ஒரு குவளை வோட்கா உள்ளே தள்ளுவதும் தான். அலுப்பைப் போக்கிக் கொள்ள அது தானே வழி? காலத்திற்குள் இந்தக் கொடிய பழக்கத்திற்கு ஆளாகிப் போனேன் என்பதை நான் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்... ஒரு நாள் சாப்பாட்டுக் கடைக்கு அருகில் இந்தப் பயலைப் பார்த்தேன். அடுத்த நாள் மீண்டும் அவனைக் கண்டேன். சின்னப் பயல். அடேயப்பா, எப்படிப் பஞ்சைப் பயலாயிருந்தான் தெரியுமா இவன்! துணியெல்லாம் ஒரே கந்தல். முகமெல்லாம் தர்பூஸ் பழச் சாறும் தூசியும் அடை அடையாய் அப்பியிருந்தன. அழுக்கான அழுக்கில்லை. என்ன பார்க்காத போது எனக்கு ஏக்கம் வரத் தொடங்கியது. சீக்கிரமே சாப்பாட்டுக் கடைக்குப் போய் விரைவில் அவனைப் பார்க்க வேண்டும் என்பதற்காக லாரியோட்டும் வேலையைப் பரபரப் புடன் முடித்து விட்டு ஓடுவேன். சாப்பாட்டுக் கடைக்கு வருபவர்கள் தருவதைத் தின்று வயிற்றை நிரப்புவான் அவன்.

“நான்காம் நாள் அரசாங்கப் பண்ணையிலிருந்து லாரியில் தானியத்தை ஏற்றிக்கொண்டு அப்படியே நேராகச் சாப்பாட்டுக் கடைக்கு முன்னே கொண்டுபோய் நிறுத்தினேன். இந்தச் சின்னப் பயல் அங்கே படிக்கட்டில் உட்கார்ந்து கால்களை ஆட்டிக் கொண்டிருந்தான். பயலுக்கு நல்ல பசி என்பது அவன் பார்வையிலேயே தெரிந்தது. பார்த்தேன். ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி, “டேய், வான்யா! இங்கே வாடா, வண்டிக்குள் குதித்தேறிக் கொள். உன்னைக் களஞ்சியத்துக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன். பிறகு இங்கே திரும்பவும் வந்து நல்ல சாப்பாடு சாப்பிடுவோம்” என்று சொல்ல, தலைமயிர் பம்பையாய்க் கலைந்து முகமெங்கும் கிடந்தது. ஆனால் அவன் கண்கள் மட்டும் மழை பெய்து விட்ட பிறகு வானில் தெரியுமே விண்மீன்கள், அவை போலப் பளிச்சிட்டன. அவனிடத்தில் எனக்கு மிகுந்த பற்று விழுந்து விட்டது. சொன்னால் வேடிக்கையாகக் கூடத் தோன்றும், அவனைப் கூவினேன். எனது கூப்பாட்டைக் கேட்டுத் திடுக்கிட்டான் அவன். பிறகு படிக்கட்டிலிருந்த படியே தாவி நேரே லாரிப் படிமேல் குதித்தான். ஜன்னல் வரையில் எழும்பி நின்று கொண்டு, “என் பேர் வான்யான்னு உனக்கு எப்படித் தெரியும்?” என்று தாழ்ந்த குரலில் கேட்டான். என்னுடைய பதிலை எதிர்பார்த்து விண்மீன் போன்ற விழிகளைப் பரக்கத் திறந்தான். நான் சொல்லி வைத்தேன், “எனக்கு எல்லாம் தெரியும்” என்று.

“அவன் சுற்றிக் கொண்டு வலப்புறம் வந்தான். கதவைத் திறந்து அவனை உள்ளே வரவிட்டு என் பக்கத்தில் உட்கார்த்திக் கொண்டேன். நாங்கள் இருவரும் லாரியில் அப்பால் போனோம். அந்தச் சின்னப் பயல் எப்போதும் துரு துரு வென்றிருப்பான். ஆனால் இப்போது திடீரென்று அமைதியாகி விட்டான். நீண்டு நெளிந்த இமைகளை லேசாக நிமிர்த்தி அடிக்கடி என் பக்கமாக ஒருக்களித்துப் பார்ப்பதும் பெரு மூச்சுவிடுவதுமாக இருந்தான். இந்த வாண்டுப் பயலுக்கு அதற்குள் பெருமூச்சுவிடத் தெரிந்திருந்ததே! இதுவா அவன் செய்ய வேண்டிய காரியம்? “உன் அப்பா எங்கேடா, வான்யா?” என வினவினேன். “சண்டைக்குப் போனாரு. அங்கே செத்துப் போனாரு” என்ற மெல்லக் கூறினான். “அம்மா?”– “அம்மாவா, நாங்கள் ரயிலிலே போய்க்கிட்டிருந்தோம், பாரு. ஒரு குண்டு விழுந்தது. அம்மா செத்துப் போச்சு.- “எங்கேயிருந்து நீங்கள் ரயிலில் வந்து கொண்டிருந்தீர்கள்?”– “எனக்குத் தெரியாது. எனக்கு நினைவில்லை...” “உனக்கு உறவினர் ஒருவர் கூட இல்லையா?”– “இல்லை. ஒருத்தரும் இல்லை.”– “ஆனால் ராத்திரியில் எங்கே படுத்து உறங்குகிறாய்?”– “கிடைக்கிற இடத்திலே.”

தொடரும்....

## தேசம் பற்றிய கற்பிதங்கள்

சந்திரன் முழுநிர்வாணமான நாட்களில்
தேசம் பற்றிய கற்பிதங்கள்
நெஞ்சறைக்குள்ளே கூடிமோதி
எல்லாம் களைத்தது வாய்
மற்றொரு நாள் மோதலுக்கு
அடங்கி விடுகின்றன.

நான் எனக்குள்ளே
தேசம் பற்றிய நினைவலைகளை
சந்திர தினத்தில்
உடலை உப்புக்காற்று தடாவும்
கடலில் ஒலிகளுக்கிடையே
தொலைத்து விடாமல்
அதீத சிரமத்துடன் வளர்த்துக் கொள்வது
வழக்கு

இன்னுமென்ன
ஒரு தசாப்தமாய் இதையே செய்கிறேன்
எனக்குள்ளே மட்டுமது புதையுண்டால்
நாளைய என் தம்பி
இவ்வாறே வாழ்க்கையற்று
உயிருடன் நடமாட வேண்டிவரும்

விரைந்து செல்லென
குளிர் உவர் காற்று
உடலைத் தூண்டினாலும்
நல்லதொரு
பசுந்தரை உள்ளம் கிடைக்கும்வரை
என் விதைகளின்
கன்னித் தன்மை களையாது
காப்பாற்றுவேன்– என்
தேசம் பற்றிய கற்பிதங்களை.

பர்ஸான் முஹம்மத்.

# எமது கௌரவத்தினை காப்பாற்றுவதற்காக எந்த எல்லைக்கும் செல்ல நாம் தயார்

அடைக்கலநாதன் எம்.பி (டெலோ)

1990களில் அரச படைகள் வடக்கு கிழக்கில் பல பகுதிகளை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததன் பின் தமிழீழ விடுதலை புலிகளைத் தவிர ஏனைய தமிழ் குழுக்களுக்கு அரசு ஆயுதங்களை வழங்கியது. தொண்ணூறுகளின் முன் பிரமேதாச அவர்கள் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு அன்றைய ஐ.தே.க அரசு ஆயுதங்களை வழங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், தமது தற்பாதுகாப்புக்காகவும் பாவித்த இவ் ஆயுதங்கள், தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு பகுதிகளில் போட்டியிட்டு சில ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்கள் பாராளுமன்றம் வந்தன. அரசிடம் ஆயுதம் பெற்ற இத் தமிழ் குழுக்கள் அரசுக்கு சார்பாக பாராளுமன்றத்திலும் செயல்பட வேண்டும் என அரசு எதிர்பார்த்தது. சிலர் குழுக்கள் அரசசார்பாகவும் ஓரிரு அமைப்புகள் பாராளுமன்றத்திற்குள்ளேயும் வெளியேயும் அரசை எதிர்த்தன.

இம்மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நிலைமை மாற்றமடைந்தது. எந்தவொரு பெரும்பான்மைக் கட்சியும் அரசமைக்க முடியாத நிலைமை ஏற்பட்டது, அதன் காரணமாக சிறு கட்சிகளின் தயவை நாட வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்பட்டது. பாராளுமன்றத்திற்கு தெரிவான தமிழ் ஆயுத குழுக்களில் ஈபிடிபி நேரிடையாக அரசிற்கு ஆதரவு அளித்து செயல்பட்டு வருகின்றது. மற்றைய ஆயுதக் குழுவான தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) முற்று முழுதான அரசு எதிர்ப்பு நிலைப்பாட்டினை எடுத்துள்ளது.

இந் நிலைமை காரணமாக டெலோ இயக்கத்தின் ஆயுதங்களை கடந்த 19ம் திகதி வியாழக்கிழமை வவுனியா மன்னார் மட்டக்களப்பு பிரதேசங்களிலிலிருந்து இராணுவம் பறிமுதல் செய்தது; இவ் ஆயுதம் பறிமுதல் தொடர்பாக டெலோ அமைப்பின் முக்கியஸ்தர்களை வினவியபோது,

இவ்வாறு இந்த ஆயுதம் பறிக்கப்பட்டதன் உள் நோக்கம் என்ன?

தமிழர்களுக்காக குரல் தொடுப்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளா, அல்லது அரசுக்கு முண்டு கொடுக்கும் ஏனைய தமிழ் அரசியல் வாதிகளின் தூண்டுதல்களா?

அல்லது தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் இவர்களும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சந்தேக கண்ணா என்று பலரும் கேள்வி எழுப்புகிறார்கள். இதனை பற்றி செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கும் போது,

அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கெதிரான அரசியல் நடவடிக்கைகளையும், அவசரகாலச் சட்டத்தையும் எதிர்ப்பதால் தம்மை அடிப்பணிய வைப்பதற்கான ஒரு முயற்சியே இந்த நடவடிக்கை, நாம் எதிர் பார்த்த ஒன்று தான் இது. இதனையிட்டு நாம் ஒரு போதும், பயப்படப் போவதில்லை. ஏன் என்றால், மக்கள் எம்மை பெரும்பான்மை பலத்துடன் தேர்ந்தெடுத்துள்ளார்கள், அதே நேரம் இந்த ஆயுதங்களை விற்று பின்னர் எமது உறுப்பினருக்கு ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், ரெலோ இயக்க தலைவருமான செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்துள்ளார்.

ஆயுதக் களைவின் காரணமாக ரெலோ உறுப்பினர் எவராவது இறந்தால் இறந்தவரின் உடலை எடுத்து வந்து அலரி மாளிகையின் வாசலில் வைப்போம். இதனை விட வேறு வழி எமக்கு தெரியவில்லை, இறுதி சடங்குகளை அதிகாரத்தில் உள்ளவர்களே நடத்தட்டும், எமது கௌரவத்தினை காப்பாற்றுவதற்காக எந்த எல்லைக்கும், நாம் செல்ல தயார் என்றும் ஆயுதங்களைப் பறித்து எம்மை அச்சுறுத்துவதால் நாம் அரசை ஆதரிக்கும் நிலைக்கு தள்ளப்படுவோம் என எவரும் எதிர்பார்க்க வேண்டாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

**மணியம்.**




# பாரதி தமிழோசைக் கழகத்தின் கண்டனம்

யாழ் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் துணிவும், ஆற்றலும் மிக்க சர்வதேச தரம் வாய்ந்த ஒரு பத்திரிகையாளராகத் திகழ்ந்தார். வட பிரதேசத்தில் யுத்த சூழல் நெருக்கடிகள் நிறைந்த சூழலில் அவரது பேனாமுனை மக்கள் சார்பானதாகவே இருந்து வந்தது. மக்களது அவலங்களையும் மக்கள் விரோத செயற்பாடுகளையும் முடிந்த அளவுக்கு வெளி உலகுக்கு கூறுவதில் அமரர் நிமலராஜன் முன் நின்றார்.

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறை உண்மைச் சம்பவங்களை வெளிக்கொணரும் தமிழ் பத்திரிகையாளர்களை அராஜகத்தனங்கள் மூலம் கட்டுப்படுத்தலாம் என்ற நிலை முற்றாக மாற்றப்பட வேண்டும். இப்படியான கோழைத்தனமான படுகொலைகள் மூலம் உண்மையை ஒருபோதும் மறைத்து விட முடியாது.

இருண்ட, திறந்த வெளிச் சிறைச்சாலையாக்கப்பட்டுள்ள யாழ் மண்ணில் இடம்பெறும் அநீதிகள், மோசடிகளை செய்தியாளனுக்கே உரிய மூர்க்கத்தனத்துடன் எதிர்த்து நின்ற அமரர் நிமலராஜனின் எழுத்துக்களை, கருத்துக்களை நேர்மையுடன் நேரில் சந்திக்க வக்கற்றவர்கள் துப்பாக்கி கொண்டு படுகொலை செய்திருக்கின்றனர். இக் கொடூரச் செயலை மிக வன்மையாக நாம் கண்டிக்கிறோம்.

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரு இலட்சியப் போர் வீரனாக விளங்கி ஊடகங்களின் மூலம் தனது "பேனாமுனை" என்ற ஆயுதத்தால் "தமிழரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்" எனறு அதீத துணிவுடன் செயற்பட்டார். புதிய நூற்றாண்டு ஆரம்பமாகி 10 மாதங்கள் ஓடிவிட்டன. இக் காலப்பகுதியில் 12 பத்திரிகையாளர்கள் கடமையின் மத்தியில் இலங்கையில் கொலை செய்யப்பட்டுள்ளனர். அற்புதராஜா நடராஜா, ரோஹண குமார, இந்திக்க பத்திநிவாச, அனுரா பிரியந்த, அன்டனி மரியதாசன் ஆகியோர் கொலை செய்யப்பட்டமை கடந்த ஆண்டு உலகப் பத்திரிகைத்துறை அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை இப்பொழுது இன முரண்பாட்டு யுத்தத்தின் மத்தியில் "தரித்திரமான கொலைக்களமாக" மாறியுள்ளது. இந்தக் கொலைகளின் மத்தியில் பத்திரிகையாளர் கொலைகளும் பத்தோடு பதினொன்றாக நடந்தேறுகின்றன. ஆகவே, இப் படுகொலைச் சம்பவம் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அமரர் நிமலராஜனின் அகால மறைவினால் வாடும் அன்னாரின் குடும்பத்தினருக்கு நானும் எமது கழகமும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வர்ண, இளஞ்செழியன்,**

# மலையக மக்கள் முன்னணி கண்டனம்

பண்டாரவளையில் தடுதத்துவைக்கப்பட்டிருந்த அப்பாவி தமிழ் இளைஞர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருப்பது 1983 வெலிகட சிறையில் நடந்த படுகொலைகளை நினைவு படுத்துகின்றது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பொ.சந்திரசேகரன் ஜனாதிபதிக்கும், பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பி வைத்துள்ள அவசர தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இது சம்பந்தமாக உடனடியாக தலையிட்டு இவ்வாறு காயமடைந்த கைதிகளுக்கு தேவையான மருத்துவ சிகிச்சைகளையும் பாதுகாப்பினையும் வழங்கி மேலதிகமான இழப்புக்களை தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தனது தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்பாணத்துப் புனரமைப்பு என்பது இதுதானா?

யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

பிபி.சி. தமிழ் சிங்கள சேவையின் செய்தியாளரும், வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளருமான மயில்வாகனம் நிமல்ராஜன் மிகவும் கொடூரமான முறையில் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அமரர் நிமலராஜன் யாழ் குடாநாட்டில் படையினரதும் தமிழ்க் கட்சிகளதும் கொலைகள், கைதுகள், கற்பழிப்புக்கள், சித்திரவதைகள் மற்றும் அனைத்து ஊழல்களையும் துணிச்சலுடனும் நேர்மையுடனும் வெளியுலகிற்கு தெரிவித்து வந்தவர். யுத்தப் பிரதேசத்தில் அப்பாவி மக்கள் மனித கேடயமாக தடுத்து நிறுத்தப்பட்ட போது அதன் உண்மை நிலையினை உலகிற்கு அம்பலப்படுத்தியும் ஒரு பத்திரிகையாளன் என்பதற்கு அப்பால் ஒரு தனிமனித சமூக சேவையாளனாக நின்று இறுதிவரை அயராது மக்களுக்காக உழைத்தவர். துணிச்சலும் அஞ்சாத நெஞ்சமும் கொண்ட சிறந்த பத்திரிகையாளன். அநீதிகள், வன்முறைகள், பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாவர்கள் மீது இழைக்கப்படுகின்ற போது அதனை மிக சரியாக எதிர்கொள்ளக் கூடிய வகையில் சமூகத்தை வழிகாட்டி வந்தவர். இடம்பெயர்ந்த ஏழை மக்களுக்காய் தன்னாலான பணியினை மேற்கொண்டு வந்தவர்.

ஒட்டுமொத்தமான குடாநாட்டு மக்களின் ஜனநாயகத்தினை ஊடகத்துறை மூலம் பேணிக்காத்து வந்த ஒரு நேசக்குரல், அரசபடைகளின் ஆதரவுடன் அரசுக்கு சேவகம் செய்யும் ஒரு கட்சியினால் மிலேச்சத்தனமான முறையல் அணைக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டுக்கு அரச படைகளும் அதன் ஆதரவுக் குழு ஒன்றுமே முழுப்பொறுப்பு. கொழும்பு சுதந்திர ஊடகவியலாளர் இயக்கம் மேற்படி அரச படைகளுடன் அதன் ஆதரவுக் குழுவினாலேயே இக்கொடூரம் செய்யப்பட்டள்ளது என அறிக்கை வெளியிட்டிருப்பது யாழ் குடாநாட்டு மக்கள் மத்தியில் எழுந்தள்ள சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

இன்று அரசின் தமிழர் மீதான இன அழிப்பிற்கு பல வழிகளிலும் தன்னாலான பங்களிப்பினை செய்து வருகின்ற ஒரு ஆயுதம் தாங்கிய கட்சியே மேற்படி கொடூரமான காரியத்தினை செய்து முடித்துள்ளது.

அரசின் அவசரகால சட்ட நீடிப்பு, பயங்கரவாத தடைச்சட்ட நீடிப்பு, தமிழர் மீதான யுத்தத்திற்கான அரசின் பிரச்சாரத்துக்கு ஆதரவு தெரிவித்து வருகின்ற தமிழ்க்கட்சியொன்று மீண்டும் மக்களுக்கு மோட்சமளிக்கப் போவதாக மக்களிடமே வாக்கு அனுமதி பெற்று புனர் வாழி[ புனர் அமைப்புக்கான அமைச்சுப் பொறுப்பேற்ற ஓர் இரு தினங்களுக்குள் அதேமக்களுக்கு கைமாறாக மரணத்தினை பரிசளித்துள்ளனர். அதுவும் ஜனநாயக கருத்துச் சுதந்திரத்தினை நசுக்கி தொடரப்போகும் தமது பழைய அராஜகத்தினையும் அரசபடைகளின் இன அழிப்புச் செயற்பாட்டையும் உலகம் கண்டு கொள்ளாமல் மூடிமறைக்கவே பத்திரிகையாளர் நிமலராஜனை சுட்டுக் கொன்றுள்ளனர். அவரது குடும்பத்தினரையும் கொடூரப்படுத்தியுள்ளனர்.

வேலைவாய்ப்புக்கள், புனரமைப்புக்கள், சலுகைகள் என்பவற்றினை காட்டி எம்மினத்தினை ஏமாற்றி இவர்கள் மேற்கொண்டு வரும் பாரிய தேசத்துரோகச் செயல் ஒட்டு மொத்தமாக தமிழ் மக்களை அணுவணுவாக கொலை செய்கின்ற மிலேச்சத்தனமான செயலாகும். மோசமானதும் இரக்கமற்றதுமான கொலையை நாம் மிகவன்மையாக கண்டிக்கிறோம்.

நிமலராஜன் கொலையானது ஒரு ஜனநாயக குரலுக்கான பாதிப்பை மட்டுமல்ல, அவரது குடும்பத்தினரை கத்தியால் குத்தியும், இளம் சிறாரை குண்டுவீசித் தாக்கியும் தனது கொடூரமான கொலையில் அவர்கள் சுவை கொண்டுள்ளதையும், இனிமேல் மக்களுக்கு நடக்க இருக்கும் கொடூரத்தையும் அப்பட்டமாய் காட்டி நிற்கின்றது.

மீண்டும் தமிழ்க்கட்சிகளது ஆயுதகலாச்சார அராஜகம் குடாநாட்டில் அரசபடைகளின் அனுசரணையுடன் ஆரம்பித்துள்ளமை எமது இனத்தின் சாபக்கேட்டின் ஆரம்பமே, இவர்கள் தமிழ் மண்ணில் இருந்து முழுவதுமாக மக்களால் ஓரங்கட்டப்படும்வரை இந்தக் கொடூரம் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் உயிருக்கு ஊசலாட்டமாக இருக்கும்.

# சிந்திக்க முல்லாவின் கதைகள்



## மங்களச் செய்தி

அந்த கிராம மக்களுக்கு ஒரு பழக்கம். மங்களச் செய்தியைக் கூறுபவர்களுக்கு அவ்வூர் மக்கள் மகிழ்ந்து சன்மானங்களை வழங்குவார்கள்.

ஒரு நாள் கூட்டம் அதிகமாகவுள்ள சந்தைக்கு முல்லா வந்திருந்தார். இதுவரை யாரும் அங்கு மங்களச் செய்தியை அறிவிக்கவில்லை என்பதை அறிந்தார்.

"அன்புமிக்க பொதுமக்களே! உங்களுக்கு ஒரு மங்கள வார்த்தையை அறிவிக்கப் போகிறேன்" என்று அறிவித்தார். உடனே அங்கு மக்கள் மகிழ்ச்சியோடு கூடினார்கள்.

சன்மானங்களைத் திரட்டினார்கள். ஒரு பெரியவர் அவற்றை எல்லாம் சேர்த்து முல்லாவிடம் கொடுத்தார்.

மங்களச் செய்தியை அறிய மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். ஆனால் முல்லா சன்மானங்களையே எண்ணிப் பார்த்தபடி முட்டை கட்டினார்.

ஊர்ப் பெரியவர் முல்லாவின் அருகில் சென்று "முல்லா அவர்களே! இன்னும் மங்களச் செய்தியை அறிவிக்கவில்லையே" என்று நினைவூட்டினார்.

உடனே முல்லா சுதாகரித்துக் கொண்டு, "என் இனிய சகோதர சகோதரிகளே! உங்களுக்கு நான் சொல்லப் போகும் மங்களச் செய்தி மகிழ்ச்சியை அளிக்கட்டும். நான் ஒரு மகனுக்குத் தந்தையாகியுள்ளேன் என்றார்.

## சொன்ன சொல் மாறாதவர்

"முல்லா, உமக்கு இப்பொழுது வயது என்ன?" என்று அவர் எநண்பர் கேட்டார்.

"நாற்பது வயது" என்றார் முல்லா.

"என்ன முல்லா, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னும் நான் வயதைக் கேட்போது நாற்பது என்றீர். இப்பொழுதும் அதையே சொல்கிறீரே" என்றார் நண்பர்.

"நான் சொன்ன சொல் தவறாதவன். இன்றைக்கு ஒரு பேச்சு, நாளை ஒரு பேச்சு என்பது என்னிடம் இல்லை. எப்பொழுதும் ஒரே பேச்சுதான்" என்றார் முல்லா.

## தற்பெருமை

பெரியவர்கள் பெரும்பாலும் மாலை நேரங்களில் முல்லாவின் வீட்டுத் திண்ணையில் வந்து ஓய்வெடுத்தபடி ஊர்ச் செய்திகளைப் பேசி பெருமைப்படுத்திக் கொள்வது வழக்கம்.

அன்றும் ஒவ்வொருவரும் தன் பெருமைகளையும், வீர தீரச் செயல்களையும் அள்ளி வீசிக் கொண்டிருந்தனர்.

முல்லாவும் தன் வீர தீரச் செயல்களைப் பற்றி அளந்து விட்டுக் கொண்டிருந்தார்.

"ஒரு முறை நான் பாலைவனத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது திடீரென ஒரு கொள்ளைக் கூட்டம் என்னைச் சுற்றி வளைக்க முயற்சித்தது. நான் அவர்களுக்குச் சளைத்தவனா? என்னைக் கண்டதும் அவர்கள் பயந்து ஓடினார்கள் என்றால் பாருங்களேன்" என்று முல்லா பெருமையடித்துக் கொண்டார். அவர்களில் ஒரு பெரியவர் கேட்டார், "நீங்கள் தன்னந்தனியாகவா அவர்களைப் பயந்தோடச் செய்தீர்கள்?"

"அது என்ன பிரமாதம்! மிக மிக எளிதான காரியம் தானே! கொள்ளைக் கூட்டத்தைக் கண்டதும் நான் விழுந்தடித்துக் கொள்வது போல் ஓடினேன். அவர்களும் என்னைப் பிடிப்பதற்காக ஓடிவந்தார்கள்" என்று பதில் சொன்னார்.

## வயது வித்தியாசம்

நண்பர் ஒருவர், என்ன முல்லா, உமக்கும் உன் தப்பிக்கும் எவ்வளவு வயது வித்தியாசம்?" என்று கேட்டார்.

"அவன் என்னைவிட இரண்டு வயது இளையவன்" என்றார் முல்லா.

"என்ன ! உம் தம்பி ரொம்ப இளையவன் என்றல்லவா நினைத்தேன், இரண்டு வயது வித்தியாசம் என்பது நம்ப முடியவில்லையே?" என்றார் நண்பர்.

"நான் ஒன்றும் பொய் சொல்லவில்லை. ஆறு ஆண்டுகளுக்கு முன், என் தம்பி யாரிடமோ சொன்னானாம், எனக்கும் என் அண்ணனுக்கும் எட்டு வயது வித்தியாசம் என்று".

"இப்பொழுது நீங்களே கணக்குப் போட்டு பாருங்கள். அவன் சொல்லி ஆறு ஆண்டுகளாகிவிட்டது. இரண்டு ஆண்டுகளே பாக்கி" என்றார் முல்லா.

---

# பாரதியின் வரலாறு



## காந்திப் பசு

தென் ஆப்பிரிக்காவிலும், பிஜியிலும் வேறு பல கண்காணா நாடுகளிலும் இந்தியர்கள் பட்ட கஷ்டங்கள் பாரதியை வாட்டின. அந்நாடுகளின் செழிப்புக்காக உழைத்த இந்தியர்கள், மரியாதை இன்றியும், தக்க வருவாய் இன்றியும் வாடுவதை அவர் பல குறிப்புகளில் எடுத்துக் காட்டினார்.

அக்காலத்தில் தென் ஆப்பிரிக்க இந்தியர்களது உரிமைகளுக்காக பாரிஸ்டர் எம்.கே. காந்தி (மகாத்மா காந்தி) என்ற இளைஞர் சத்தியத்தையும், அஹிம்சையையும், தர்மத்தையும் கொண்டு போராடி வருவதைப் பாராட்டி பாரதி எழுதினார்.

தென் ஆப்பிரிக்க இந்தியர்களின் போராட்டத்துக்கு நிதி திரட்டி அனுப்பினார். பரிஸ்டர் காந்தியின் "சத்தியாக்கிரகம்" என்ற புதிய போராட்ட முறை பாரதியை மிகவும் கவர்ந்தது.

1909-ஆம் ஆண்டு பாரிஸ்டர் காந்தி தென் ஆப்பிரிக்க அரசாங்கத்திடம் இந்தியர்களது துயரங்களை எடுத்துரைத்தார். தென் ஆப்பிரிக்காவுக்கு திரும்பினால் கைது செய்துவிடுவார்கள் என்று தெரிந்தும், அவர் வலிய தென் ஆப்பிரிக்கா திரும்பினார் அங்கிருந்த வெள்ளை அரசு அவரைக் கைது செய்து சிறையில் தள்ளியது.

இதை ஒரு கார்ட்டூன் மூலம் எடுத்துக் காட்டினார் பாரதி. காந்தியை ஒரு பசுவாகவும், அவரைக் கைது செய்த வெள்ளை அரசாங்கத்தைப் பசுமீது பாயும் புலியாகவும் சித்தரித்தார்.

அந்த சித்திரத்திற்கு அவர் தந்த விளக்கம் சுவையானது. சித்திர விளக்கம் கூறியதாவது;

"முற்காலத்தில் நடந்த ஹிந்துக்களின் புராணங்களில் சொல்லியிருக்கும் விஷயம் அநேகருக்குத் தெரிந்திருக்கலாம். ஒரு காட்டில் புலியின் வாயில் அகப்பட்ட பசுவானது தன்னுடைய கன்றுக் குட்டிக்குப் பால் கொடுக்காமல் வந்து விட்டபடியால், புலியைப் பார்த்து, "ஹே பிரபு! இன்று என்னுடைய கடமையைச் செய்யாமல் வந்துவிட்டேன். என்னுடைய கன்றுக்குப் பால் கொடுக்கவில்லை. ஆதலால் நான் இப்பொழுதே போய் பால் கொடுத்து விட்டு வந்து உமக்கு இரையாகி விடுகிறேன். உத்தரவளிக்க வேணும்" என்றது.

"புலி நெடுநேரம் யோசித்து அதனுடைய சத்தியத்தைப் பரீட்சிக்கும் பொருட்டு போய்க் காரியமான உடனே வந்துவிடு என்று சொல்லி அனுப்பியது.

"பின்பு பசுவானது கன்றுக்குப் பால் கொடுத்துவிட்டு, அதைத் தன் சிநேகிதையான மற்றொரு பசுவிடத்தில் ஒப்புவித்து விட்டு, புலியினிடத்தில் வந்து, "என்னுடைய தர்மத்தைச் செய்து விட்டு வரும்படி உத்தரவளித்ததற்கு உமக்கு வந்தனமளிக்கிறேன். என்னைப் புசியும் என்றது.

"இதைக் கண்ட புலி ஆச்சரியப்பட்டு, "அம்மா, ஸத்திய தேவதையே, உன்னைப் புசித்துவிட்டு நான் எந்த நீசா கதிக்குப் போவேன்! நான் இதுவரைக்கும் செய்தது போதும்!" என்று சொல்லிப் பட்டினியிருந்து பிராணனை விட்டது.

"இப் பசுவைப் போல் நடந்து கொண்ட நமது ஸ்ரீ காந்தி பிரபுவை தென் ஆப்பிரிக்கா புலிகள் என்ன செய்கின்றன பார்த்தீர்களா? ஒன்றும் தெரியாத புலிகூட இந்துஸ்தானத்தில் தயையினுடைய பிரவாகத்தைத் தடுக்க முடியவில்லை. ஆனால் தென் ஆப்பிரிக்காவில் மனுஷ ரூபம் தரித்துப் புலியைப் பார்க்கிலும் கொடுமையாக (தங்களுக்கு உதவி புரிந்த) இந்தியர்களை நடத்தும் நாகரிக ஆங்கிலேயர்களை இக் கலிகாலத்தில் தான் காணலாம்."




"இந்தியா" பத்திரிகையிலிருந்து இன்னும இரண்டு கார்ட்டூன்கள்- வலப்பக்க கார்ட்டூன் (நரியும் காக்கையும்) மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் பற்றியது. கர்ஸன் நரி, மார்லி காக்கையைப் பார்த்து, "பாட்டுப்பாடு," என்கிறது. இடது பக்கக் கார்ட்டூன் தேசிய இயக்கத் தலைவர்கள் பலா அடக்குமுறைச் சட்டங்களின் கீழ் கைதானதைச் சித்தரிக்கிறது.

பாரதிக்கு 1905 முதலே அஹிம்சையிலும், சாத்வீகப் போராட்டத்திலும் நம்பிக்கை உண்டு. சில தீவிர தேசபக்த இளைஞர்கள் வெடிகுண்டு வீச்சாலும், ஆங்கிலேயரைச் சுட்டுக் கொல்லுவதாலும் நாட்டுக்கு விடுதலை பெறலாம் என்று நினைத்த காலத்தில், இந்த வழிகள் பாரதப் பண்பாட்டுக்கு விரோதமானவை என்று கண்டித்தவர் பாரதி.

## சென்னையில் செய்த விமானம்

இந்தச் சமயத்தில், சென்னையில் டாஞ்சலிஸ் என்ற பிரெஞ்சுக்காரர் தாமே ஒரு ஆகாய விமானம் உருவாக்கி, பல்லாவரத்தில் வெள்ளோட்டம் விட்டுப் பார்த்து, பிறகு சென்னை நகரில் ஐலண்டு கிரவுண்ட்ஸ் என்ற தீவுத் திடலில், கவர்னர் முன்பாக பொதுமக்களுக்குப் பறந்து காட்டினார்.

அமெரிக்காவில் ரைட் சகோதரர்கள் உலகின் முதல் ஆகாய விமானத்தைக் கட்டிப் பறந்து மூன்றரை வருஷத்துக்குள் செய்யப்பட்டது, சென்னை விமானம்! பிளீரியோ என்ற பிரெஞ்சுக்காரர் தாமே ஒரு விமானம் கட்டி, இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து பறந்தார். இதனால் தூண்டப் பெற்ற சென்னை பிரெஞ்சுக்காரர் டாஞ்சலி தாமும் விமானம் கட்டி வெற்றிகரமாகப் பறந்து காட்டினார். சென்னைப் பத்திரிகைகளில் செய்தியும் விமானப் படமும் வந்தன.


இச்செய்தியையும் விமானத்தின் படத்தையும் தமது "இந்தியா" வில் வெளியிட்ட பாரதியார், விமானம்கட்ட யோசனை சொன்னவர் பிரெஞ்சுக்காரர் என்றாலும், அதை ஸிம்ப்ஸன் கம்பெனிப் பட்டறையில் கட்டி முடித்தவர்கள் தமிழ் வேலைக்காரர்களே என்று பெருமைப்பட்டார்.

தொடரும்.............

# நூல் அறிமுகமும் விமர்சனமும்

## நானும் எனது நாவல்களும்

*கட்டுரைகள்*
*செங்கை ஆழியான்*
மல்லிகைப்பந்தல்
201- 1/1 ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு- 13.
விலை ரூபா 80.



இலங்கையின் நாவல் வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர் செங்கை ஆழியான், அறுபதுகளில் எழுத்துத் துறைக்கு நாவல் மூலம் அறிமுகமாகிப் பிரபல்யம் பெற்றவர், ஆரம்ப காலத்தில் பத்திரிகைகளின் தேவைக்கும், சாதாரண மட்ட வாசகனின் தரத்திற்குமென எழுத ஆரம்பித்து, படிப்படியாக சொல்லத்தக்க படைப்பாளியாக மாறியவர் செங்கை ஆழியான். இப்போது தன்னுடைய நாவல்களில், கால ஒழுங்கு, களம், சிறப்பியல்பு என்பவற்றை ஒரு வலாற்றுப் போக்கோடு எழுதியிருக்கிறார்'

முதல் அத்தியாயத்தில் இலங்கையின் நாவல் வளர்ச்சியைப் பற்றி சுருக்கமாகவே குறிப்பிடுகின்றார். ஏனைய அத்தியாயங்களில் தான் எழுதி அச்சில் வந்ததும் வராததுமான முப்பத்து நான்கு நாவல்கள், இவற்றின் தோற்றத்திற்கான தனம், பாதிப்பு, இவற்றிற்கு சமமான ஏனைய படைப்பாளிகளின் ஆக்கங்கள், தனது இலக்கியக்கோட்பாட்டு முறைகள் என்பன பற்றி விரிவாகவே சொல்லுகின்றார். இந்த விதத்திலே "செங்கை ஆழியான்" என்ற படைப்பாளியின் சுயவரலாற்று ஆவணமாகவும் இது ஆகிவிடுகின்றது. இலக்கிய ஆர்வலர்கள், திறனாய்வாளருக்கு அவர் பற்றிய பல தகவல்களை ஆதார வடிவாக இந்த நூல் கொடுத்து உதவுகின்றது. அவ்விதத்தில் இது நல்வரவே. இலக்கிய மாணவர்களுக்கு கைநூலாக உதவக்கூடிய இந்த நூலில் குறிப்பிடத்தக்க சில விடுபாடுகள் உள்ளன. இலங்கை நாவல்வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நாவல்களை எழுதியுள்ள அ.ந.கந்தசாமி (மனக்கண்) கோகுலம் சுப்பையா (தூரத்துப் பச்சை) யோ.பெனடிக்ற்பாலன் (சொந்தக்காரன், குட்டி) காவலூர் ராசதுரை (வீடுயாருக்கு) கனக. செந்தில்நாதன்(விதியின்கை) செம்பியன் செல்வன் (நெருப்பு மல்லிகை) ஸநீறா காலிதீன் (ஒரு தீபம் தீயாகிறது) அங்கையன் கயிலாசநாதன் (செந்தனணல், கடற்காற்று) மாத்தளை சோமு (மூலஸ்தானம்) ஆகியோர் எந்தக் காரணமுமின்றி விடுபட்டுள்ளனர். இது போலவே புலம் பெயர்ந்த படைப்பாளிகளான இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், தேவகாந்தன், கருணாகரமூர்த்தி ஆகியோரும், இலங்கையரும், கோவிந்தனும் இலங்கை நாவல் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க வளம் சேர்த்தவர்கள். இவர்களை செங்கை ஆழியான் மறந்து போனது ஆச்சரியமே. செங்கை ஆழியானின் பல இலக்கியக் கருத்துக்கள் தவறானவை. விவாதத்துக்கு உரியவை. திருத்திக் கொள்ளவும் தக்கவை.

இலங்கையின் வட பகுதியில் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களிலும், எழுத்து முயற்சியிலும் ஈடுபட்டவர்களில் கே. டானியல் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர். மூர்க்கமான ஒடுக்குமுறைகளுக்குள்ளான மக்களுக்கு சார்பாக முற்போக்குத்தளங்களிலிருந்து பல படைப்பாளிகள் போராட முன்வந்தனர். குறிப்பாக 1966க்குப் பின் இது கூர்மையுற்றது. இதன் உச்சங்களில் ஒருவர் டானியல். அவரைப்பற்றி செங்கை ஆழியான் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "செ.கணேசலிங்கன் தனது நாவல்களில் யாழ்ப்பாண சமூகத்தின் பல்திற மக்களை ஆக்கவிலக்கிய கர்த்தாவின் சமநிலை தழம்பா நிலையில் சித்தரிக்க, டானியல் பஞ்சமர்களுக்செதிராகத் தொழிற்பட்ட பாத்திரங்களை மட்டுமன்றி பாத்திரங்கள் சம்பந்தப்பட்ட சமூகம் முழுவதையும் காறி உமிழ்கிறார்"

இதில் "ஆக்கவிலக்கிய கர்த்தாவின் சமநிலை தழம்பா நிலை" என்பது என்ன? சுரண்டலும் ஒடுக்குமுறையும் நிறைந்த சமூக வாழ்வில் ஒடுக்குபவனையும், ஒடுக்கப்படுபவனையும் சமநிலை தழம்பாமல் பார்க்க முடியுமா? நடுநிலை என்பதும் ஒரு பக்கச் சார்புதான். இன்னும் சொன்னால் இது மிகவும் பிற்போக்கான நிலைப்பாடு. கே. டானியல் தனது சித்தாந்த அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களோடு நின்று அவர்களுக்காக எழுதியவர். அந்தக் கோபத்தில் நியாயம் இருந்தது. உண்மை தொனித்தது. எனவே சமநிலை தழம்பாத எழுத்தென்பது பாசாங்குத்தனமானதென்பதை வாதிட்டு நிறுவவேண்டியதில்லை.

இன்னொரு இடத்தில் சோமகாந்தனின் நாவல் வெற்றிபெறத் துணையானதற்கு அவர் பிராமண தலித்தாக இருந்ததே காரணம் என்கிறார். இதை விட நகைப்பிற்குரிய வாக்கு மூலம் வேறென்ன? அதென்ன பிராமண தலித்? தலித் என்ற மகா ராஷ்டிர வார்த்தைக்கு அர்த்தம் என்ன? ஒடுக்கப்பட்டவர்கள் என்பதே இதன் அர்த்தம். வர்க்க அடிப்படையில் கீழ்த்தட்டிலுள்ள பிராமணமக்கள் ஏழைகளாக இருக்கலாம். ஆனால் சமுதாய அமைப்பில் அவர்களின் பாத்திரம் அப்படியானதல்ல. சாதி அமைப்பையே மீறி, பூணூலை கழற்றி வீசி எறிகிற பாரதியைப் போன்றவவன் முற்போக்காளன். மேன்மையான மனிதன்.


பூணூலை வெளியே தெரியவிட்டு தன் சாதியை அடையாளப்படுத்தி மேன்மை பெற விழைகின்றவன் எதற்குள் அடக்கம்? இது போலவே தகப்பனின் பெயரோடு ஐயர் பெயரைச் சேர்த்து தனது பெயரை வெறும் பெயராக எழுதுவது எத்தகைய குரூரம்! உயர்சாதிக்காரன் ஒருவன் தன் பெயரோடு சாதியையும் சேர்த்தெழுத்துவது தன்னை உயர்ந்த சாதியானவனாகவும் மேல்மட்ட மனிதனாகவும் காட்ட. ஒடுக்கப்பட்டவன் தனது சாதிப்பெயரை உரத்து ஒலிப்பது, தான் ஒடுக்கப்பட கொடுமையைக் கூறி அதிலிருந்து விடுபடும் போர்க்குணத்தைக் காட்ட. எனவே செங்கை ஆழியான் தப்பிதமான கருத்தோட்டத்தை ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுக்குள் திணிக்க வேண்டாம்.

செங்கை ஆழியானின் இலக்கியக் கோட்பாடு பற்றிய சிந்தனை மிகவும் பழமைவாய்ந்த, காலாவதியான கருத்து. அவர் சொல்கிறார்; "கோட்பாட்டு வரையறைக்குள் நின்று கொண்டு சமூகத்தைப் பார்ப்பதில் எனக்கு உடன்பாடில்லை. சமூகத்துள் நின்று கொண்டு அச்சமூகப் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் தீர்ப்பதற்கும் உன்னதமான சமூகத்தை உருவாக்குவதற்கும் கோட்பாடுகளை வரையறை செய்வதில் எனக்கு நம்பிக்கையுண்டு" இன்றைய சமூகவியல் போக்கும். மக்கள் இலக்கியத்தை வலியுறுத்தும் சித்தாந்தமும் செங்கை ஆரியானின் கருதுகோள் அறிவியல் கோட்பாடுகளுக்கு முரணான தனிமனிதக் குரல் என்பதை உறுதியோடு நிரூபணமாக்கும்.

செங்கை ஆழியானின் நாவல் எழுத்து வளர்ச்சி எமது படைப்பிலக்கியத்தில் இந்நூல் மூலம் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இலக்கிய வரலாற்றாளருக்கு இது உசாத்துணை நூலாக அமையும். ரமணியின் அட்டையும் நூலமைப்பும் சிறப்பானவை.

## ஒரு தீபம் தீயாகிறது

*நாவல்*
*ஸனீறா காலிதீன்*
முஸ்லீம் மகளிர் கல்லூரி வெளியீடு
களுத்துறை தெற்கு
விலை ரூபா- 90




சென்ற 10 ஆண்டுகளில் வெளியான சிறந்த நாவல்களில் ஒன்றாக "ஒரு தீபம் தீயாகிறது" ஆக்கத்தினைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

ஸனீறா காலிதீனின் முதல் எழுத்தே இதாயினும் முதிர்ந்த நாவலாசிரியைக் குரிய சகல தகுதிகளும் இந்தப்படைப்பிலே செறிந்திருக்கிறது. பெண் வாழ்வு பற்றிய பெண்ணின் பார்வை மிகவும் தீட்சண்யமான யதார்த்தத்துடன் பதிவாகியிருக்கின்றன.

இன்றைய பெண்வாழ்வை, பெண்ணியக் கோட்பாட்டை மேல் மட்டத்தில் இருக்கின்ற பெண்களே எழுதியும், தீர்மானமாகவும் வெளியிட்டு வரும் நிலைமை பெரும் அளவிலே காணப்படுகிறது. இவர்கள் வேரற்ற சித்தாந்தங்களை விளக்கமாய் உறுதிப்படுத்துகின்றார்கள். ஆனால் நாளாந்த வாழ்விலேயே பன்முகங்களிலே போராடிவருகின்ற பெண்ணின் வாழ்க்கையை, இதே மட்டப் பெண்படைப்பாளிகளாலேயே இயல்பாகவும் யதார்த்தமாகவும் எழுத முடியும். இதை ஸனீறா சிறப்பாகச் சாத்தியப்படுத்தியுள்ளார்.

ஸனீறா இன்றைய பெண் உலகைப் பற்றி பின்வரும் நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். "சமூகத்தில் எந்த வகுப்பினரை எடுத்து நோக்கினாலும் அங்கே பெண்ணுக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகும். பெண் உயர்ந்த அந்தஸ்திலிருந்தாலென்ன... தாழ்நிலையிலிருந்தாலென்ன... அவள் சமூகத்தின் பார்வையில் ஓர் அற்பமே! அவள் தாயாக, சகோதரியாக, மகளாக மனைவியாக இருக்கலாம். அல்லது வேலைக்காரியாக எஜமானியாக மேலதிகாரியாக அமையலாம். எப்படிஇருந்த போதிலும் ஒன்றில் அவள் ஒரு பலவீனம் அல்லது கைப்பொம்மை அல்லது போகப்பொருள் அல்லது அமுதசுரபி மொத்தத்தில் அவள் சமூகத்தின் தேவைக்காக இயக்கப்படுகிற இயந்திரம்."


இது யதார்த்தமான நிலை. இந்தத் தளம் பற்றிய எதிர்க்குரலே ஸனீறாவின் நாவலாக வந்திருக்கிறது. மஸாயா என்ற பெண்ணின் கதை, இந்தச் சமூகப்பரப்பில் எவ்வாறு அலைகிறதென்பதை மனதை நோகவும், விசனப்படவும், சிந்திக்கவும் வைக்கும் விதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் சொன்னால் மஸாயாவை இன்றைய அவலமுற்று அவதிப்படும் வகைமாதிரிப் பாத்திரமாகவே நாம் சந்திக்க முடிகின்றது.

நாவலின் நடை கவித்துவமாக வாசகரை தம்மோடு வசப்படுத்திக் கொண்டு செல்லுகின்றது. அழகிய கோட்டுச் சித்திரங்கள் போல கண்ணெதிரேயே காட்சிகளை மானசீகமாகத் தோற்றுவிக்கிற சித்தரிப்புகள், ஒவ்வொரு பாத்திரமும் நமக்கு அறிமுகமானாற் போல பழகிச் செல்கிறார்கள். களுத்துறைப் பிரதேச வழக்கு, நடையுடைபாவனை, வாழ்க்கைமுறை, சூழல், பண்பாட்டு அம்சங்கள் என்பனவற்றை சொற்சித்திரங்களால் நாவலில் அழகாகப் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியை, நூற்றிநாலு பக்கங்களிலேயே வருகிற நாவலில் முழுமையான ஆக்கதிறனையே காணமுடிகின்றது. படித்து முடிக்கிற போது நீண்ட அனுபவ வெளிப்பாடோடு மனதினுள் எந்த வாசகனுக்கும் பெருமூச்சுத்தகிக்கும்.

நாவலில் விமர்சனம் அல்லது வாதத்திற்குரிய தன்மை இல்லையா? இருக்கிறது. அது மஸாயாவின் மரணம். "ஒரு மனிதனை அழித்து விடலாம். தோற்கடித்து விட முடியாது என்ற எர்னெஸ்ட் ஸெமிங்வேயின் கருத்து, படைப்பாளிக்கு ஒரு நெறி. மஸாயா தன் துணிவினால் வாழ்வை எதிர்கொள்ள வேண்டும். அப்படி இப்பாத்திரம் இயங்கியிருந்தால் முழுமை பெற்றிருக்கும். ஆதர்சமான வகைமாதிரிப் பாத்திரமாகவும் ஆகியிருக்கும்.

## மாரடைப்பு

*மருத்துவநூல்,*
டாக்டர் ஏ.சந்திரசேகரம்,
லிட்டில் பிளவர் சயன்ஸ்டிபிக் புக்ஸ்,
கொழும்பு.




மருத்துவத் தீர்வுகளும், மருந்துகளும் இன்று சாதாரண மக்கள் தொட முடியாத அளவுக்கு உயர்ந்து போயுள்ளன. இவ்வேளையிலே சாதாரண மக்களுக்கு மருத்துவ வழி முறைகள் ஆலோசனைகள் எட்டும் விதத்திலும் அவர்களுக்கு உதவுகின்ற முறையிலும் எழுத்தாலும் செயலாலும் பணியாற்றி வருகின்றவர் டாக்டர் ஏ. சந்திரசேகரம். மாரடைப்பு தடுப்பதற்கான வழிமுறைகளும் மருத்துவமும் என்ற அவரது நூல், அண்மைக்கால இருதயநோய் அதன் வெளிப்பாட்டுவிதங்கள் மாரடைப்பு உண்டாதவற்கு முன் அதைத்தடுக்க வேண்டிய வழிமுறைகள் என்பனவற்றை சாதாரண வ்ாசகன் எளிதாகவும், தெளிவாகவும் விளங்கத்தக்க விதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இதயநோய் சிகிச்சை நிபுணரான சின்னையா நரேந்திரம் இந்த நூலைப்பற்றிக் கூறும் பின்வரும் அபிப்பிராயம் முற்றிலும் சரியானதே;

"தமிழ் மொழியில் ஆங்கில நூல்களுக்கு இணையாக சர்வதேச தராதரத்தில் நவீன ஆய்வுகளைத் தொகுத்து இவ் ஆசிரியர் வழங்கியுள்ளமை மருத்துவ ஆய்வுகளைத் தமிழிலும் மிக அழகாக வெளியிடலாம் என்பதனை நிரூபித்துள்ளது. அழகான அமைப்பையும் ஆழமான கருத்துச் செறிவையும் உடைய இந்நூல் எழுதப்பட்ட குறிக்கோள்களுக்கு அப்பாலும் தனது செல்வாக்கை செலுத்தக் கூடியது. இச்சந்தர்ப்பத்தில் இந்நூல் வெளியிடப்படுவது தமிழ்ப்பேசும் மக்களுக்கு பெரிதும் பெறுமதி வாய்ந்த சேவையாகும் என்பதில் சந்தேகம் இல்லை."


இருதயக்கோளாறு, வலி, இதய அமைப்பு, இதயக் கோளாறுகளைத் தடுக்கும் நடைமுறை, உணவுவகைகள், இதனைப் பற்றிய உசாத்துணைநூல்கள், கட்டுரைகள் பற்றிய தகவல்களை நூலில் ஆசிரியர் முழுமையாகத் தந்துள்ளார். இவ்விதத்தில் தமிழில் இதுவரை வெளியான சிறந்த நூலாக இதைக் கொள்ளலாம்.

புத்தக அமைப்பு மிகச்சிறப்பானது. வாசிப்பதற்கு விருப்பை ஏற்படுத்தத்தக்க பக்க வடிவமைப்பு, விளக்கப்படங்கள், நுணுக்கமான பின்னிணைப்புகள், கட்டுரையின் தெளிந்த நடை என்பன ஆசிரியரின் மருத்துவத் துறைக்குவெளியேயான ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.

பயனுள்ள பெறுமதிமிக் நூல். எல்லா நூலகங்களிலும் தவறாமல் இடம்பெற வேண்டிய சிறப்புள்ள வெளியீடு.

## காத்திருப்பு

*நாவல்*
*தெணியான்*
பூபாலசிங்கம் புத்தகசாலை
340 செட்டியார் தெரு,
கொழும்பு- 11
விலை ரூபா- 40




"கழுகுகள்" நாவல் மூலம் பரவலாகவே அறிமுகமான தெணியானின் ஐந்தாவது நாவல் "காத்திருப்பு", முதல் நாவல் "விடிவை நோக்கி" வீரகேசரி வெளியீடு. பின்னர் "பொற்சிறையில் வாடும் புனிதர்கள்" "மரக்கொக்கு" என்பன. ஒடுக்கு முறைகள் சகலவற்றையும் எதிர்த்துக் குரல் கொடுப்பதே தெணியான் எழுத்துக்களின் அடிச்சரடு. இலட்சியம். சாதி ஒடுக்குமுறை, ஏழ்மை, அதிகாரத்துவ நிலைப்பாடுகளுக்கு எதிரானவை அவரது படைப்புகள். இப்போது இவற்றோடு புதிய தளம் அவரது "காத்திருப்பு" நாவலின் களமாகியுள்ளது.

சென்ற தலைமுறை கால யாழ்ப்பாணக் கிராமத்தின் கதை இது. ஒரு "காலநாவல்" என்ற விதத்தில் அந்தக் கால வாழ்வு, உறவுமுறை, பண்பாட்டுக் கோலங்கள், இறுக்க நிலை என்பனவற்றை வெகு யதார்த்தமாக தெணியான் "காத்திருப்பு" நூலில் தெளிந்த நடையும் பிரதேச வழக்கும் நாவலில் இயல்புத் தன்மைக்கு மெருகு சேர்க்கின்றன.

பாலியல் நூலாக இதை வகைப்படுத்தலாமா? வாழ்வின் அவலங்களில் இன்னொன்று பொருத்தமற்ற குடும்ப அமைப்பு, ஈஸ்வரி இந்தப் பொருத்தமற்ற சிக்கலுள் அகப்பட்டு உளவியல் ரீதியாகவும், உடல் கிளர்ச்சியாலும் அடையும் துயரையும் நிர்ப்பந்த முடிவையும் மிக நுட்பமான சித்தரிப்பு, நாவலின் முடிவு பற்றிய வாதப் பிரதிவாதங்கள் இருந்தாலும் கூட, இலங்கையின் ஆச்சரியப்பட்டத்தக்க அச்சுக்கலை வளர்ச்சிக்கு இன்னொரு உதாரணம் "காத்திருப்பு".

## வரப்பெற்றோம்

**கல்வி உளவியல் அடிப்படைகள்**
யோ. பெனடிக்ற்பாலன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
340 செட்டியார் தெரு,
கொழும்பு- 11.


**அங்கையன் கதைகள்**
அங்கையன் பதிப்பகம்,
எச் 1/2 அரசாங்க தொடர்மாடி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு- 4.
விலை ரூபா- 140

**தீர்வும் தீர்ப்பும்**
பேராதனை
ஏ.ஏ.ஜுனைதீன்
ஷாமிளா பதிப்பகம்,
21/2- சி மயூறா மாவத்தை,
நதிமாலா, தெகிவளை.
விலை ரூபா- 125

செ.யோ

# ஏர்னஸ்டோ சே குவேராவின் மோட்டார் சைக்கிள் டயறி

யமுனா ராஜேந்திரன்.



இந்தப் புத்தகம் வெளியாவதற்கு மூன்று மாதங்கள் முன்பாகவே லண்டன் "கார்டியன்" பத்திரிகை, குவேராவின் இன்னோரு முகத்தைச் சொல்லும் டயரி இதுவென கட்டுரையொன்றை வெளியிட்டது. "இன்டிபென்டென்ற் ஒன் சண்டே" தனது விமர்சன சிறப்பிதழை இப் புத்தகத்துக்காகவே ஒதுக்கியிருந்தது.

மது, பெண்கள், சரியற்ற அரசியல், அடுத்தவரது மனைவியரோடு குலவுதல், கறுப்பு மக்களைப் பற்றிய கீழான அபிப்பிராயங்கள் கொண்ட சேவின் மறுபக்கம் என டயறியில் சில பகுதிகளையும் பிரசுரித்திருந்தது. புத்தகத்தின் அட்டைக் குறிப்புக்களும் இப் பத்திரிகைகளின் கட்டுரைகளும் பொதுவாகவே இடதுசாரி அறிவாளிகள், புரட்சிக்காரர்கள் பற்றிய கடந்த கால தனிமனித வாழ்வு பற்றிய பிரச்சினைகள் பேசப்படும் போது ஏற்படும் விளைவுகள் பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

சேகுவேரா பற்றியதும் பல்வேறு புரட்சிக் காரர்கள் பற்றியதுமான பிரச்சினை என்பதால் இதைச் சுற்றியிருக்கும் பிரமைகளை உடைப்பது இக்காலகட்டத்தில் தேவை என்று நினைக்கத் தோன்றுகிறது.

பவுல் ஜோன்சன் இன்டலெக்சுவல் எனும் புத்தகம் பெனி போஸ்டர் அன்ட் இமுசன் சுடொன் தொகுத்த டாட்டர்ஸ் ஒவ் பேவயர் புத்தகம், கால்ஸ் மார்க்ஸ் பற்றிய என்கவுன்டர் கட்டுரை, றோஸா லக்ஸம்பர்க் பற்றி வந்திருக்கும்



லெடர்ஸ் ஒவ் ரோஸ் லக்சம்பேர்க் மாவோ நூற்றாண்டையொட்டி பிரிட்டிஷ் தொலைக் காட்சியில் திரையிடப்பட்ட, புத்தகமாக வெளிவந்த மாவோவின் அந்தரங்க மருத்துவரின் மாவோ பற்றிய நினைவுகள் போன்றவற்றைப் பற்றி இங்கு குறிப்பிடலாம். போல் ஜோன்சனின் புத்தகம் ரூஸோ தொடங்கி செல்லி, கார்ல் மார்க்ஸ், இப்சன், டால்ஸ்டாய், ஹெமிங்வே, பெர்டோல்ட் பிரெக்ட், பேர்ட்ரண்ட் ரஸ்ஸல், சார்த்தர், வில்சன், விக்டர் கோலான்ஸ், லிவியன் ஹெலன்மன் எனச் சென்று நோம்சாம்ஸ்கி நோர்மன் மெயிலர் வரை போகிறது.

கத்தோலிக்க அறவியல் அடிப்படையில் பாலுறவு, குடும்பப் பொறுப்பு, கற்பு, சுத்தம், உண்மை பேசல் போன்றவற்றின் அடிப்படையில் மேலே குறிப்பிட்ட அறிவாளிகளின் சீரழிவு, ஒழுக்கக்குறைவு, பொறுப்பின்மை பற்றிப் பேசுகிறது. ஜோன்சனின் இப் புத்தகம் முழுக்கவும் இடதுசாரிகள், கம்யூனிஸ்டுகள் மீதான தாக்குதலாகவே எழுந்தது.

இதே போல் ஜான்சன், அன்னை தெரேசா பற்றிய கிறிஸ்டோபர் ஹிட்சன் தொலைக்காட்சிப்பட விவாதங்கள் பற்றிய சந்தர்ப்பத்தில் மிகக் கேவலமான வசைகளுடன் இறங்குகிறார். கிச்சின்ஸ் தனது தொலைக்காட்சிப் படத்தில் தெரேசரின் மேற்குலக, ஏகாதிபத்திய, மனித உரிமை மீறல் சார்பு அரசியலை விமர்சித்திருந்தார். போல் ஜான்சன் தனது பத்திரிகைக் கட்டுரை ஒன்றில் தெரேசாவை சமப்பாலுறவாளர் என கிச்சின்ஸ் சொல்கிறார் என வசைபாடியிருந்தார். இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. கிச்சின்ஸ் தனது தொலைக்காட்சி நிகழ்ச்சியிலோ அல்லது அது பின்னர் கட்டுரையாகப் பிரசுரிக்கப்பட்டபோதோ அத்தகைய அவதூறு எதனையும் செய்ய வில்லை.

போல் ஜோன்சன் தனது மதம் சார்ந்த மனிதர்களை எவராவது விமர்சித்தார்களானால் மிகக் கேவலமான வசையில் இறங்குகிறார். அதேசமயம் இடதுசாரிகளின் சொந்த வாழ்வை கேவலமானது என சித்தரிக்கும் போது, கிறிஸ்தவ மத அறவியல்வாதியாக மாறிவிடுகிறார் இதே புத்தகத்தில் வரும் சார்த்தர் பற்றிய செய்திகள் தான் மாறுபட்ட வடிவத்தில் டோடர்ஸ் ஒவ் பேவயர் புத்தகத்தில் வருகிறது. சார்த்தருக்கு இருந்த பல பெண்களின் தொடர்பு, பூவாவைச் சித்திரவதை செய்தமை, சார்த்தருக்காக பூவா தன்னைக் காதலித்தவரை மறுத்தமை என விடயங்கள் வருகின்றன.

கார்ல் மாக்ஸ் அசுத்தக்காரன். வேலைக்காரியோடு பெற்ற மகனை கடைசிவரை பார்க்காது உதாசீனப் படுத்தியவர் என்ற விமர்சனம் போல் ஜோன்சனுடையது. மிகக் கொச்சையான இவ் விமர்சனம் நிராகரிக்கத்தக்கது.

கார்ல் மாக்ஸ் தனது மகனை மறுத்தது மட்டுமல்ல, ஹெலன் டெமூத் உறவை மறுத்தது மட்டுமல்ல, பொறுப்பை ஏங்கெல்சை ஏற்கச் செய்தார். என்கவுண்டர் கட்டுரை எலியானார் மார்க்ஸ் வரலாறு, பிரண்ட்ஸ் ஒவ் ஹய் கேட் செமட்ரி வெளியிட்ட மார்க்ஸ் பற்றிய பிரசுரம் முன்வைக்கும் வரலாற்று உண்மை இது. இது மனத்தடையற்று, ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மை.

றோசா லக்சம்பர்க் பற்றியும் இத்தகைய விமர்சனம் உண்டு. தன்னைவிடவும் மிக இளைய வயதுடைய கிளாரா ஜெட்கினின் புதல்வரோடு கொண்ட உறவு பிரச்சினைக்குரியதாகிறது. மாவோ "பெண்களை மதிக்கச் சொன்னார்" என புனிதப்படுத்துகின்றது. மாவோ தனது அதிகாரத்தின் கீழ் பெண்களைப் பாவித்தார் என்கிறார் அவரது மருத்துவர்.


வலதுசாரிகள், மதவாதிகள், ஒழுக்கவாதிகள் என்ன சொல்கிறார்கள் என்பதல் பிரச்சினை. இடது சாரிகள் மற்றும் மார்க்சீயவாதிகள் இதை எப்படி எதிர்கொள்கிறர்கள் என்பது தான். வலதுசாரிகள் கேவலமாக வசைபாடுகிற போது இவர்கள் அதிர்ச்சியுறுகிறார்கள். தாம் உருவாக்கி வைத்த புனிதம் கறைபட்டுப் போய் விடுவது போல கோபம் கொள்கிறார்கள். அத்தகைய சம்பவங்கள் ஏதுமே நடக்கவில்லை என்று பூசி மெழுகி அறத்தை, ஒழுக்கத்தை நிலைநாட்டு கிறார்கள்.

தமது கட்சிக்குள்ளேயே தமது அரசியல் எதிரிகள் என்று கருதுபவர்களை ஓரங்கட்ட இத்தகைய சந்தர்ப்பத்தை பயன்படுத்துகிறார்கள். காந்தி தனது சத்திய சோதனையில் மிக நேர்மையாக பாலுறவு தொடர்பாக எழுதி வைத்த விடயத்தை அரசியலாக்கி, கொச்சைப்படுத்துகிறார்கள். இதேமாதிரியான கொச்சை நிலைப்பாட்டைத்தான் நேரு-மவுன்பேட்டன் மனைவி உறவு தொடர்பாக எம்.ஒ. மத்தாய் புத்தகம் எழுதி பணம் சேர்க்கப் பயன்படுத்தினார்.

சேகுவாராவின் இந்த டயரி அவர் இறந்த 25 வருடங்கள் கழித்து வெளிவருவதற்கான காரணம் இடதுசரிகள் புரட்சியாளர்களாக மனிதர்களைப் புனிதப்படுத்துவது தான். உன்னத புருஷர்களாக, தேவ தூதர்களாகச் சித்தரிக்கும் மனவோட்டம் தான். கார்ல் மார்க்ஸ் ஜென்னி உறவை ராமன் சீதை உறவுக்கு ஒப்பிட்ட மார்க்சீய வாதிகள் அதிகம். இவர்கள் பலம், பலவீனம் நிறைந்த மனிதர்கள். பலம், பலவீனங்களை வாழ்ந்ததை, வாழவிருப்பதை கடந்து போனதை புதிய மனிதனுக்கான விழைவை அந்தந்த மனிதனின் வாழ்வை நிகழ்ந்தபடி வைப்பதே மனித விமோசனத்துக்கான ஒரே வழி. ஆஸ்கர் வைல்ட் சமப்பாலுறவாளர் என்பதற்காக தண்டிக்கப்பட்டதை எதிர்த்து பிரிட்டிஷ் நீதி அமைப்புக்கு எதிராக தற்போது சமபாலுறவாளர்கள் வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். தனது தள்ளாத வயதில் தான் தான் ஒரு சமபாலுறவாளர் என்று சொல்லிக் கொள்ள வேண்டிய நிலை கவிஞன் ஸ்ரீபன் ஸ்பென்டருக்கு நேர்ந்திருக்கிறது. டால்ஸ் டாயின் எழுதும், சரத்சந்தரின் தேடலும், காந்தியின் சத்திய சோதனையும், சார்த்தரின் புனித ஜேனேயும், றோசாவின் மூன்று காதலர்களுக்கான அவரது கடிதமும், ராகுல சாங்கிருத்தியாயனின் ஊர்சுற்றிப் புராணமும் மனித விடுதலையின் காயங்களை, கடைத் தேற்றங்களை, இழப்புக்களை, நேசத்தை தமக்குள் கொண்டிருக்கின்றன.

தன்னைப் புனிதனென்று கருதுகிற மனிதனே தனது ஆதர்சமனிதர்களையும் புனிதனென்பான். த லாஸ்ட் டெம்டேஷன் ஒவ் கிறிஸ்ட் நாவலை எழுதியவருக்கும் இயக்குநர் மாட்டின் ஸ்கோர்செசுக்கும் இயேசு கிறிஸ்து விலைமாதிடம் சென்றவர்; மணம் செய்து கொண்டவர்; குழந்தை பெற்றவர். சுவிசேஷ உபதேசகர்களைப் பார்த்து, "நீங்கள் பொய்யர்கள்; இயேசு கடவுள் இல்லை; மனிதன். அது நான்தான்" என்பவர்.

சேகுவேராவின் இப் புத்தகம், தனது வாழ்க்கை முரண்பாடுகளை தன்னளவிலேயே-தனது நடவடிக்கைகள் மூலமே கடந்துபோன ஒருவனின் டயரி.



தெருத் தெருவாக அலைந்து பட்டினி கிடந்து, மலைப்புழுதிகளில் விழுந்த சிராய்ப்புகளுடன் நடந்து நாள் முழுக்கக் குடித்து, அடுத்த குடியிருப்புகளில் இருந்த மூன்று பெண்களுடன் வேண்டுமென்றே உரையாடி, வாத்துகளைச் சுட்டுண்டு, எட்ரிநலின் ஏற்றிக் கொண்டு, போதையில் தள்ளாடி, மச்சுபிக் மலைக் குன்றுகளுகுப் போய் இன்பா மக்களின் போர்த் தந்திரத்தை வியந்து, வழியில் தென்படும் லாரி, டிரக் சாரதிகளிடம் கெஞ்சிக் கூத்தாடி இடம்பிடித்து, குளிரில் உறைந்து, பனிப் புல்லில் கிடந்து மரத்தில் கட்டிய ஊஞ்சலில் ஆடி, புரட்சிக்காரர்களோடு தொடர்பு கொண்டு, சுரங்கத் தொழிலாளர்கள் வறுமையோடு வாழ்ந்து, பூர்வகுடி இந்திய மக்களின் முடை நாற்றமெடுக்கும் உடுப்புகளை விமர்சித்து, கறுப்பு மக்கள் தொடர்ந்து குளிக்காததால் கறுப்பு நிறமாகிப் போனவர்கள் என கிண்டல் செய்து வட அமெரிக்கர்களை ஏளனத்துடன் பேசி, தொழு நோயாளிகளோடு உண்டு உறங்கி, அவர்களோடு விளையாடி, ஒரே ஒரு டொலரை வைத்துக் கொண்டு 30 நாட்களைப் பட்டினியில் கழித்து, கண் கண்ட இடத்திலெல்லாம் காட்டும் நதிகளில் குளித்து, அவ்வப்போது வழியில் தென்படுபவர்களிடமெல்லாம் இரந்து ஊர் ஊராக கால் தேய நடந்து நடந்து...

சேகுவேரா முரண்பாடுகளுடன் வாழ்ந்ததை, வளர்ந்ததை, கற்றுக் கொண்டதை இந்த டயறி சொல்கிறது.

கார்ல் மார்க்ஸுக்கு முன்னரேயே சேகுவேராவின் ஆதர்ச மனிதன் அல்பேட் சுவைட்சர் தான். தொழு நோயாளிகளுக்கு தொண்டு செய்யும் கனவை விதைத்தவன் அவன் தான். மோட்டார் சைக்கிள் டயறி எழுதிய அதே குவேராதான் பொலிவியன் டயறியையும் எழுதினான்.

இதே குவேராதான் ஆபிரிக்க நாடுகளின் ஆயுத விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்க ஆபிரிக்க நாடுகளுக்குப் போனவன். ஆபிரிக்க மக்களை நெஞ்சாரத் தழுவியவன். இலத்தீன் அமெரிக்க பூர்வ குடிகளுடன் உண்டு உறங்கியவன். கொங்கோவில் திரிந்தவன். ஆசிய, ஆபிரிக்க, இலத்தீனமெரிக்க மக்களின் ஒற்றுமைக்காக டிரை கன்டினென்டல் கன்வரன்ஸ் இல் முழங்கியவன்.

22 வயதில் குவேரா எழுதிய இந்த "மோட்டார் சைக்கிள் டயறி" யைப் படித்து முடித்தபோது, குவேரா பற்றிய மதிப்பு இன்னமும் அதிகரித்தது. உண்மையில், வாழ்வையும் மனிதரையும் நேசிக்கும் ஒவ்வொரு மனிதரின் பின்நாக்கிய நினைவுகளும், முரண்பாடுகளை உள்ளபடி மறுபரிசீலனை செய்கிற மனமும் இவ்வாறுதான் 'வெளிப்பட முடியும். ஜாதீய சமூகத்திலிருந்தும், நிறவெறி சமூக அமைப்பிலிருந்தும், காலனியாதிக்க சமூகத்திலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ள முயன்ற முயலும் மூன்றாம் உலக மனிதனொருவனின்- மத்தியதர வர்க்க மனிதனொருவனின் உள் முரண்களை சேகுவோராவின் மோட்டார் சைக்கிள் டயரி ஒருவருக்கு ஞாபக மூட்டக் கூடும். தன்னை எவ்வெவற்றிலிருந்து அறுத்துக் கொள்ள வேண்டும் என்கிற மறுபரிசீலனையையும் இது உணர்த்தும்

மங்கலான என் சுயசித்திரம் எனும் தனது கவிதையில் சேகுவேரா நமக்குச் சொல்கிறான்;

***நாடோடிகளின் சடங்குகளைச்***
***சுவீகரித்துக் கொண்டு***
***மைல்களைக் கடந்து***
***சிலுவையைப் போல என்***
***ஆத்மா உடம்புக் கூட்டைச்***
***சுமந்து கொண்டு***
***முரணான பிரதிமையோடு***
***வினோத இதயத்தோடு***
***நான் உங்களிடம் வருகிறேன்.***

தொடரும்............

இப் பத்திரிகை வரையறுக்கப்பட்ட ராவய பப்ளிஷர்ஸ் (கரன்ரி) நிறுவனத்தால் மஹரகம பிலியன்தல வீதி 83ம் இலக்க ராவய அச்சகத்தில் 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.